# யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி : தோற்றமும் வளர்ச்சியும்



சசிகலா குகமூர்த்தி

சேமமடு

# யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்

## WOMEN EDUCATION IN JAFFNA : ORIGIN AND DEVELOPMENT

சசிகலா குகமூர்த்தி

*கல்விப் பீடம்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.*

சேமமடு

சேமமடு பதிப்பகம்

**2012**

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | **யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்** |
| நூலாசிரியர் | : | சசிகலா குகமூர்த்தி © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 2012 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | xiv + 110 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ.260.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11. தொ.பே: 0777 345 666/ 071-2726778 |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை, யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11. தொ.பே:011-2472362, 2321905. |
| **ISBN - NO** | : | 978-955-685-017-8 |

| | | |
|---|---|---|
| Title | : | **Yalppanaththil Pen Kalvi: Thotramum Valarchium** |
| Author | : | Sasikala Kukamoorthy © |
| Edition | : | 2012 |
| Price | : | Rs.260.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai UG.50, People's Park, Colombo -11. T.P : 011-2472362, 2321905. |
| Printed by | : | Chemamadu Pathippakam, Colombo -11. T.P 0777 345 666/ 071-2726778 E-mail : *Chemamadu@yahoo.com* Web : www.Chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN :2012-12-04-118 |

# அணிந்துரை

பெண் என்ற எண்ணக்கரு உயிரியல் நிலை சார்ந்த இயல்பு மட்டுமன்றி சமூகக் கட்டுமைக்கும் (Construct) உட்பட்டு நிற்கின்றது. அவற்றுடன் இணைந்து மேலெழும் பெண்கல்வி சமூக அடித்தளத்தை (Base) அடியொற்றிய மேலமைந்த செயற்பாடாகின்றது. தனிச் சொத்துரிமை இடம் பெறாத பூர்விகப் பொதுவுடமைச் சமூகத்தில் பால் நிலை வேறுபாடுகள் அற்ற நிலையில் திட்டமிட்டு ஒழுங்க மைக்கப்படாத கல்விச் செயற்பாடுகளே இடம்பெற்றிருந்தன. அனுபவங்கள், வாழ்வியல் வினைப்பாடுகள் வாயிலாகவும் வாய்மொழி வாயிலாகவுமே தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்தன.

தனிச் சொத்துரிமைச் சமூக வளர்ச்சியோடு வரன்முறைக் கல்வி அல்லது முறைசார் கல்வி உருவாக்கம் பெற்றது. அதேவேளை கல்விச் செயற்பாடுகள் வர்க்க இயல்பினையும் பால்நிலை இயல்பு களையும் உட்பொதிந்து வளர்ச்சியுறலாயின. வர்க்க நிலையிலே முறைசார் கல்வி சமூகத்தின் மேட்டுக் குடியினருக்குரியதாயிற்று. பால் நிலையில் மேட்டுக் குடி ஆண்பாலாருக்காயிற்று. அந்நிலை யில் கல்வி அதிகாரத்தின் வடிவமாக உருப்பெற்றது.

அத்தகைய எழுகோலங்களை அடியொற்றியே பெண்களின் கல்வி வரலாற்றை நோக்க வேண்டியுள்ளது. குறியீட்டு நிலையிலே பெண்கள் தொடர்பான "ஏகவகைமை" (Stereotype) உருவாக்கம் பெற்றது. கல்வி, சமூகமயமாக்கல், சமூகப்பாத்திரமேற்றல்,

தொழிற்பிரிவு, குழந்தை வளர்ப்பு முதலியவை தழுவிய ஏகவகைமை கள் உருவாக்கம் பெற்றன. அவற்றின் நீட்சி பண்பாட்டுக் கோலங்களாக விரிவடைந்தன.

இந்நிலையில் வாழ்புலங்களையும், பண்பாட்டுக் கோலங்களை யும், மேலாதிக்கச் செயல்முறைகளையும் அடியொற்றிய வரலாற்று ஆய்வுகள் அறிகை நிலையில் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. வரலாற்று இயங்கியலோடு இணைந்த மாற்றங்களும், அபிவிருத்தி களும் கருத்தியலின் தொடர்ச்சிகளும் ஆவண நிலையிலும் ஆய்வு நிலையிலும் எட்டப்படவேண்டியுள்ளன. அத்தகைய ஒரு புலமைச் செயற்பாடு இந்நூலாசிரியரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியற் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்து யாழ்ப்பாணத்து பெண்கள் கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும் ஆவணங்களைச் சான்றாதாரங்களாகக் கொண்டு நோக்கப்பட்டுள்ளது.

கல்வி நிலையிலே பெண்கள் பற்றிய ஆய்வும், நோக்கும், மறுவாசிப்பும், பதினெட்டாம் நூற்றாண்டின் பிரித்தானியச் சூழலில் மேரிவூல்ஸ்ரோன் கிராப்டின் பெண்ணுரிமைக்குரலோடு எழுச்சியுறத் தொடங்கியது. ஆங்கிலக் கல்வி வாயிலாக இந் நாட்டில் உட்புகுந்த மக்களாட்சிவாதம், தாராண்மைவாதம், மார்க்சிய நெறி முதலியவை பெண் கல்வி தொடர்பான ஆய்வுகளுக்கு உற்சாகமளித்தன.

இலங்கைப் பலகலைக்கழக மரபில் பெண் கல்வி தொடர்பான ஆய்வுகள் பல நிலைகளிலே முன்னெடுக்கப்பட்டன. "பெண்ணியம்" தொடர்பான வினைப்பாடுகள் ஆய்வுகளின் கருத்தியல் வடிவங்களின் கூர்மைப்பாடுகளுக்கு வழியமைக்கத் தொடங்கின. அத்தகைய பின்புலத்திலே இந்த ஆய்வு மேற்கிளம்பியுள்ளது.

அறிமுகம், பண்டைய யாழ்ப்பாணத் தமிழ்மரபிலே பெண் கல்வி, போத்துக்கேயர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ் பெண் களின் கல்விமரபு மாற்றங்களும், ஒல்லாந்தர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ் பெண்களின் கல்விமரபு மாற்றங்களும்,

பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி நிலைமைகள் மற்றும் நிறைவுரை என்ற விளக்கத் தலைப்புகளில் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என்ற கால நியமப்பாடுகளை அடியொற்றியதாகவும், அவற்றுக்கு முன்னைய காலப்பகுதி தனித்த இயலாகவும் நோக்கப் பட்டுள்ளது.

அமைப்பு நிலை *(Structural)*, தொழிற்பாட்டு நிலை *(Functional)* என்றவாறு பிரித்து நோக்கப்படத்தக்கதும், ஒன்றிணைந்ததுமான செயற்பாடுகள் புலமைப்பயிற்சியிலே கருத்திற் கொள்ளப்பட் டுள்ளன. கிறிஸ்தவ திருச்சபையினரது நடவடிக்கைகளும், இந்து சமய மறுமலர்ச்சியுடன் இணைந்த கல்விச் செயற்பாடுகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்து எழுகுழாத்தினரின் *(Elites)* கல்வி நோக்கும் வினைப்பாடுகளும், இளைஞர் காங்கிரஸ் என்ற நிறுவன வழி எழுந்த நிகழ்ச்சிகளும் ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

"பெண்கள் தொடர்பான ஆய்வுகளைப் பெண்களே மேற்கொள்ளல்" என்ற பெண்ணிய முன்மொழிவு சமகாலத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. பால்நிலை இயல்புகள் புலக்காட்சியிலே செல்வாக்குச் செலுத்தும் என்ற பெண்ணிய உளவியல் வலியுறுத்தல்களும் திறனாய்வு நிலையிலே இணைத்து நோக்கப்பட வேண்டியுள்ளன.

ஆய்வின் ஒன்றுகூட்டிய தொகுப்பிலே ஆய்விலிருந்து மீண்டெழுந்தவற்றின் சாராம்சப்படுத்தல் இடம் பெற்றுள்ளது. ஆய்வு என்பது தொடச்சியானது, முடிவில்லாதது. மீள் வாசிப்புக்களை உள்ளடக்கியது. மேலும் இத்துறையில் நகர்ச்சியை விதந்துரைத்தி ருத்தல் நூலாசிரியருக்குரிய புலமை நோக்கினை முக்கியப்படுத்தி யுள்ளது.

ஆய்வுகளை நூலாக்கும் முயற்சி, வளர்ந்து வரும் தமிழியலை விசைப்படுத்தி நிற்கின்றது. பெண் நிலை தொடர்பான எழுத்தாக்கங்களின் வரவு, அந்த விசையூட்டலை மேலும் வலுப்படுத்துகின்றது.

புலமை நிலை, அனுபவ நிலை, ஆய்வு நிலை, அறிவுக்கையளிப்பு நிலை ஆகியவற்றுடன் இணைந்த இந்த நூலாசிரியர், மேலும் பல வெளியீடுகளைத் தரவேண்டுமென்ற எதிர்பார்ப்புக்களுடனும், வாழ்த்துக்களுடனும்...

**- சபா ஜெயராசா**

# என்னுரை

பெண் இனம் அனுபவிக்கும் அதிகளவான உரிமைகள் பலவகையான போராட்டங்களின் விளைவாகப் பெறப்பட்டவையே. பெண் இனத்தின் செயற்பாடுகள் பொதுவாக ஒரு சமூகத்தினால் பின்பற்றப்பட்டு வருகின்ற கலாசாரம், சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள், சமூக விழுமியங்கள் போன்ற பல கூறுகளால் சூழப்பட்டுக் கட்டுப்பாடுகளுடனேயே இடம்பெற்றுள்ளன. இந்தவகையிலே கல்வி கற்கும் உரிமைக்காகவும் பெண்கள் பல தடைகளைத் தாண்ட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டமையை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பெண்கள் தமது வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய வலுவான ஆயுதம் கல்வியே என்பதை நன்கு உணர்ந்துள்ளனர். கல்வியே தமது முன்னேற்றத்திற்கான வலுவான ஆயுதம் என்பதைப் பெண் இனம் என்று உலகநாடுகளில் உணரத் தலைப்பட்டதோ அந்தக் காலகட்டத்திலேயே யாழ்ப்பாணத்துப் பெண்களும் அதனை உணர்ந்து கொண்டனர். பண்டைய காலம்தொட்டு யாழ்ப்பாணத்துப் பெண்கள் தமது கல்வி அறிவினை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு படிகளைக் கடந்து வந்தனர் என்பதை மறுக்க முடியாதுள்ளது. பண்டைய யாழ்ப்பாணத்துப் பெண்கள் தமது கல்வி வளர்ச்சிக்காக நடந்து வந்த பாதையை இன்றைய சமூகத்திற்கு குறிப்பாகப் பெண் இனத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டிய தேவை உணரப்பட்டமையே இவ் ஆய்வுக்கட்டுரைக்கான அடிப்படை உந்துதலாக அமைந்தது.

"**யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும்**" என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் பண்டைய காலம் தொடக்கம் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் வரையிலான காலப்பகுதிகள் வரலாற்று ரீதியாகக் கவனத்தில் எடுக்கப்பட்டது. பண்டைய காலம், போத்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்தானியர் ஆட்சிக்காலம், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலமென்ற ஒழுங்கிலே யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வி தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டது. வரலாற்று ரீதியாக ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிலவிய சமூகக் கட்டமைப்பு, சமூகத்தின் விசேட இயல்புகள் என்பன கவனத்தில் எடுக்கப்பட்ட தோடு ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிலவிய சமூகக் கட்டமைப் பிலே பெண்களின் சமூக நிலை, கல்விக்கான வாய்ப்புகள், கல்வி அறிவு என்பன எவ்வாறு நிலைகொண்டிருந்தன என்பதை விளக்கு வதாகவும் இந்த ஆய்வு அமைந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா அவர்களது மேற்பார்வையில் இடம்பெற்ற இந்த ஆய்வுக் கற்கையானது பண்புசார் ஆய்வு அணுகுமுறையிலே வரலாற்று ஆய்வு வடிவத்தினைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை கல்வியில் முதுதத்துவமாணி பட்டத்திற்காக 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆய்வுக் கட்டுரை முழுமை பெறுவதற்குப் பலரும் பல வழிகளில் உதவி உள்ளனர். ஆய்வுக்கற்கைக்கான தலைப்பை வடிவமைத்து, கட்டுரை அமைய வேண்டிய ஒழுங்கமைப்பைத் தெளிவுபடுத்தி நெறிப்படுத்தியவர் மதிப்பிற்குரிய ஆசான் பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் ஆவார். சிறந்த அறிஞராகவும் ஆய்வாளராகவும் விளங்கும் இவரது ஆலோசனைகளும் ஊக்குவிப்புகளும் இவ்வாய்வு முழுமை அடைவதற்கு வாய்ப்பாக அமைந்தன.

ஆய்வு முழுமை பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பேராசான் பேராசிரியர் வ. ஆறுமுகம், பேராசிரியர் க. சின்னத்தம்பி ஆகியோர் என்றும் எனது நன்றிக்குரியவர்கள். ஆய்வின்

தேடல்களிலும் கருத்தாக்கங்களிலும் உதவிபுரிந்த மூதறிஞர்களாகிய மயிலங்கூடல் நடராசா, இணுவையூர் அ.வை. கதிர்காமநாதன் உபாத்தியார், வித்துவான் க. சொக்கலிங்கம், ஆசிரியமணி பஞ்சாட்சரம், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு முன்னாள் உபஅதிபர் செல்வி வடிவேலு ஆகியோர் நன்றியுடன் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆய்விற்குத் தேவைப்பட்ட விடயங்களை அணுகிக் கேட்ட பொழுது மனநிறைவுடன் ஆலோசனை வழங்கியவர்கள் பலர். பேராசிரியர் கலாநிதி சிவலிங்கராஜா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஆய்விற்கு தேவையான ஆதாரங்களை நிகழ்வுகளைத் தரவுகளாகவும் ஆலோசனைகளாகவும் வழங்கிய பெண்நிலைச் சிந்தனையாளர்கள் திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி சரோஜினி சிவச்சந்திரன், திருமதி செல்வி திருச்சந்திரன் ஆகியோர் நன்றிக்கு உரியவர்கள்.

ஆய்வுக்கான ஆலோசனைகளைக் கூறியும் நூல்கள் பலவற்றை தந்துதவியும் உற்சாகப்படுத்தியவர்கள் பலர். தேவைப்பட்ட நூல்களைத் தந்துதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு தமிழ் சங்கம், கொழும்பு பெண்கள் கல்விவட்ட ஆய்வு நிறுவனங்களைச் சேர்ந்த நூலகர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

ஆய்வுக்கட்டுரையினை நூல் உருவில் வெளியிட வேண்டுமென என்னை ஊக்குவித்தவர்கள் பலர். இவர்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் உபாலி விதானபத்திரன, இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருவாளர் தை. தனராஜ், செஞ்சொற் செல்வர் கௌரவ கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் நன்றியுடன் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் இந்நூல் முழுமை பெறுவதற்கு உதவிய தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.இரகுபரன் அவர்களுக்கு என்றும் என் நன்றிகள்.

இலங்கை திறந்த பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் உபாலி விதானபத்திரன அவர்கள் வரலாற்று ரீதியான தகவல்களை வெளியீடுகளாகப் பதிய வேண்டுமென குறிப்பிட்டுக் கூறியமையைக் கருத்திற்கொண்டு இந்த நூல் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலப்பகுதி வரையிலான விடயங்களை உள்ளடக்கிய வகையில் **"யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்"** என்ற பெயரில் வெளிவருகின்றது.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்து கல்விச்செயற்பாடுகள் 1945ஆம் ஆண்டு C.W.W. கன்னங்கரா அவர்களின் முயற்சியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்டது. காலத்திற்குக் காலம் அரசாங்கங்களது தேசிய கல்விக்கொள்கைகளுக்கு இணங்க எமது நாட்டின் கல்விச் செயற்பாடுகள் வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தேசிய கல்விக்கொள்கைகளுக்கு இணங்க யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வியும் வளர்ச்சி அடைந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமே. இதனால் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்து யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வி தொடர்பாக ஆராயப்பட்ட விடயங்கள் தவிர்க்கப்பட்ட வகையில் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

ஆய்வின் கருப்பொருளைக் கருத்திற்கொண்டு இந்நூல், 1.அறிமுகம் 2. பண்டைய யாழ்ப்பாணத் தமிழ்மரபில் பெண்கல்வி, 3.போர்த்துக்கேயர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும், 4. ஒல்லாந்தர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும், 5. பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி நிலைமைகள், 6.ஆய்வின் ஒன்று கூட்டிய தொகுப்பு என்ற ஒழுங்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனது கல்வி வளர்ச்சிக்கு பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை வித்திட்டு உரமிட்ட ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் தோள் கொடுத்த உறவுகளுக்கு என்றும் என் நன்றிகள். இந்நூலை அழகுற வடிவமைத்து அச்சுப்பதித்த சேமமடு பதிப்பகத்திற்கு எனது நன்றிகள்.

எனது கல்வி வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்த பாசத்திற்குரிய தந்தையார் சுந்தரம்பிள்ளை பாலசிங்கம், ஐயா வேலுப்பிள்ளை கதிரித்தம்பி, பாட்டி தங்கம்மா கதிரித்தம்பி, மாமனார் கந்தையா ஆறுமுகம் ஆகியோருக்கு இந்நூல் அர்ப்பணமாக்கப்படுகின்றது.

அன்புடன்

**சசிகலா குகமூர்த்தி**

# பதிப்புரை

சேமமடு பதிப்பகம் கல்வியியல் சார் நூல்களை அதிகம் வெளியிட்டு வந்துள்ளது. அந்த வகையில் இத்துறைசார் வெளியீட்டில் நமக்கு ஒரு தனித்துவமான அடையாளம் உண்டு. இந்த மரபின் இன்னொரு வெளிப்பாடாக "யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்" எனும் நூல் வெளிவருகின்றது.

நாம் வெளியிட்டு வரும் கல்வியியலின் பல்பரிமாணக் கோட் பாட்டு முறையியல் சார்ந்த நூல்களின் வரிசையில் இந்நூல் வித்தி யாசமானது. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்களின் கல்வி முன்னேற்றம் வளர்ச்சி தொடர்பிலான ஆய்வு நிலைப்பட்ட நூலாக வரலாறு ஆக்கம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் வாழ் புலங்களையும் பண்பாட்டுக் கோலங்களையும் ஊடறுத்து வெளி வரும் கல்வி மரபு, பெண்நிலை நின்று நோக்கும்போது புலப்படக் கூடிய தரிசனம் இந்நூலின் மையப் பொருளாகின்றது. இது பன்முக ஆய்வுக் களங்களையும் திறந்து விடுகின்றது.

இந்நூலை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கிய நூலாசிரியருக்கும் இந்நூலின் சிறப்பை எமக்கு எடுத்துக்கூறிய பேராசிரியர் சபா.ஜெயராசாவிற்கும் எமது நன்றிகள்.

113, சேமமடு
வவுனியா

அன்புடன்
பதிப்பாளர்
**சதபூ.பத்மசீலன்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | iii |
| | என்னுரை | vii |
| | பதிப்புரை | xii |
| 1 | அறிமுகம் | 01 |
| | 1.1 பெண் கல்வியின் முக்கியத்துவம் | 01 |
| | 1.2 பெண்நிலைச் சிந்தனைகள் | 04 |
| | 1.3 ஆய்வின் அடிப்படைகள் | 08 |
| 2 | பண்டைய யாழ்ப்பாணத் தமிழ்மரபில் பெண்கல்வி | 15 |
| | 2.1 பண்டைய யாழ்ப்பாணச் சமூகஅமைப்பு | 15 |
| | 2.2 பண்டைய யாழ்ப்பாணச் சமூகமும் பெண்ணும் | 18 |
| | 2.3 பாரம்பரியக்கல்வி மரபு | 24 |
| | 2.4 யாழ்ப்பாண அரசர்காலக் கல்வி மரபு | 27 |
| | 2.5 குருகுலக்கல்வி மரபு | 30 |
| | 2.6 புராணபடன மரபு | 32 |
| | 2.7 திண்ணைப்பள்ளி மரபு | 35 |
| | 2.8 பாரம்பரிய தொழிற்கல்வி மரபு | 39 |

| | | |
|---|---|---|
| | *2.9 பாரம்பரிய வைத்தியக்கல்வி மரபு* | 41 |
| | *2.10 பாரம்பரிய அழகியற்கல்வி மரபு* | 43 |
| ***3*** | ***போர்த்துக்கேயர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தழிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்*** | **46** |
| | *3.1 போர்த்துக்கேயரும் யாழ்ப்பாணமும்* | 46 |
| | *3.2 போர்த்துக்கேய மதகுழுவினரின் கல்வி நடவடிக்கைகள்* | 51 |
| ***4.*** | ***ஒல்லாந்தர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தழிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்*** | 57 |
| | *4.1 ஒல்லாந்தரின் கல்விச்செயற்பாடுகள்* | 57 |
| | *4.2 ஒல்லாந்தர்கால யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி நிலைமைகள்* | 60 |
| ***5*** | ***பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி நிலைமைகள்*** | **66** |
| | *5.1 பிரித்தானியர்கால யாழ்ப்பாணச் சமூகம்* | 66 |
| | *5.2 பிரித்தானியர் கால மிசனரிகளும் பெண்கல்வி நடவடிக்கைகளும்* | 73 |
| | *5.3 யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியில் சுதேசிகளின் பங்களிப்பு* | 94 |
| ***6*** | ***ஆய்வின் ஒன்றுகூட்டிய தொகுப்பு*** | **102** |
| | *உசாத்துணைகள்* | 106 |

# 1
# அறிமுகம்

## 1.1 பெண்கல்வியின் முக்கியத்துவம்

மனிதன் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுகின்ற ஒரு வலுவான கருவியாக கல்வி அமைகின்றது. காந்தியடிகள், "கல்வியென்பது உடலிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் ஆன்மாவிலிருந்தும் நல்லனவற்றை வெளியே கொண்டு வருவதற்கு உதவுகின்ற ஒரு முறை" எனக் கல்விக்கு விளக்கம் அளிக்கின்றார். மனிதன் தனது உடல், அறிவு, உணர்ச்சி ஆகிய மூன்றையும் சீரான முறையில் இயங்கச்செய்து, தான் வாழும் குடும்பம், சமூகம், நாடு என்பவற்றை முன்னேற்றப் பாதையிற் கொண்டு செல்வதற்கு கல்வியறிவு இன்றியமையாதது. இதனையே ரூசோவும் "நாட்டின் வளர்ச்சி மக்களின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் வளர்ச்சியடையும் போதுதான் நாட்டில் முழுமையான பரந்த வளர்ச்சி ஏற்படுகின்றது. சமுதாய வளர்ச்சி நாட்டின்மீது பற்றினை ஏற்படுத்த ஏதுவாகின்றது. எனவே தேசிய உணர்ச்சிக்குப் பரந்த பொதுக்கல்வி அவசியம்" எனக் குறிப்பிடுகின்றார்.

கற்கும் விடயங்கள் செம்மையான வாழ்க்கைக்கு பயன்படக் கூடியவையாக இருத்தல் வேண்டும். ஒழுக்கம், சிந்தனை விரிவாக்கம், மனவலிமை, தன்னம்பிக்கை போன்ற உயர் ஆளுமைசார்ந்த குணவியல்புகளை கல்விச் செயற்பாடுகள் வளர்க்கின்றன. மனிதன் தன் மனோசக்தியைத் தன்வயப்படுத்தி, தன் செயற்பாடு ஒவ்வொன்றையும் தனக்கும், தான் உறுப்பினராக இருக்கும் குடும்பம், சமூகம், நாடு என்பவற்றிற்கும் பயன்படுத்தத்தக்க முறையிற் செயற்படுத்துகின்ற பொழுதே கல்வியின் நோக்கங்கள் நிறைவு அடையும்.

வாழ்க்கை என்பது தனித்து குடும்பத்தின் நல்வாழ்விற்காக வாழ்வதுதான் என்ற குறுகிய நோக்குடன் அமையாது நாட்டின் விருத்திக்கு உழைப்பதாகவும் அமைதலே சிறப்பானதாகும். ஆண், பெண் இருபாலாரும் தாம் பெற்றெடுத்த குழந்தைகளை நாட்டிற்குத் தேவையான நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற பரந்த நோக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகைய ஒரு பரந்த நோக்கம் நிறைவு பெறுவதற்கு வாழ்க்கையில் பங்கேற்கும் ஆண், பெண் இருபாலாரும் அறிவைப் பெறுதல் வேண்டும்.

வேதாந்தம் எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருப்பதாகக் கூறுகின்றது. கல்வியின் சிறப்புப்பற்றி புறநானூறு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்"

பிறப்பில் ஒரே தன்மையாக ஒரே வயிற்றிற் பிறந்தவர்களிலும் கல்விச்சிறப்புள்ள பக்கம் தாயும் மனம் வேறுபட்டு விரும்பி நிற்பாள் என்பது இதன் கருத்தாகும்.

கல்வி புதிய விழுமியம் உடையதாகவும் மனித தத்துவத்தை வளர்ப்பதாகவும் செயற்பட வேண்டும். மனிதனை மனிதனாக வாழ வைக்க உதவும் அன்பு, இரக்கம், பரஸ்பர உதவி, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, பிறர் கருத்தை மதித்தல், பொதுநல நோக்கு போன்ற மனிதப்பண்புகளை கல்வி விருத்தி செய்வதால் நாம் வாழும் சமூகத்தை முன்னேற்றப் பாதையிற் கொண்டு செல்வதற்கு ஆண், பெண் இருபாலாருக்குமே கல்வியறிவு இன்றியமையாதது என்ற கருத்து வலுவடைந்து வருகின்றது.

கல்வி என்பது இன்றுநேற்றுத் தொடங்கிய முயற்சியெனக் கூறமுடியாது. என்று மனித இனம் உருவாகியதோ அன்றுதொட்டு கல்வியும் இடம்பெற்று இருந்ததென்பதை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து தன்

அறிவுக்கும், தேவைக்கும் ஏற்றவகையில் தான் வாழ்ந்த சூழலை மாற்றியே வந்துள்ளான். காலமாற்றத்துடன் தேவைகள் அதிகரித் துள்ளன. இத்தேவைகளை நிறைவேற்ற தான்வாழ்கின்ற சூழலை யும், தன்னைச்சூழவுள்ள இயற்கைச் செல்வங்களையும் பயன்படுத்த முனைந்த மனிதன், கல்வியின் நோக்கங்களையும் காலமாற்றத்துடன் மாற்றியமைத்துக் கொண்டான் என்பதைக் கல்வி வரலாறு காட்டி நிற்கின்றது.

காலமாற்றங்கள் கல்வியின் நோக்கங்களில் மட்டுமல்லாது அந்நோக்கங்களின் மூலம் அடைய விரும்பிய எதிர்பார்ப்புக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையிலே பெண்களது கல்வியறிவு தொடர்பாகவும் காலமாற்றத்துடன் காலத்திற்குக் காலம் பல முன்னேற்றமான சிந்தனைகள், நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன.

மனித இனத்தின் இரு பங்காளிகளாக ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர். இவ்விரு பங்காளிகளுக்கும் கல்வியில் சமவாய்ப்பு களை வழங்குகின்ற பொழுதே குறிப்பிட்ட சமூகம் முன்னேற்றப் பாதையிற் செல்லக்கூடியதாக அமையும். பல்லினச் சமூக அமைப்பி னைக் கொண்டுள்ள ஒரு நாட்டிலே ஒவ்வொரு சமூகமும் தன் இனம், மொழி, மதம், கலாசாரம் என்ற அடிப்படையில் நோக்கு கின்ற முரண்பட்ட பார்வையில், ஒரு பரந்த பொதுநலநோக்கு மலர்வதற்கு அறிவியல் சார்ந்த மனிதத்துவக்கல்வி ஆண் பெண் இருபாலாருக்கும் இன்றியமையாதது.

உலக சமாதானத்தை இலட்சியமாகக் கொண்டு அமைக்கப் பட்ட ஐக்கியநாடுகள் தாபனம் தனது அறிக்கையில் தனிமனிதனின் வளர்ச்சி, சமுதாய மேம்பாடு, நாட்டு முன்னேற்றம் என்பவற்றிற்கு மட்டுமல்லாது, கல்வியே உலக அமைதி, முன்னேற்றம் என்பவற்றுக் கும் உதவ வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. மனிதனின் தனித்தன் மையைப் பரிபூரணமாக வளர்க்கவும், மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் கல்வி ஊட்டப்பட வேண்டுமென இந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. இந்த வகையிலே பெண் கல்வியும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

வாழ்க்கையில் சம உரிமைகளை அனுபவிக்க பெண் கல்வி அவசியம் என்பது பெண்நிலைச் சிந்தனையாளர்களிடம் காணப்படு கின்ற ஒரு வலுவான கருத்தாகும். பெண்களின் சுதந்திரத்தின் பெறுமதி கல்வியின் ஊடாகவே வெளிப்படுகின்றது என இவர்கள் சிந்திக்கின்றனர். பெண்களின் உரிமைகளுக்கு சம அந்தஸ்த்து வழங்கப்படுகின்ற பொழுதே சமூகத்தில் எழுகின்ற சவால்களைப் பெண்களால் சமாளிக்கக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை பரவலாக சகல சமூகத்தினரிடமும் காணப்படுகின்றது.

## 1.2 பெண்நிலைச் சிந்தனைகள்

பண்டைய சமூகத்தில் பெண் மிகவும் முதன்மை பெற்ற வளாகவே காணப்பட்டாள். பெண்களுக்கே உரிய தனித்துவமான கருவுறும் ஆற்றல் காரணமாக தாய்மார் சக்தி உள்ளவர்களாகக் கருதப்பட்டனர். இதனால் பெண்களுக்கு ஒரு மேன்மை நிலை ஏற்பட்டது. இதனை கண முத்தையா (1949) அவர்களின் "இங்கு நடைபெறுவது தாயின் ராஜ்யம். இது அநியாயமோ உயர்வு தாழ்வோ இல்லாத ராஜ்யம். இந்த ராஜ்யத்தில் எல்லா ஆடவர் மீதும் தாய்க்குத்தான் முதலாவது அதிகாரம்" என்ற கூற்று தெளிவு படுத்தி நிற்கின்றது.

மானிடவியலாளர்கள், பெண் ஆதிக்கம் செலுத்தி அதிகாரம் செய்த ஒரு சமூக அமைப்பு நிலவியது என்பதற்குரிய சான்றுகளாக பெண் சொத்துரிமை முறைமை, தாய்வழிக் குடிமரபு என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றனர். செல்வி (1997) சமூகரீதியில் ஒருவகையான சமத்துவம் நிலவியதற்கான சான்றுகளும், சமூகத்தில் வெளிப்படை யான பாரபட்சங்கள், அடக்குமுறைகள் என்பன காணப்படாமை யும் இதனை உறுதிப்படுத்துவதாகக் கருதுகின்றார். இத்தகைய முக்கியத்துவம் பெற்ற பெண்ணின் நிலைமையிலே இழிநிலையான சிந்தனைகளும் நிலவியுள்ளன என்பதைப் பின்வரும் பரமசிவானந்தன் (1995), புலவர் சின்னசாமி (1991) ஆகியோரின் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

"நுண்ணறிவுடையராகி நூலோடு பழகினாலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத்து"

"ஆலகால விடத்தையும் நம்பலாம்
ஆற்றை யும்பெருங் காற்றையும் நம்பலாம்
கோல மாமத யானையை நம்பலாம்
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
கால னார்விடு தூதரை நம்பலாம்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தயங்கித் தவிப்பரே"

பெண் ஆதிக்கம் செலுத்தி அதிகாரம் செய்த ஒரு சமூக அமைப்பிலே காலமாற்றங்களும் அதனால் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களும் பெண் இனத்தின் மீது சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, ஆண் மேலாதிக்க நிலைமையை ஏற்படுத்த முயற்சித்து இருக்கலாம். குடும்பம், சமுதாயம், அரசு ஆகிய கட்டுக்கோப்புகள் பெண்கள் மீது ஆதிக்கத்தை வலையாகப் பின்னிப் பிணைந்துள்ளதாக பிளேவியா (1993) குறிப்பிடுகின்றார். இத்தகைய கட்டுப்பாடுகள் ஆண் மேலாதிக்க நிலையை ஏற்படுத்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

சமயரீதியான கட்டுப்பாடுகள் பெண்கள் மீது குறித்த சில எல்லைகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கலாம். இந்தக் கட்டுப்பாடுகள் பெண்களின் பாதுகாப்புக் கருதி விதிக்கப்பட்டவைகளாக இருக்கலாம். இலங்கையில் இந்துமரபு, பௌத்தமரபு, இஸ்லாம் மரபு, கிறிஸ்தவமரபு என சமயத்தை ஒட்டியதாகப் பல மரபுகள் பெண் இனத்தின் மீது விரும்பியோ அல்லது விரும்பாமலோ பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தமையைக் காணலாம். இந்துமரபில் முக்கியமாகப் பிராமண மரபில் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்ற ஒரு நிலைமையே காணப்பட்டது.

தமிழ்ச்சமூகம் "பெண் அடங்கிப்போக வேண்டியவள்" என்ற அடிப்படையிலேயே தனது சிந்தனையை வளர்த்து வந்துள்ளது எனலாம். இஸ்லாமிய மரபும் பெண் அடங்கி வாழ வேண்டியவள் என்ற சிந்தனைச் செயற்பாடுகளைக் கொண்டதாகவே பெரிதும் காணப்படுகின்றது. பௌத்தமரபு, கிறிஸ்தவமரபு என்பன பெண் களுக்கு சில முக்கியமான இடங்களினை வழங்கியிருந்தன எனக் கருதப்படுகின்றது.

பொதுவாகப் பார்க்கின்ற பொழுது இலங்கையில் ஆண் ஆதிக்க நிலை காணப்படுகின்றது என்ற கருத்து நிலவி வருகின்றது. ஆயினும் ஏனைய மூன்றாம் மண்டல நாடுகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது இலங்கைப் பெண்கள் ஓரளவு சுதந்திரத்தை அனுபவிக் கின்றனர் எனலாம். பெண்நிலைச் சிந்தனையாளர் ஆகிய குமாரி ஜெயவர்தனா (1986) "இலங்கையில் வாழும் பெண்கள் ஏனைய ஆசிய நாடுகளில் வாழும் பெண்களோடு ஒப்பிடுகின்ற பொழுது சந்தோசமான, தரமான வாழ்க்கையை வாழ்கின்றனர்" எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்து ஒப்பீட்டளவில் இலங்கை முழுவதற் கும் பொதுவானதாக இருக்கலாம். காரணம் இந்தியாவின் இந்துமரபு, சமூக மரபு என்பவற்றில் பெண் எதிர் நோக்கிய பிரச்சினைகளைப் போன்று எமது தமிழ்ச்சமூகம் பெண்ணுக்கு ஏற்படுத்தவில்லை எனலாம். குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில் ஆண்களுக்கே முக்கிய இடம் வழங்கப்பட்டு வந்தமையை எமது நாட்டின் சமூக, பொரு ளாதார, அரசியல், கல்வி வரலாறுகள் காட்டி நிற்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கலாசாரம், சமயம், சம்பிரதாயம், சடங்கு, பழக்கவழக்கம், மரபு என்ற காரணங்களால் பெண்கள் "அடங்கிப்போதல்", "சரிக்கட்டிக்கொண்டு போதல்", "சமரசப்படுத்திக்கொண்டு போதல்" ஆகிய பண்புகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனாலேயே 1960களுக்கு பிற்பட்ட காலங்களிலே பெண்களின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்ற சிந்தனைகள், அறிக்கைகள் உலகின் பல நாடுகளிலும், இலங்கை யிலும், குறிப்பாக தமிழ்பெண்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்ற ஒரு நிலைமையினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பெண்ணிலைச் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் "ஆண் மேலாதிக்கம்" என்ற நிலைப்பாடு எமது முன்னைய சமூகத்தில் கூடுதலாக இருந்திருக்கலாம் என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு சாரார் பெண்ணின் இயற்கைப் படைப்போடு தொடர்புபடுத்தி பெண்ணினது உடலியற்கை அவளை அவளது இருப்பிடத்துடன் கட்டுப்படுத்தியது என்றும், குழந்தைப்பிரசவம், குழந்தைவளர்ப்பு போன்ற கடமைகள் அவளை வேறு உழைப்பில் ஈடுபட முடியாமற் செய்தன என்றும் கூறுவர். பெண்களின் உடலில் இயற்கை விதித்த கட்டுப்பாடுகள் காரணமாகப் பெண் என்பவள் ஆணிற் தங்கிவாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம். சித்திரலேகா *(1993)* ஊடல்வலுவும், உற்பத்தித்திறனைப் பெருக்கும் வாய்ப்பும் கொண்ட ஆண், குடும்பத்தினதும் சமூகத்தினதும் தலைவனாக வளர்ந்தான் எனக் குறிப்பிடுகின்றார்.

"ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட வேலைப்பிரிவினையே உலகின் முதலாவது வர்க்கப் பிரிவினை" என்று பிரடரிக் ஏங்கல்ஸ் தான் எழுதிய குடும்பம், தனிச்சொத்துடமை, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். வேலைப்பிரிவினை ஆண் மேலாதிக்கத்தினை வலுப்படுத்தி இருக்கலாம். இத்தகைய ஆண் மேலாதிக்க நிலைமையிலே பெண்ணின் திறமைகள் சிலசமயம் வெளிப்படாமல் இருந்திருக்கலாம். அல்லாவிடில் பெண் செய்யும் காரியங்கள் எவையும் காரியங்கள் அல்ல என்ற சிந்தனையும் இருந்திருக்கலாம்.

புராதன காலத்தில் தன்குடும்பத்தின், தன்னைச் சார்ந்தவர்களின், சமூகத்தின் நன்மைகளுக்காகப் பெண் ஆற்றிய பணிகள் பல பதியப்படாமல் இருந்திருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது. பேத்தி, பூட்டி என்ற உறவில் வாழ்ந்த பெரியோர்கள் கூறிய கதைகள் பண்டைக்காலப் பெண்களின் சிறப்புகளை எடுத்துக் காட்டியுள்ளன. இதனால் பெண்ணின் சிறப்புகளை, அவளின் உயர்ந்த நிலைகளை பண்டைக்காலம் தொடக்கம் இக்காலம் வரை அறிய வேண்டுமென்ற அவாவினால் பெண்நிலையை உயர்த்த உதவும் கல்வியோடு தொடர்புபடுத்தி "பெண்களின் கல்வி" பற்றியதாக இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடு தனக்கெனச் சில சிறப்பான பண்புகள் கொண்டதொரு புவியியற் பிரதேசமாகும். இங்கு காணப்படும் இயற்கைவளப் பயன்பாடு, நிலப்பயன்பாடு, நிலவுடைமை முறைகள் , நிலவாட்சி முறைகள், சமூகப் பொருளாதார நிலைமைகள், விழுமியங்கள் என்பன தனித்துவமான சில விசேட இயல்புகளைக் கொண் டுள்ளன. இத்தகைய தனித்துவமான யாழ்ப்பாணத்திற்கே உரிய பண்பாட்டுப் பாரம்பரியத்துப் பின்னணியில் பெண்கல்வி பற்றி வர லாற்று ரீதியாக ஆராய வேண்டும் என்ற நோக்கில் "**யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்**" என்ற தலைப்பில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

## 1.3 ஆய்வின் அடிப்படைகள்

ஆய்வு என்பது ஆழ்ந்து பயிலும் ஆர்வமும், நுணுகி நோக்கும் திறனும் கொண்டவர்களின் மனங்களில் தன்னியல்பாகத் தோன்றும் அடிப்படை ஐயங்களுக்கு விடை காண மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகும். இந்த வகையிலே யாழ்ப்பாணத்துப் பெண்கள் அன்றும் இன்றும் குடும்பத்தில், சமூகத்தில் பெற்றிருந்த நிலையினை அறிய வேண்டுமென்ற நோக்கில் இவ்வாய்வுப் பொருள் பல அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் இயல்புகள் பற்றி அறியப்படுவது ஆய்வினை வளப்படுத்தும் என்பதனால் பெண்ணுக்கு உரியதாகக் கருதப்படும் அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், ஒப்புரவு, தொண்டு போன்ற பண்புக் கூறுகளுடன் இணைந்த வகையிலே ஒவ்வொரு செயலையும் அன்பு சார்ந்த அறிவு நெறியிலே செயல்படுத்தும் குணச்சிறப்பைப் பொதுவாக எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

பெண்மைக்குரிய இயல்பான குணாம்சங்களினால் அவள் தனக்கென வாழாது என்றும் பிறருக்காகவே வாழ்ந்து வந்துள்ள மையை நமது தமிழ்ப்பண்பாட்டிலே பரக்கக் காணலாம். பெண் அடிமைத்தனம் என்பது எழுதாத சட்டமாக எமது சமூகத்தில்

புரையோடி வந்துள்ளது என்பதை விமர்சனமாகக் காணும் பொழுதும் இவை பற்றிய ஆய்வின் தேவையொன்று நிகழவேண்டும் என்பதும் இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்து மரபில் சில காரியங்களில் பெண்கள் ஈடுபடுவதற்கு தடைகள் இருந்தமையை அறியக்கூடியதாக உள்ளது. பெண்களுக்கு ஆண்களைப்போன்று அதிகார தத்துவம் இல்லை, அவளால் ஆண் செய்யும் எல்லாக் காரியங்களையும் செய்யமுடியாது என்ற சிந்தனை இந்து மரபில் காணப்படுகின்றது. வீட்டு வேலைகள், குழந்தைகளின் பராமரிப்பு, கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் சுமைகள் எனப் பெண்கள் வாழ்நாள் முழுவதும், ஒவ்வொரு பருவத்திலும் பல பிரச்சினை களை அனுபவித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள் ளது. குடும்பம், சமூகம் என்ற கட்டுக்கோப்புக்கள் பல கட்டுப்பாடு களைத் தெரிந்தோ, தெரியாமலோ பெண்ணுக்கு ஏற்படுத்தி இருக்கலாம். எனவே பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை என்பது பற்றியும் பொதுவாக இவ்வாய்விலே ஆராயப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மரபிலே சிறப்பாக இந்து மரபிலே பெண்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றி நுண்ணியதாக ஆய்வது இப் பிரச்சினைகளை நன்கு விளங்கிக்கொள்ள உதவும் என்பதனால் யாழ்ப்பாண இந்து மரபிலே பெண்நிலைச் சிந்தனைகள் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்து வெளிக்கொணர்வதும் அவசியமாகிறது.

யாழ்ப்பாண இந்து மரபிலே பெண்கள் எதிர்நோக்கிய பிரச்சி னைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கப்பட்டதா, தீர்வாக இருக்குமென நினைந்திருந்த கருத்துக்கள் எவை, குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பெண் தொடர்பான பிரச்சினைகளுக்கு எடுக்கப்பட்ட தீர்வுகள் எவை, பெண்ணின் பிரச்சினைகளுக்கு கல்வியறிவின் வளர்ச்சி தீர்வாக அமையுமென சிந்திக்கப்பட்டதா, ஆணிற்கு சமமாகப் பெண்ணை உயர்த்துவதற்கு கல்வியறிவு உதவியாக அமையலாம் என்ற கருத்துக்கள் நிலவியதா போன்ற ஐயங்களுக்கு விடைகாண வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ் மரபில் கல்வி மனிதப்பண்புகளை வளர்த்துச் சமூகம் எதிர்நோக்கிய பொதுவான பிரச்சினைகளை

இனங்காட்டிய முறைமையினையும், பெண்ணுலகம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கும் கல்விச் சிந்தனைகளுக்கும் இடையிலான உறவு நிலை எவ்வாறு இருந்தது எனச் சுட்டிக்காட்டுவதும் இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்துக் கல்வி மரபு சகல மட்டங்களையும் உள்வாங்கிப் பொதுவாகப் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதா என ஆராய்வதும், அவ்வாறு தீர்வு காணப்பட்டது எனின் எத்தகைய கல்விமரபு பேணப்பட்டது என்பதை விளக்கிக் காட்டுவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகின்றன.

பெண்ணால் ஆண்களுக்குச் சமமான முறையில் கல்வி கற்க முடியாது என்ற சிந்தனைக்கு இயற்கைப் படைப்பும், அதனால் ஏற்பட்ட இயற்கைத் தடைகளும் காரணங்களாக அமைந்தனவா, அல்லது குடும்பம், சமூகம் என்பன பெண்களின் கல்விப்பரப்பிலே சில வரையறைகளை விதித்திருந்தனவா என அறிவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் கல்வித்தரத்திலேயே தங்கியுள்ளது. கீழைத்தேய, மேலைத்தேயச் சிந்தனையாளர்கள் ஒரு பெண்ணுக்கு வழங்கப்படுகின்ற கல்வி, குடும்ப அங்கத்தவர்கள் பலருக்குப் பலனளிப்பதாக கருதுகின்றனர். கல்வியின் நோக்கங்கள், விழுமியங்கள் நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வந்துள்ளது என்பதை வரலாறுகள் காட்டியுள்ளன. இவ்வாறு காலமாற்றத்தோடு யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்வி வாய்ப்புக் களிலும் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டனவா என்பதை அறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இந்த வகையிலே பண்டைய யாழ்ப்பாணத்துத் தமிழ் மரபிலே பெண்களுக்கு வழங்கப்பட்ட பாரம்பரியக்கல்வி முறையை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

உலகநாடுகள், மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கிற்கு இணங்க யாழ்ப்பாணத்துப் பெண்களின் பாரம்பரியக் கல்வி நிலைமைகளிலும் காலமாற்றத் தோடு முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டனவா என்பதை

அறியும் வகையில் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலத்து யாழ்ப்பாணப் பெண்கல்வி நிலமைகள் ஆராயப்படுவதோடு சிறப்பாகப் பிரித்தானியர் காலப் பெண்கல்வி நிலைமைகளில் அமெரிக்க மிசனரிமாரின் கல்வி முயற்சிகளும், இதனால் ஏற்பட்ட பெண் கல்வியின் நிறுவன ரீதியான வளர்ச்சிகளும் ஆராயப்பட வேண்டியவை.

16ஆம் நூற்றாண்டிலிருந்து பரவிய மேனாட்டார் ஆட்சியும் கிறிஸ்தவ சமயங்களின் ஆதிக்கமும், அதனால் ஏற்பட்ட எதிர்மறைப் போக்குகளும் இந்துசமயத்தினையும், இந்து மரபினையும், அதோடு இணைந்த சைவக்கல்வியையும் எழுச்சி பெறாதவாறு ஆக்கிவிட்டன. தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட மேலைத்தேயத்தவர்கள், பெண்களை மதம் மாற்றுவதே தமது நோக்கத்தை நிறைவேற்ற உதவும் சிறந்தகருவி என எண்ணினர். இதனால் பெண்களுக்கு கல்வி வசதிகளை அளிப்பதன் மூலம் மதம் மாற்ற முயற்சித்தனர். இதனை உணர்ந்த யாழ்ப்பாணத்து சுதேசிகள் இந்துக்கல்வி மரபில் பெண்கல்விக்கும் முக்கிய இடமளிக்கப்பட வேண்டும் எனக் கருதினர். இந்த வகையில் நாவலர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், சைவபரிபாலனசபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்பனவற்றின் செயற்பாடுகள், சேர்.பொன்.இராமநாதனின் பணிகள் என்பன பெண்கல்வியின் வளர்ச்சியில் ஏற்படுத்திய முன்னேற்றங்கள் எவையெனக் கண்டறிய வேண்டியுள்ளது.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த காலப்பகுதி வரையிலான பெண் கல்வியின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப்படிகளைத் தெளிவு படுத்தும் வகையிலே மேற்குறித்த நோக்கங்களை உள்ளடக்கிய சிந்தனைகள் இந்த ஆய்வில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. கல்வியானது யாழ்ப்பாணத்துப் பாரம்பரியத்துடன் ஒன்றிவிட்ட அம்சமாகும். மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்தது கல்வி என்று சொல்லும் அளவிற்கு யாழ்ப்பாணத்தவர் கல்விக்கு

முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். வரலாற்றுக்கூடாகப் பார்க்கும் போது, யாழ்ப்பாணத்து மக்கள் தம்மை ஒறுத்தேனும் கல்வியை வளர்க்கும் தன்மை உடையவர் எனக் குறிப்பிடப்படுகின்றது (ஆறுமுகம்,1995). காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணக் கல்வி மரபிலே பல வகையான மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன என்பதை செவிவழிக் கதைகள், தமிழ் இலக்கிய மரபு, புராணபடனமரபு, குருகுலக்கல்வி மரபு என்பவற்றினூடாக ஓரளவு அறியமுடிகிறது. ஆனால் இதில் பெண்கள் தொடர்பான கல்வி மரபு என்ன நிலையில் இருந்தது என்பதைக் கண்டறிவது கடினமான செயல் ஆகும்.

பண்டைக்காலக் கல்விமுறை பற்றிய குறிப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. சமயநூல்களிலும், இலக்கியங்களிலும் ஆங்காங்கு காணப்படும் குறிப்புகளிலிருந்து பண்டைக்காலத்தில் நிலவிய கல்விமுறை பற்றிய முடிவுகளை அனுமானித்தே கூறவேண்டி உள்ளது (கல்வி நூற்றாண்டு மலர்,1969). இத்தகைய ஒரு நிலையில் பெண்களது கல்விநிலையை பண்டைக்காலத்துடன் தொடர்புபடுத் துகின்ற பொழுது இதற்கான ஆதாரங்களைப் பெறுவது மிகவும் கடினமானது.

யாழ்ப்பாணத்தின் மன்னன் எனக் குறிப்பிடப்படுகின்ற பரராஜசேகரனின் புத்திரிமார் இருவர் மதமாற்றம் செய்யப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டனர் (வள்ளிநாயகி,1989) என அறியப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பெண்களின் புலமைத்துவ மரபு யாழ்ப்பாண மன்னர்களின் காலத்திலிருந்து இருந்திருக்க வேண்டுமென உணரப் பட்ட பொழுதும் அவ்வாதாரங்கள் கிடைப்பது கடினமே.

மேலைத்தேயத்தவர்களின் வருகையோடு யாழ்ப்பாணத்துக் கல்விபாரம்பரியத்தை ஓரளவு வரலாற்று ஆதாரங்களோடு அறியக் கூடியதாக இருந்தாலும் பெண்களின் கல்விப்பாரம்பரியத்தை குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு போதிய ஆதாரங்களைப் பெறுவது கடினமானதே. போர்த்துக்கேயர்கள் 1621ஆம் ஆண்டி லிருந்து 1658ஆம் ஆண்டு வரையுள்ள 37வருடங்கள் யாழ்ப்பாணத்தை தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். இக்குறுகிய கால அளவில் பெண்கல்வியின் நிலமைகளை அறிவது கடினமானதே. ஒல்லாந்தர்

கள் 1658ஆம் ஆண்டிலிருந்து 1796 இல் ஆங்கிலேயர் கைப்பற்றும் வரை ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். ஒல்லாந்தர்கள் பெண் கல்விக்கு செய்த பங்களிப்பினை ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது.

1796ஆம் ஆண்டு தொடக்கம் 1948ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி சுதந்திரம் கிடைக்கும் வரை இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் பரிபாலிக்கப்பட்டது. இவர்களின் காலத்தை யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்விப் பாரம்பரியத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். 1891ஆம் ஆண்டு யூன் மாதத்தில் "இந்து சாதனம்" தனது பத்திரிக்கைக் குறிப்பில், "வெளிநாட்டவர்களால் பெண்களுக்கு கல்வி அளிக்கப்படுவதை அன்றைய சமுதாயம் விரும்பவில்லை" எனத் தெரிவித்துள்ளது. எனினும் யாழ்ப்பாணச் சமூகத்தின் இறுக்கமான கட்டுக்கோப்பிற்குள்ளும் மிசனரிகள், குறிப்பாக அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் ஆண்களுக்கென பல கல்லூரிகளை நிறுவியதோடு நின்றுவிடாது பெண்களுக்கெனவும் தனிக்கல்லூரிகளை நிறுவி, பெண்களது அறிவினை வளர்ப்பதற்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர் என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுவாக கல்வி மரபு செழித்திருந்த இடங்களிலேயே பெண்களின் கல்வி மரபும் வளர்ந்திருந்தது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. நல்லூர், உடுப்பிட்டி, புலோலி, வேலணை, அராலி, அச்சுவேலி, காரைநகர், வரணி, சுன்னாகம், தெல்லிப்பளை, கோப்பாய், மட்டுவில் முதலிய இடங்களில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு பாரம்பரியக் கல்விமுறை நிலவியுள்ளது (சிவலிங்கராஜா,1983). மேற்குறித்த இடங்கள் யாவற்றிற்கும் சென்று ஆய்வினைச் செய்வது கடினம் என்பதனால் சிறப்பாக யாழ்ப்பாணக் கல்வி மரபு செழித்திருந்த பகுதிகளாகிய வண்ணார்பண்ணை, சுண்டுக்குளி, யாழ்நகரப்பகுதி, நல்லூர், உடுப்பிட்டி, தெல்லிப்பளை, உடுவில், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகள் விசேட கவனத்தில் எடுக்கப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்வி வளர்ச்சியைத் தொகுத்து அறியும் நோக்கில் தேவையின் நிமித்தம் பல விசேட ஆய்வு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்ட வகையில் இந்த ஆய்வு செய்யப் பட்டு உள்ளது. அரசியல், பொருளாதார, சமூகப்பிரச்சினைகள் ஒவ்வொன்றும் திட்டமிடப்படாத கல்வியினால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் என்றும், கல்விப்பிரச்சினைகள் அரசியல், பொருளா தார, சமூகப்பிரச்சினைகள் பலவற்றை தோற்றுவிக்கின்றன என்றும், காலத்திற்குக்காலம் கல்விமான்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த வகையிலே சிறப்பாக யாழ்ப்பாணத்துப் பெண்கள் தாம் எதிர்நோக் குவதாகக் கருதும் பிரச்சினைகளுக்கு வரலாற்று நிகழ்வுகள், முன்னைய கால சமுதாய அமைப்புகள், திட்டமிடப்படாத கல்வி முறைகள் காரணமாக அமைந்திருக்குமா என்ற ஐயத்திற்கு விடை காண வேண்டிய நிலையிலே பண்புசார் ஆய்வு அணுகுமுறையில் வரலாற்று ரீதியான ஆய்வு முறை இந்த ஆய்வில் பின்பற்றப்பட்டது.

ஒரு சமூகத்தின் கல்வியில் அச்சமூகத்தின் சூழற் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இந்த வகையிலே யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்வியிலும் சமூகக் காரணிகள், மரபுகள் என்பன செல்வாக்குச் செலுத்தி உள்ளமையால் காரண காரிய ரீதியான ஆய்வுமுறையும் பயன்படுத்தப்பட்டது.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்கல்வியின் நிலமைகளை எழுத்து ரீதியான ஆதாரங்களோடு அறிவது மிகக் கடினமானது. இதனால் இந்த ஆய்வில் செவிவழிக்கதைகள், சடங்குகள், செவ்வி, கள ஆய்வு போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வுக்குத் தேவையான அறிவியல் உண்மைகளைப் பெறுவதற்காகவும், யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்வி நிலைமைகளின் உண்மை நிலைமைகளை அறிவதற்காகவும் பல நூலாதாரங்கள், பாடசாலை ஆண்டறிக்கைகள், மிசனரிமாரின் குறிப்புகள், அரசாங்க சுற்று நிருபங்கள், நூலுருப் பெறாத ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன.

## 2.
# பண்டைய யாழ்ப்பாணத் தமிழ்மரபில் பெண்கல்வி

### 2.1 பண்டைய யாழ்ப்பாணச் சமூகஅமைப்பு

*இந்துமரபினைத் தம் பிறப்புரிமையாகக் கொண்ட மக்கள் கூட்டத்தினரைப் பெரும்பான்மையினராகக் கொண்டு அமைந்துள்ள யாழ்ப்பாணச் சமூகம் மிகநீண்ட பாரம்பரியத்தை உடையது. யாழ்ப்பாணச் சமூகம் என்றும் தனக்கெனத் தனித்துவமான சில பண்புகளைக் கொண்டதாகவே இயங்கிவருகின்றது.*

*ஒரு சமூகத்தின் அமைப்பும், அதன் வளர்ச்சியும் அச்சமூகத்தின், சமூக பொருளாதார, அரசியல் சார்ந்த பண்புக்கூறுகளினால் நிர்ணயிக்கப்படுகிறது. சமூக ரீதியான பண்புக்கூறுகளில் விசேடமாக ஒரு இனத்தினது மதத்தின் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருகின்ற பண்பாடுகள், பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், மரபுகள், விழுமியங்கள் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த வகையிலே யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பிலும் வளர்ச்சியிலும் மேற்குறித்த சமூக ரீதியான பண்புக்கூறுகள் செல்வாக்குச் செலுத்தியமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேற்குறித்த சமூகப் பண்புக்கூறுகள் யாவற்றையும் ஒன்றிணைத்து மனிதனை வையகத்துள் வாழ்வாங்கு வாழச்செய்வதில் கல்வி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதனாலேயே மக்களின் நடவடிக்கைகளோடு இணைந்த கல்வியின் தெரிவானது ஒருவரின் தனிப்பட்ட சொந்தத் தெரிவாக மட்டுமன்றி சமுதாயத்தின் பிரச்சினைக்கான தீர்வாகவும் முன்னெடுக்கப்படுகிறதென சபா.ஜெயராசா (1988) குறிப்பிடுகின்றார்.*

பண்டைய யாழ்ப்பாண சமூக அமைப்பிலே சமூகத்தின் இயங்கியற் செயற்பாடுகளில் சாதியமைப்பு சக்தி வாய்ந்ததாக விளங்கியது. தொழில், கல்வி, வாழ்க்கைமுறை, வதிவிடம் எல்லாவற்றையும் சாதியே நிர்ணயித்ததாக அறியப்படுகிறது. சைமன் காசிச்செட்டி 1834இல் எழுதி வெளியிட்ட *"Caste, Customs, Manners and literature of the Tamils"* என்ற நூலில் ஏறத்தாழ 65க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப்பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். ஜெபநேசன் (1983) பிராமணர்கள் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் அதிகாரமேன்மை பெற்றிருக்கவில்லை என்றும் அதிகாரமேன்மையும் உயர்வும் வேளாளரிடத்திலேயே இருந்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். பெண் ஒடுக்குமுறைக்கு இந்திய தமிழ் சமூக அமைப்பில் பிராமணர்கள் மேல்நிலையை எடுத்தமை காரணமாக அமைந்ததைப் போன்று யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே ஏற்படவில்லை எனக் குறிப்பிடும் இவர் யாழ்ப்பாண சமூக அமைப்பில் வேளாளர் சமூக மேன்மையைப் பெற்றமையினால் இந்திய தமிழப் பெண்களைப் போல் அல்லாது யாழ்ப்பாணத்துப் பெண்கள் ஒப்பீட்டளவில் உயர்நிலையில் வைத்து சிந்திக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

யாழ்ப்பாணச் சமூகம் ஒரு சமூக அதிகாரப் படிநிலை முறையினைக் கொண்டதாகக் காணப்பட்டது. அதாவது மேலே உள்ளவை உயர்ந்தவை படிப்படியாக கீழே வரும்பொழுது கீழே உள்ளவை தாழ்ந்தவை என்ற எடுகோள் காணப்பட்டது. இப்படிநிலை சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது. இதையே சிவத்தம்பி (1994) யாழ்ப்பாணத்தில் சாதியே சகல சமூக உறவுகளையும் நிர்ணயிக்கின்ற சக்தியாக விளங்கிய ஒரு நிலையிருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

பண்டையகால யாழ்ப்பாண சமூகத்தில் உயர்சாதி, கீழ்சாதி என்ற வேறுபாடு மேலோங்கிக் காணப்பட்டது. உயர்சாதியினருக்கே சமூகத்தில் மிகவும் உயர்வான மரியாதை அளிக்கப்பட்டது. ஓர் உயர்ந்த சாதியினரை ஒரு தாழ்ந்த சாதியினர் கடந்து செல்லும்போது தாழ்ந்த சாதியினர் உயர்ந்த சாதியினருக்கு மரியாதை செலுத்தும்

முகமாக நிலத்தை நோக்கித் தமது தலையைத் தொங்கவைத்துச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது.

தொழில் வகைகள் உயர்குடிகளின் நம்பிக்கைகள், வழக்காறுகள், சாதி ஒழுங்குகளுக்கு அமையவே அமைந்திருந்தன. சாதியமைப்பே சகல உறவுகளையும் நிர்ணயிக்கின்றது என்ற அடிப்படையில் அச்சாதி ஒவ்வொன்றும் தத்தம் சமூக உறவுகளில் ஒன்றிணைந்து ஒரு சமூக அமைப்பினை உருவாக்கின. ஒவ்வொரு சாதியினரும் தமக்கிடையே திருமணம் முடிப்பதே வழக்கமாயிருந்தது. சாதியே மக்களின் நடை, உடை, பாவனை முழுவதையும் நிர்ணயித்தது. வேளாள ஆண்கள் காற்சட்டை போன்று தோற்றமளிக்கும் வகை யில் வேட்டியை இருகால்களிலும் சுற்றிக்கொடுக்காக உடுத்தார்கள். சிறுவயதிலிருந்து காது குத்திக் கடுக்கன்கள் அணிந்திருப்பர். பெரும்பாலானோர் கன்னக்குடுமி வைத்திருந்தார்கள். வேளாளப் பெண்கள் அனேகமாகச் சேலையும் சட்டையும் அணிந்திருந்தார்கள். கூந்தலை வாரியள்ளிக் கொண்டை போட்டுக்கொள்வர். ஆனால் தாழ் சாதிப் பெண்கள் நீண்ட சேலைத்துண்டை மார்புக்கு குறுக்காகக் கட்டியிருப்பர். இவர்கள் சட்டை அணிவதில்லை என ராகவன் (1962) குறிப்பிடுகின்றார்.

சாதியமைப்பில் அதிகார மேன்மை பெற்றிருந்த வேளாளர் கையிலேயே சமூகத்தின் உயர் பதவிகள் காணப்பட்டன. இவர்கள் முதலியார், உடையார், மணியகாரர் போன்ற பதவிகளைத் தம்மிடையே வைத்திருந்தார்கள். உயர் பதவிகளாலும், தமது குலப்பெருமையைக் கூறியும் ஏனைய சாதியினரைத் தமக்குக் கீழ் அடக்கி வைத்திருந்தார் கள். இதனால் ஆண்டான், அடிமை முறையொன்று யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே நிலவி வந்துள்ளது. உயர்குடி பிறந்தோர் வேண்டிய வேலைகளை அடிமை மூலம் செய்வித்தனர். ஒரு அடிமை பல குடும்பங்களுக்குச் சொந்தமாக இருந்தான். பின்னர் பிறவுண்றிக் தேசாதிபதியே ஓர் அடிமைக்கு ஓர் ஆண்டான் என்ற முறையைக் கொண்டுவந்தார் (ஜெபநேசன், 1983).

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டதாக யாழ்ப்பாணச் சமூகம் காணப்படுகின்றது.

தொழிலைப் பற்றிய அறிவு குலவித்தையாகக் காணப்பட்டது. ஒரு தொழிலைப் பற்றிய அறிவு தந்தையிடமிருந்து மைந்தனுக்கும், ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்குமாக வாழையடி வாழையாக கையளிக்கப்பட்டு கண்ணுங் கருத்துமாகப் பாதுகாக்கப்பட்டது. வைத்தியக்கல்வியும் இவ்வாறே பயிலப்பட்டது. சமையற்கல்வி பற்றி பெண்கள் அத்தியாவசியமாகப் பயில வேண்டும் என்பதனால் தாயே அவசியமான விதிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தாள் *(கல்வி நூற்றாண்டு மலர்,1969).*

யாழ்ப்பாணச் சமூகத்தில் நாட்டு வைத்தியம் சிறப்புப் பெற்றிருந்தது. நோய்கள் தொடர்பாகப் பெற்ற அனுபவம், பயிற்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோய்களை மாற்றியுள்ளனர். பரம்பரை பரம்பரையாக எமது முன்னோர்கள் இவ்வைத்தியம் பற்றிய தமது அனுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் ஏட்டுப்பிரதிகளிற் பொறித்து வைத்தனர். இந்த ஏட்டுப்பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு வீடுகளில் வைத்தியம் நடைபெற்றது. மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட குளிசைகளையும், திரவங்களையும் மருந்துகளாக அளிப்பது இதில் வழக்கமாக இருந்தது.

வீடுகள் மண்ணினாற் கட்டப்பட்டிருந்தன. இருப்பிடங்கள் வசதி, அழகு, சுத்தம், ஒழுங்கு என்பவற்றுடன் காணப்பட்டன. வீட்டு வளவிற்குள்ளே தோட்டங்கள் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தன. இல்லங்கள் அங்கு வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உயர்ந்த கிடுகுவேலி அடைப்புக்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. இவ்வாறு பண்டைய யாழ்ப்பாணச் சமூகம் தனக்கென பல தனித்துவமான பண்புக்கூறுகளைக் கொண்டு அமைந்திருந்த நிலையிலே பெண்களது நிலைப்பாடு இங்கு எவ்வாறு அமைந்திருந்தது என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம் ஆகும்.

## 2.2 பண்டைய யாழ்ப்பாணச் சமூகமும் பெண்ணும்

பண்டைய கால யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே பெண்களின் நிலைப்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை அறிவதற்கு

அச்சமூகத்தவர்களால் பின்பற்றப்பட்ட சமய ரீதியான சம்பிரதாயங்கள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், கலை, கலாசார நடவடிக்கைகள், நடை உடை பாவனைகள் என்பவற்றுடன், பண்டைய சமூகத்தில் கல்வி நிலைமைகள், கல்விக்கான வாய்ப்புக்கள் எவ்வாறு இருந்தன என்பதும் அறியப்படுதல் வேண்டும். இதில் குறிப்பாகப் பெண்களின் கல்விநிலை எவ்வாறு இருந்தது என்பது பற்றி அறிதல் அவசியமானது. இச்சந்தர்ப்பத்தில் பண்டைய யாழ்ப்பாண சமூகத்தின் ஆத்மார்த்த கருத்துக்கள், சமூகப்பெறுமானங்கள் என்ன வகையிலே நிலவியது என்பது பற்றி அறிவது மிகவும் தேவையான ஒன்றாகும்.

மிகப் பழைய நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந்து நாகரிகத்திலிருந்து நிலைபெற்றது இந்துமரபு. பெரும்பாலான யாழ்ப்பாண மக்கள் சைவசமயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மரபினைப் பின்பற்றி வாழ்கின்றனர். பொதுவாக இந்துமரபுக் கொள்கைகளே யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை முழுவதிலும் பரந்து கலந்திருந்தது. இந்துமரபில் பெண்களுக்கு என்றுமே கல்வி உரிமை மறுக்கப்படவில்லை. பெண்களின் கல்வி விருத்தி மிகஉயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆண்களின் கல்விக்குச் சமமாக வைத்து எண்ணப்பட்டமைக்கு வேதகால நூல்கள் வரலாற்றுச் சான்று பகர்வதாக வள்ளிநாயகி (1989) குறிப்பிடுகின்றார்.

இந்து மரபினை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததே யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான இந்து மரபுக் கல்விச் சிந்தனைகளாகும். இந்துமரபுக் கல்வி மனித வாழ்க்கையை, அகநிலை என்றும், புறநிலை என்றும் தனித்தனியாக வேறுபடுத்திக் காணவில்லை. ஒன்றோடு மற்றையது இணைந்தே வந்துள்ளது. அகநிலையில் வீடு, குடும்பம் என்பவற்றோடு தொடர்புபட்ட வகையில் மனிதனின் வாழ்வியல் ரீதியான கடமைகள் எவை என்பதை இந்துமரபு எடுத்துக் கூறுகின்றது. இதில் பெண்களின் நிலைப்பாட்டினையும் இந்துமரபு எடுத்துக்காட்டி உள்ளது. அகநிலையில் அதன் வெளிப்படையான தோற்றத்தைக் காணமுடியாத நிலைமை இருந்தாலும் அகநிலையில் பண்டைக்கால யாழ்ப்பாணப் பெண்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக இந்துமரபு விளங்கியது.

பண்டைய யாழ்ப்பாணத்து சமூக வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக இந்துமரபும் அதன் கல்விச் சிந்தனைகளும் காணப்பட்டமையினால் பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்திலே சமாதானம், அமைதி, நல்லொழுக்கம், பண்பாடு, நிறைவு, நிம்மதி, ஒற்றுமை என்பன நிலவியுள்ளன. இந்துமரபுக் கல்வியினால் தோற்று விக்கப்பட்ட அறிவாராய்ச்சி, உண்மை விளக்கம், ஆன்ம விசாரணை, மனிதவிழுமியங்கள், சமூகத் தொண்டு போன்ற உயர்ந்த மரபுகளே இத்தகைய சிறந்த சூழ்நிலைக்கு காரணம் எனலாம்.

இந்துமரபு, கல்வி என்பது தனித்து விடய அறிவுடன் மட்டு மல்லாது பிரயோக அறிவுடனும் தொடர்புடையது என்று கருதுகின்றது. மனித வளர்ச்சிக்கு அறிவும் அனுபவமும் வேண்டும் என இந்துமரபு நம்புகின்றது. அறிவுடன் அனுபவரீதியாகப் பெறுகின்ற வாழ்வியற் கல்விக்கு இந்துமரபு முக்கியத்துவம் அளித்தமையினால் பெண்கள் தங்கள் வாழ்க்கையோடு இணைந்த வகையில் அனுபவ ரீதியாக அறிவினைப் பெற்றிருந்தனர். இந்த வகையில் ஆண், பெண் இருபா லாரினதும் அறிவினை வாழ்க்கையின் சிறப்புக்குத் தேவையான வகையில் பயன்படுத்த இந்து மரபுக்கல்வி உதவியுள்ளது.

மக்கள் தம்மைத் தாமே அறிதல் வேண்டுமென இந்துமரபு கருதுகின்றது. மக்கள் தம்மைத் தாமே அறிவதன் மூலம் தம்மிட முள்ள குறைகளையும், நிறைவுகளையும் கண்டுகொள்ள முடிகின்றது. இதனால் குறைகளைக் களைந்து நிறைவுகளை மதிப்பிடவும் அந்நிறைவுகளை மேலும் நிறைவுபடச் செய்யவும் கல்வி வழிவகுக் கின்றது. இந்த வகையிலே பண்டைய யாழ்ப்பாணத்துப் பெண்களும் வாழ்க்கையில் தமது நிலைகளில் நிறைவு கண்டு வாழ்ந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் தம்மை உணர்ந்து கொள்ளவேண்டும் என இந்துமரபு கூறுகின்றது. உணர்வது அறிதலிலும் செழுமைமிக்கது. தம்மையே அறிந்து தம்மையே உணரும் பண்பினை வளர்த்து வந்துள்ளது இந்துமரபுக் கல்வி. இந்த வகையிலே பெண்கள் தங்களைத் தாமே உணர்ந்து குடும்பம் என்ற நிலையிலே மகளாக, மனைவியாக, தாயாக தாம் செய்ய வேண்டிய கடமைகள் எவை என்பதை தாமே

உணர்ந்து நடந்து வாழ்க்கையில் நிறைவு காண இந்துமரபுக் கல்வி வழிவகுத்தது.

இந்துமரபு ஆன்மீக நெறியை வலியுறுத்துகின்றது. இந்த வகையில் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஏற்ற வகையிற் சிந்தித்து செயலாற்ற இந்துமரபு உதவியது. பெண் தனது கடமைகளை குடும்பம், கோயில் என்ற இரு முக்கிய நிலையிலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஏற்ற வகையில் நடாத்திச் செல்வதற்கு இந்துமரபு இடமளித்தது. மக்கள் தமது பண்புகள், ஒழுக்கங்கள், முருகியல் உணர்வுகள், உள்ளார்ந்த ஆற்றல்கள் என்பவற்றை சீரிய முறையில் வளர்த்து வெளிப்படுத்தி ஆளுமையை வளர்ப்பதற்கு இந்துமரபுக் கல்விச் சிந்தனைகள் உதவி உள்ளன. இந்த வகையிலே இந்துமரபும் பெண்ணிடம் இருக்கவேண் டும் என எதிர்பார்த்த ஆளுமைப் பண்புகளை வளர்க்கத் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்துநெறி ஒரு வாழ்வியல்நெறி. மக்களை வையகத்துள் வாழ்வாங்கு வாழச் செய்தல் இதன் பிரதான குறிக்கோள் ஆகும். செம்மையான சீரிய வாழ்க்கையை வாழ்தல் மூலம் மக்கள் உயர்வு பெற இந்துமரபு வழிவகுத்துள்ளது. இந்த வகையிலே இந்துமரபு பெண்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவே முயன்றுள்ளது. இந்துமரபு வாழ்வியல் கோட்பாட்டில் பெண்மைக்கு கொடுத்த முதன்மை முக்கியமானது. இந்துமத வாழ்வியற் கோட்பாடு பெண்ணை வாழ்க்கைத்துணை எனப் போற்றுகின்றது. இந்த வகையிலே சைவத்தினதும் தமிழ்ச்சமூகத்தினதும் மேன்மைகளைக் காப்பதில் பெண்கள் குறிப்பிடத்தக்க அளவு பங்கேற்றுள்ளனர்.

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இருந்தே வாழ்க் கைத் தத்துவங்கள் எழுந்தனவென்று கூறலாம். இந்த வகையிலே இந்துமரபும் அதனோடு இணைந்த இந்துமரபுக் கல்வியும் பெண்கள் அறிவு பெறுவதை தடைசெய்யாவிட்டாலும் குடும்ப அமைப்பு, குடும்பநிலை, கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை என்ற நிலைப்பாடு களில் பெண்ணின் மீது தெரிந்தோ தெரியாமலோ சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி உள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

ஒரு சமூகம் குடும்பத்தை எவ்வாறு கட்டமைக்கின்றது என்பதைப் பொறுத்தே பெண்ணின் பங்கு காணப்படுகின்றது. இந்த வகையில் யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பாரம்பரியத்திலே சமூகச் சிந்தனையைவிட "குடும்பம்" என்ற சிந்தனையே மேலோங்கி நின்றது. குடும்பம் சமூகத்தில் ஒருவர் பெறும் அந்தஸ்த்தின் முக்கிய குறிகாட்டியாக அமைந்துள்ளது. இந்த வகையிலே குடும்பத்தின் பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் பெண் என்றுமே முக்கிய இடத்தினைப் பெற்று வந்துள்ளாள்.

பண்டைய சமூகத்தில் பெண்கள் தமது குடும்பம், வாழ்ந்த சமூகம் என்பவற்றின் மேல்நோக்கிய நகர்விற்காக உயர் பண்பாடு, பாரம்பரியங்களைப் பேணிக் காக்க வேண்டியவர்களாக இருந்துள்ளனர். இதற்கு பெண்களுக்கும் சமயத்திற்கும் இருந்த நெருங்கிய தொடர்பே காரணம் ஆகும். இந்தவகையிலே இந்துமரபு பெண் தனித்து இயங்க முடியாதவள் என்றே கருதியது. இதுவே சமூகத்தின் கருத்தாகவும் காணப்பட்டது.

ஆறுமுகநாவலர் பெண்கள் பற்றி தெரிவித்த கருத்துக்கள் யாழ்ப்பாண சமூக அமைப்பிலே பெண் தனித்து இயங்க முடியாதவள் சார்ந்து நின்றே தன்னை உயர்த்த வேண்டியவளாக காணப்பட்டாள் என்பதை தெளிவுபடுத்துகின்றது. நான்காம் பாலபாடத்திலே "பெண்கள் இளமைப் பருவத்திலே பிதாவினாலும் யௌவனத்திலே கணவனாலும் மூப்பிலே புத்திரரினாலும் காக்கத்தக்கவர். ஆகையால் ஒருபோதும் பெண்கள் சுயாதீனரல்லர். தகப்பன் கணவன், பிள்ளைகள் இவர்கள் இல்லாமல் தனித்திருக்க விரும்பும் பெண் பிறந்த குலம் புகுந்த குலம் இரண்டிற்கும் வசையை உண்டாக்குகிறாள்" என்று குறிப்பிட்ட நாவலர் அவர்கள் மூன்றாம் பாலபாடத்திலே "பெண்களுக்கு விவாகமே உபநயனமாகும் கணவனுக்கு பணிவிடை செய்தலே குரு வழிபாடாகும். சமையல் முதலிய வீட்டு வேலைகளே அக்னி காரியமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்தில் இவ்வாறு பெண்ணைப் பற்றி சிந்தித்தமைக்குக் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டியவள் பெண் என்ற சிந்தனை காரணமாக அமைந்திருக்கலாம். பின்னர்

தேவையின் நிமித்தம் குடும்பம் சமூகம் என்பன கட்டுப்பாடுகளை விதித்திருக்கலாம். ஆனால் இந்துமரபு பெண்களுக்கு கல்வியறிவு தேவை இல்லை என்று என்றுமே மறுக்கவில்லை என்றே கூறுதல் வேண்டும். இந்துமரபு பெண்களைப் புறக்கணிக்கவில்லை என்பதற்கு இருக்கு வேதத்திலும் யசுர் வேதத்திலும் சான்றுகள் உள்ளன. இவை

"கல்வியும் இளமையும் நிறைந்த மணமாகாத தனது
மகளை கல்வியறிவு நிரம்பப் பெற்ற ஒருவனுக்கு
மணம் முடித்து வைக்க வேண்டியது தந்தையின் கடமை"

"பிரம்மச்சரியம் எனும் மாணவப் பருவம் நிறைவு பெற்ற பின்னரே
தனது மகளை மணம் முடித்துக் கொடுத்தல் தந்தையின் கடமை"

எனக் குறிப்பிடுகின்றன. பெண்களின் கல்வி அறிவு வளர்கின்ற பொழுதே குடும்பமும் சமூகமும் உலகமும் மேன்மை அடைய முடியும் என்று இந்துமரபு கருதுகின்றமை இதன் மூலம் தெளிவாகின்றது.

பெண்களின் அறிவைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டிய இந்துமரபின் வழியில் கட்டியெழுப்பப்பட்ட யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே பெண்களின் கல்வி நிலைமைகளை அறிவதற்காக பண்டைய யாழ்ப்பாணத்தில் பொதுவாகக் கல்வி நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பது ஆராயப்படுதல் வேண்டும்.

கல்வியானது யாழ்ப்பாணத்துப் பாரம்பரியத்துடன் ஒன்றுவிட்ட அம்சமாகும். மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்தது கல்வி என்று சொல்லும் அளவிற்கு யாழ்ப்பாணத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். பண்டைய தமிழ் மரபின் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற சிந்தனை யாழ்ப் பாணத்தவரது வாழ்வில் நடைமுறையாயிற்று என ஆறுமுகம் (1995) சுட்டிக்காட்டுகின்றார். இந்த வகையிலே யாழ்ப்பாணத்தவரது பண்பாட்டுப் பாரம்பரியத்துடன் ஒன்றிவிட்ட பாரம்பரியக் கல்வி அமைப்பை அறிதல் சிறப்பானது.

## 2.3 பாரம்பரியக்கல்வி மரபு

வரலாற்றுச் சான்றுகளுக்கு எட்டாத காலத்தின் கல்வி அமைப்பினை திட்டவட்டமான முறையில் வரையறை செய்து காட்டுவது கடினமானது. எனினும் பண்டைய யாழ்ப்பாணத்து தமிழ்ப் பெண்களின் அறிவு நிலைமைகளை அறிவதற்கு யாழ்ப்பாணத்து பாரம்பரியக் கல்வி முறைபற்றி அறியப்படுவது தேவையானதாகும்.

இலங்கையின் பண்டைய வரலாறு தவிர்க்க முடியாத வகையில் இந்திய நாட்டுடன் இணைக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கை மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் சார்ந்த வாழ்க்கையிலே இந்தியச் செல்வாக்கு மிகுதியாய் இருந்ததென்பது வெள்ளிடைமலை. குறிப்பாக ஏறத்தாழ பதினைந்தாம் நூற்றாண்டு முடியும் வரையும் இந்திய நாகரிகத்தில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்கள் ஒவ்வொன்றும் இத்தீவிலும் அதன் அடையாளத்தைப் பொறிக்கத் தவறவில்லை என்றே கூறுதல் வேண்டும். இந்த வகையிலே யாழ்ப்பாணத்துப் பாரம்பரியக் கல்வி முறையிலும் இந்திய நாட்டின் குறிப்பாகத் தமிழ்நாட்டின் செல்வாக்கினைக் காணக்கூடியதாக இருந்தாலும், யாழ்ப்பாணச் சமூக அமைப்பு தனக்கெனத் தனித்து வமான பண்புகளைக் கொண்டிருந்தது என்பது ஒரு பெரிய உண்மை ஆகும்.

இலங்கையிலே ஆரியரது வருகையைத் தொடர்ந்து பிராமணியக் கல்வி முறையும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் இடம்பெற்ற பௌத்த மதத்தின் வருகையுடன் பௌத்தமதக் கல்விமரபும் பரவின. ஒரு இனத்தின் பண்பாட்டுச் செல்வத்தை அந்த இனத்தவர் அடை வதற்கு உதவுவதில் கல்வி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த வகையிலே பண்பட்ட பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்திலும் பாரம்பரியக் கல்வி முறை ஒன்று இருந்துள்ளது.

ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு உள்ளது என்றால் அங்கு முன்பு இருந்த நிலையில் மாறுதல் ஏற்பட்டு உள்ளது என்ற கருத்தே வெளிப்பட்டு நிற்கின்றது. இந்த வகையிலே

யாழ்ப்பாணத்தின் கல்வி முறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு உள்ளது என்றால் யாழ்ப்பாணத்திலும் பண்டைய கல்விமுறை ஒன்று இருந் திருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளலாம். இந்த வகையிலே யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு எனவும் ஒரு கல்விப் பாரம்பரியம் இருந்திருக்கலாம்.

பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவிய பெண்கல்வி மரபின் நிலைமையை அறிவதற்காக யாழ்ப்பாணத்து பாரம்பரியக் கல்வி மரபிலே ஆண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் என்ன நிலை யில் இருந்தன, சகல ஆண்களுக்கும் கல்வி கற்க வாய்ப்புக்கள் கிடைத்தனவா? என்பன பற்றி அறியப்படுவது அவசியமானதாகும்.

பண்டைய யாழ்ப்பாணத்தில் சமயக்கல்வி முறையே வழக்கில் இருந்ததாகத் தெரிய வருகின்றது. எனினும் இக்கல்வியானது ஆண் களுக்கு மட்டுமே உரியதாக இருந்ததினை வரலாற்று ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இருப்பினும் சகல ஆண்களுக்கும் கல்வி அறிவினைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. பண்டைய யாழ்ப்பாணக் கல்வி மரபிலே சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே கல்வி கேள்விகளில் மேம்பட்டு பரம்பரை பரம்பரையாகச் சிறப்படைந்து வந்தனர் எனலாம். இவர்கள் தமது பாண்டித்தியம் மற்றவர்களைச் சென்றடைவதனை பொதுவாக விரும்பவில்லை.

அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் என்ற தனது நூலில் ஜெபநேசன் (1983) "பொதுவாக தமிழ்க் கல்வியும் புலமையும் பாண்டித்தியம் பெற்ற ஒரு சில வித்துவான்களிடம் முடங்கிக் கிடந்தன. அவர்களும் பெரும்பாலும் தமது அறிவை மற்றவர்களுக்கு வழங்க விரும்பவில்லை. சிலர் பிறரிடத்தில் ஏடுகளை வாங்கித் தாம் பிரதி செய்துகொண்டு பாட ஏட்டை இயன்றளவு பிழைபடுத்தி விட்டுக் கொடுப்பார்கள். ஒரு தமிழ் வித்துவான் தான் இறக்குங் காலத்தில் ஏடுகளைத் தனக்கு முன்னே கொண்டு வந்து சுட்டுப் போடுதல் வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து அதன் பின்னரே உயிரை விட்டார்" எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்குறித்த நிலைமைக்கு கல்வி கற்றவர்கள் அறியாமையாகிய இருளில் மூழ்கி இருந்த பெரும்பான்மையான மக்களைத் தமது கட்டுக்கோப்பிற்குள் வைத்திருந்திருக்க எண்ணியமையோ அல்லது நிலமானிய முறையினைப் போன்று கல்வியிலும் ஒரு சிலர் ஏகபோக உரிமையை வைத்திருக்க விரும்பியமையோ காரணங்களாக அமைந்திருக்கலாம்.

இந்து மரபு வழியில் வந்த சமுதாயத்தினர் தந்தை வழி உரிமையில் நம்பிக்கை கொண்டவர்கள். தந்தையே குடும்பத் தலைவன். தந்தைக்குப் பின் தனயன் அவ்விடத்தை வகிக்கின்ற நிலை காணப்பட்டது. குடும்பத்தின் சமயச் சடங்குகள், கிரிகைகள் என்பவற்றில் ஆண்மக்களே முக்கிய இடத்தினைப் பெற்று வந்தனர். குடும்பத்தின் இம்மை, மறுமை ஆகிய இரண்டிற்கும் உதவுபவன் மகனே என்ற சிந்தனை காணப்பட்டது. இதனால் ஆண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற நியதி காணப்பட்டது. ஆனால் பெண்களுக்கு கல்வி தேவையில்லை என்று எண்ணப்பட்டமைக் கான சான்றுகள் எதையும் பெறமுடியவில்லை. ஆண்களுக்கு கல்வி மிகமிக அவசியம் என்று வற்புறுத்தப்பட்ட அதேநேரம் பெண்களுக் குத் திருமணமும் குடும்ப வாழ்க்கையும் கட்டாயமாக்கப்பட்ட நிலை காணப்பட்டது. பெண்ணின் கடமை கொண்ட கணவனுக்கு கீழ்ப் படிந்து பணிவிடைகள் செய்வதென்ற சிந்தனை மேலோங்கியி ருந்தது. இந்நிலை பண்டைய யாழ்ப்பாண மரபில் மட்டுமல்ல தொடர்ந்து வந்த காலங்களிலும் காணப்பட்டுள்ளது.

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த "காவியசேகரய" என்ற இலக்கிய நூலில் பிராமணர் ஒருவர் தனது மகளுக்கு புத்தி கூறும் இடம் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பெண் ஒருத்தியின் நடத்தை ஆணுக்கு பணிந்து நடக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. கற்பு, அடக்கம், பணிபுரிதல், தியாகம், வீட்டிற்குள் இருத்தல், பிள்ளைகளைக் கவனித்தல், கணவன் சுற்றத்தார், கணவனின் நண்பர்களை ஆதரித்தல், கணவனின் உடமைகளைப் பாதுகாத்துப் பேணுதல் என்பன கடைப்பிடிக்க வேண்டியவையாகும். உயர் குலப் பெண்களுக்கு செய்யத்தகாத விதிமுறைகள் சிலவும் காணப்பட்டன.

உரத்துப் பேசுதல், சிரித்தல், ஓடுதல், வீண்பொழுது போக்குதல், சுதந்திரமான பெண்களுடன் பழகுதல் என்பன தகாத செயல்களாக காணப்பட்டன (ஜெயவர்த்தன,1986).

பெண்களைப் பொறுத்தவரையில் இந்துப் பண்பாடும் பாரம்பரியமும் பெண்களைக் கட்டுப்பாட்டுடனேயே வாழ வைக்க விரும்பியது. பெண் "இல்லம்" என்ற எல்லைக்குள் வாழ வேண்டியவள் என்ற சிந்தனைப் போக்கானது பெண்ணின் சுதந்திரமான போக்கை கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆனால் பண்டைய கல்வி மரபில் காணப்பட்ட கல்வி முறையில் பெண்ணானவள் குடும்பம், வீடு என்ற எல்லைக்குள் வாழ்ந்த முறையிலேயே கேள்வி ஞானத்தால் அறிவைப் பெறக்கூடிய வாய்ப்பு காணப்பட்டுள்ளது.

சமூக வாழ்வின் ஆரம்பத்தில் குடும்பமே கல்வி நிலையமாக இருந்தது. தந்தையும் தாயுமே பிள்ளையின் முதலாசிரியர்களாகச் செயற்பட்டனர். தந்தையைப் பார்த்து தனயனும், தாயைப் பார்த்து மகளும் செயற்படக் கற்றுக்கொண்டனர். அக்கல்வி வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான தொழில்களைப் பயிற்றுவதாக இருந்தது. காலஞ் செல்லச்செல்ல தொடர்புகள் பெருக அறிவுத் தேவைகள் விருத்தியடைந்தன. அறிவுத் தேவைகளைக் குடும்பம் நிறைவு செய்யமுடியாத நிலையில் குடும்பம் என்ற எல்லைக்கு அப்பால் கல்வியை நாடிச் செல்லும் நிலை உருவாகியது. இந்தக் கட்டத்திலேயே குருவை நாடிச் சென்று கல்வி கற்கும் முறை உருவாகியது. இந்தவகையிலே யாழ்ப்பாணத்தின் பாரம்பரியக் கல்வி முறையிலேயே அறிவை வழங்குகின்ற பல மரபு முறைகள் தோற்றம் பெற்றன.

## 2.4 யாழ்ப்பாண அரசர்காலக் கல்வி மரபு

யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் இருந்த யாழ்ப்பாணக் கல்வி பாரம்பரியத்தை நோக்குகின்ற பொழுது அரசனே கல்வி வல்லார்க்குப் புரவலனாயிருந்து ஆதரவு அளித்து வந்தான். கல்வி அரச உடமைகளுள் ஒன்றாகவே இருந்தது. புலமையிலும் சமய பக்தியிலும் சிறந்து விளங்கிய மன்னர்கள் கல்வியை வளர்க்க உதவி செய்துள்ளனர்.

கி.பி. 1621ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் வசமாவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே தமிழரசு நிலவியது. பாண்டிய மன்னனின் சேனைத் தலைவனாகிய ஆரியச் சக்கரவர்த்தி என்பான் 1284இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு தனியரசை அமைத்தான். அப்போதைய தலைநகரம் சிங்கை நகர் ஆகும். அவனுக்குப் பின் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர் அனைவரும் "ஆரியச் சக்கரவர்த்தி" என்னும் பட்டப் பெயர் சூடினர். 1621இல் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் வசமாகும் வரையும் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் வட இலங்கையிலே தமிழரசு நிலவியது. யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலின்படி ஆரியச்சக்கர வர்த்தி என்னும் பெயர் பூண்ட தமிழரசர் பன்னிருவர் ஆவர். இவர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிறப்புப் பெயரை மாறி மாறிப் பெற்றதாக அறியப்படுகிறது.

தமிழரசர் காலத்திலே சிறந்த கல்வி நிலை காணப்பட்டது. தமிழ் அரசர்களின் காலத்தில் கல்விச்செல்வத்தில் யாழ்ப்பாணம் செழித்து இருந்ததை அறியக்கூடியதாக உள்ளது. சதாசிவம் (1966) யாழ்ப்பாணத்து தமிழ் மன்னருட் சிங்கைச் செகராசசேகரனும் (1380 - 1414) நல்லூர்ப் பரராசசேகரனும் (1478 - 1519) சிறந்தவர்கள் என்றும், இவ்விருவர் காலத்திலும் தமிழிலக்கியம் சிறப்புற்று வளர்ந்ததாகவும், இவர்களுள் சிங்கைச் செகராசசேகரன் தமிழகத்திலிருந்து தமிழ்ப்புலவர்கள் பலரை வருவித்து இங்கு குடியேற்றியதாவும், குடியிருத்திய புலவர்கள் சிறந்த தமிழிலக்கியங்களை இயற்றித் தமிழ்மொழியை வளப்படுத்தி யதாகவும், எனவே சிங்கைச்செகராசசேகரனின் வரலாறு பொன் னெழுத்துகளாற் பொறிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண தமிழரசர்களின் காலத்தில் நூல்கள் பலவும் எழுந்துள்ளன. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களுள் சிங்கைச்செகராசசேகரன் முதன்மையானவன். இவன் புலவர்கள் பலரை ஆதரித்து அவர்களைக் கொண்டு நூல்கள் பலவற்றை இயற்றுவித்தான். அந் நூல்களுள் இரண்டு இன்றும் இவனது பெயர் கொண்டு விளங்குகின்றன. அவற்றுள் ஒன்று "செகராசசேகரம்" என்னும் வைத்தியநூல். மற்றையது "செகராசசேகர மாலை" என்னுஞ் சோதிட நூல் (சதாசிவம், 1966).

தமிழ் மன்னர்கள் காலத்தில் எழுந்த நூல்கள் அக்காலத்தில் நிலவிய கல்விச் செழிப்பையே எடுத்துக் காட்டுகின்றன. கல்விச் செழிப்பிலே பெண்கள் தொடர்பான சிந்தனைகளும் சிறப்பாக இருந்துள்ளது. நடராசா (1982) சிங்கைச் செகராசசேகரனாற் செய்விக்கப்பட்டது எனக் கருதப்படும் செகராசசேகரமாலை என்ற சோதிடநூல் மகளிர்வினைப்படலம், மைந்தர்வினைப்படலம், மணவினைப்படலம், கூழ்வினைப்படலம், பலவினைப்படலம், வேந்தர்வினைப்படலம், கோசரப்படலம், யாத்திரைப்படலம், மனைவினைப்படலம் என்ற ஒன்பது படலங்களைக் கொண்டு விளங்கியதாகக் குறிப்பிடுகின்றார்.

செகராசசேகரமாலையின் ஒன்பது படலங்களிலும் முதலாவது படலமாக அமைந்து இருப்பது மகளிர்வினைப்படலம் என்பதில் இருந்து பண்டைய யாழ்ப்பாண மரபிலே பெண்களுக்கு ஓரளவு சிறந்த நிலை வழங்கப்பட்டிருந்தது என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாண மன்னன் பரராசசேகரன் தான் பெற்றெடுத்த பிள்ளைகளில் ஆண், பெண் என்ற வேறுபாடு காட்டாது எல்லோரையும் நல்ல முறையில் வளர்த்தான் என அறியக்கூடியதாக உள்ளது. முத்துத்தம்பிப்பிள்ளை (1933) "வள்ளியம்மை வயிற்றில் பரநிருபசிங்கனும் அவன் தம்பியர் இருவரும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். மங்கத்தம்மாள் வயிற்றில் சங்கிலி என்றொரு புத்திரனும் பரவை என்றொரு புத்திரியும் பிறந்தார்கள். அரசன் இப் புத்திரரையெல்லாம் அன்போடு வளர்த்துக் கல்வியிலும் யுத்த வித்தையிலும் வல்லவர்கள் ஆக்கினான்" எனக் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண இராச்சியத்தில் பெண்கள் அரசிகளாகவும், காப்பரசிகளாகவும் இருந்து நல்ல பழக்க வழக்கமுடையவராகி, விருந்தோம்பி வாழ்ந்துள்ளார்கள். இந்த வகையிலேயே அரசவம்சத்துப் பெண்கள் கல்வியறிவைப் பெற்றிருக்கலாம். பண்டைய யாழ்ப்பாணக் கல்விமரபிலே பெண்கள் சைவத்தின், தமிழின், தன் இனத்தின் உயர் பண்புகளைப் பேணுவதில், பேணிப்பாதுகாப்பதில், வளர்ப்பதில் முன்னிலையில் நின்று உழைத்துள்ளார்கள். எமது

இனத்தின் கல்வி ஆயுள் அகன்று விரிவதற்கு இத்தகைய அரசர் குலப் பெண்களின் பங்களிப்பும் காரணமாக அமைந்து இருக்கலாம்.

யாழ்ப்பாண மன்னர்கள் பரந்த கல்விச் சிந்தனை உடையவர்களாக விளங்கினர். யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன் கல்வித்துறை எல்லாம் கடைப்போகக் கற்ற மகாபண்டிதனாக இருந்துள்ளான். அவன் ஊர்கள் தோறும், பாடசாலைகள் அமைத்து, அங்கே சிறுவர்களையெல்லாம் கல்வி பயில்வித்தான். சோழ, பாண்டிய, தொண்டை மண்டலங்களினின்றும் பண்டிதர்களை வரவழைத்து ஈழநாட்டிலுள்ள புலவர்களோடு நல்லூரில் ஒரு தமிழ்ச்சங்கம் அமைத்தான். யாழ்ப்பாணத்திலிருந்த சரஸ்வதி மஹாலில் இல்லாதிருந்த வடமொழி, தென்மொழி நூல்களையெல்லாம் தமிழ்நாட்டினின்றும் வரவழைத்து வைத்தான் (முத்துத்தம்பிப்பிள்ளை,1933).

யாழ்ப்பாணத் தமிழ் அரசன் செகராசசேகரன் "தமிழ்ச்சங்கம்" என்ற கல்விநிலையத்தை அமைத்ததோடு மட்டுமல்லாது, ஏனையோரும் கல்வியறிவைப் பெறவேண்டும் என்ற பரந்த நோக்கோடு "சரஸ்வதி மஹால்" என்ற நூல்நிலையத்தை அமைத்தமை அக்காலத்தில் இருந்த பரந்த கல்விச் சிந்தனையை எடுத்துக்காட்டுகின்றது.

யாழ்ப்பாண மன்னர்களின் காலத்தில் "தமிழ்ச் சங்கம்" "சரஸ்வதி மஹால்" என்ற நிலையங்கள் அறிவை வளர்க்கும் நிலையங்களாக அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்துள்ளமையால், யாழ்ப்பாண அரசர்களுக்கு முற்பட்ட காலத்திலேயே குருகுலக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டு இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

## 2.5 குருகுலக்கல்வி மரபு

குருகுலக் கல்வியின் ஆரம்பம் வீடு எனலாம். இங்கு தந்தையே குருவாக இருந்து மைந்தனுக்குத் தேவையான அறிவைப் புகட்டினார். தாய் மகளுக்கு குருவாக இருந்து குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அறிவை வழங்கினாள். காலம் செல்ல, தேவைகள் பெருக, தொடர்புகள் விரிவடைய குருவை நாடிச் சென்று கல்வி கற்கின்ற குருகுலக் கல்விமரபு தோற்றம் பெற்றது. குருகுலக் கல்வி

மரபில் கல்வி உரிமை யாவருக்கும் கிடைக்கவில்லை. கல்வி ஒரு சிலருக்கு உரியதாகவே காணப்பட்டது.

குருகுலக் கல்வி அமைப்பிலே ஆண்கள் குருவை நாடிச் சென்று, குருவின் வீட்டில் தங்கி, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி, அறிவைப் பெற்றுக்கொண்டனர். குருகுலப் பள்ளிக்கூடங்களிலே பெரும்பாலும் அழகியற் கல்வியே கற்பிக்கப் பட்டது. இசை, நடனம் போன்றவை இங்கு பிரசித்தி பெற்று விளங்கின. இன்று பிரபலம் பெற்று விளங்கும் தவில், நாதஸ்வரக் கலைகள் இன்றும் குருகுலக் கல்விவாயிலாகக் கற்பிக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குருகுலக் கல்வி மரபிலே பெண் ஒரு குருவை நாடிச் சென்று கல்வி கற்றாள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரத்தையும் பெறமுடிய வில்லை. வீட்டின் எல்லைக்குள் தாயே குருவாக இருந்து மகளுக்குத் தேவையான அறிவை வழங்கினாள். சில சமயம் குருகுலக் கல்வி நடைபெற்ற வீட்டுச் சூழலிலே வாழ்ந்த பெண்கள் கேள்வி ஞானத்தால் அறிவைப் பெற்றிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

கி.பி.1505ஆம் ஆண்டு இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருவதற்கு முன் எழுதுஞ் சாதனமாக காகிதத்தை இலங்கை மக்கள் அறியவில்லை. இணுவிலைச் சேர்ந்த அ.வை. கதிர்காமநாதன் உபாத்தியாயர் அவர்களுடன் 14.12.1997 மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் இவர் வாய்மொழி மரபே பாரம்பரிய கல்விமுறையின் சிறப்பான கற்பித்தல் ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது எனக்குறிப் பிட்டு, வாய்மொழி மரபில் நடைபெற்ற குருகுலக் கல்விச் சூழலிலே வாழ்ந்த பெண்கள் கேள்வி ஞானத்தால் அறிவைப் பெற்றிருக்கலா மெனச் சுட்டிக்காட்டினார். இக்கருத்தை திருமதி.கோகிலா மகேந்திரன் அவர்களும் 20.12.1997 அன்று நடைபெற்ற நேர்காணலில் உறுதிப்படுத்தினார்.

இன்றைய பெண்கல்வி நிலைமைகளோடு ஒப்பிடுகின்ற பொழுது பண்டைக்காலப் பெண்களின் கல்விநிலை தாழ்ந்த நிலையில் இருந்திருக்கலாம் எனக் கருதப்பட்டாலும், பெண் அறிவற்றவளாக இருந்தாள் எனக் குறிப்பிட முடியாது (கோகிலா மகேந்திரன்,1997).

பெண் கல்வி கற்பது அவளின் திருமண வாழ்க்கைக்குத் தடையாக அமையும் என்ற சிந்தனை பண்டைய யாழ்ப்பாண சமூக அமைப்பிலே காணப்பட்டமை, பெண் கல்வி நிலமைகள் தாழ்வாகக் காணப்பட்டமைக்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

இந்துப் பண்பாடு பெண்களை இல்லத்திற்கு உரியவர்களாகவே கருதியது. இதனால் வீட்டைவிட்டு வெளியேறி குருவிடம் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பினை அக்காலக் குடும்பச்சூழல், சமூகநிலை என்பன வழங்கவில்லையாயினும் சமயம், கலாசாரம், வாழ்க்கைரீதியான அறிவு பெண்களிடம் இருந்ததென நாயன்மார் கட்டைச் சேர்ந்த வித்துவான் க.சொக்கலிங்கம் அவர்கள் 21.12.1997 அன்று நடைபெற்ற நேர்காணலில் சுட்டிக்காட்டினார். இந்த வகையிலே புராணக் கதைகளைக் கேட்பதன் மூலம் பெண்கள் மேற்குறித்த சமயம், கலாசாரம், வாழ்க்கை ரீதியான அறிவினைப் பெற்றிருக்கலாம்.

## 2.6 புராணபடன மரபு

சிவபுராணங்களைக் கேட்க வேண்டும் என்பது சைவசமயத்தவர்களின் பொதுநம்பிக்கையாக இருந்தது. குடியிருக்கும் வீடு பெற்ற முக்கியத்துவத்தை விட கோயில்களின் முக்கியத்துவம் சிறப்பானதாகக் காணப்பட்டது. மக்களின் வாழ்க்கையில் ஆலய தரிசனமும், வழிபாடும், அதனோடு இணைந்த பூசைகள், திருவிழாக்கள் என்பனவும் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டன. ஆலய தரிசனத்தின் மூலம் தமக்குத் தேவையான அறிவு, மற்றும் அடிப்படைத்தேவைகள் யாவும் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்பட்டது. இந்த வகையிலே கிராமங்களிற் புராணங்களுக்குப் பொருள் கூறப்பட்டு வந்ததோடு பொதுமக்கள் அவற்றைக்கேட்டு, ஒழுக்கமும், கல்வியறிவும் பெற்று வந்தனர் (கனகரத்தினம், 1985). இத்தகைய முக்கியத்துவத்தினாலேயே யாழ்ப்பாண கலாசாரத்தின் மூலம் கந்தபுராணம் என கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் பொதுவாகப் பெரும்பான்மையான கோயில்களில் புராணங்களைப் படித்து அவற்றுக்குப் பொருள் கூறப்பட்டு

வந்த மரபு காணப்பட்டுள்ளது. மக்கள் அவற்றைக்கேட்டு ஒழுக்கம், கல்வியறிவு என்பவற்றைப் பெற்றதோடு, மக்கள் தமது வாழ்க்கையைச் செம்மையாக்க உதவும் அறம், தர்மம், பொதுநலம் போன்ற பொதுப்பயன்பாடுகள் பலவற்றைப் பெறவும் புராணப்படிப்பு மரபு துணை புரிந்தது.

ஈழநாட்டிலே மூன்று வகையான புராணபடன மரபுகள் நிலவி வந்துள்ளன. முதலாவது முறையில் கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலான நூல்கள் மிகவும் புனிதமான நூல்களாகக் கருதப்பட்டு வந்தமையால் கோயில்களிலேயே வாசித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தன. இந்து மரபு, பெண்கள் ஆலயங்களுக்குச் செல்வதைத் தடை செய்யவில்லை. பொதுவாகப் பெண்கள் கோயில்களோடு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியிருந்தனர். ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட பெண்கள் அனைவரும் புராணக் கதைகளைக் கேட்டு அறிவினை வளர்த்துக் கொள்கின்ற சந்தர்ப்பத்தைப் பெற்றனர்.

இதிகாச புராணங்கள் வீடுகளிலும் மக்கள் கூட்டமாகத் தொழில் புரியும் இடங்களிலும் வாசிக்கப்பட்டு பயன் சொல்லப்பட்ட முறை இரண்டாவது முறையாகக் காணப்பட்டது (கனகரத்தினம், 1985). பண்டைய காலத்தில் மக்கள் ஒன்றுகூடி குழுவாக வேலை செய்துள்ளனர். சிறப்பாகப் பெண்கள் பன்னவேலை, மாலைகட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்ட நேரங்களில் இதிகாச புராணங்கள் படிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் வாழ்க்கைக்குத் தேவையான சமய ரீதியான அறிவு பெண்களிடம் சிறப்பாகக் காணப்பட்டதாக வித்துவான் சொக்கலிங்கம் (1997) குறிப்பிட்டார்.

புராணபடனத்தின் மூன்றாவது முறையாக கதை வாசிக்கப்பட்டது. இதில் இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களைப் படித்துப் பயன் சொல்லும் வழக்கம் காணப்பட்டது. காப்பியப் படிப்பு ஆலயங்களிலும், இல்லங்களிலும், தொழிற்கூடங்களிலும் நடைபெற்று வந்துள்ளது. காப்பியப் படிப்பினால் பெண்களுக்கும் தர்ம சிந்தனைகள் மேலோங்கி வளர்ந்தன. தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில் தர்மமே வெற்றியடையும் என்பதை நன்கு

உணர்ந்திருந்தனர். பண்டைய யாழ்ப்பாணத்து தமிழ்ப்பெண்கள் வாழ்க்கையின் வெற்றிக்குத் தேவையான தர்மசிந்தனைகளோடு ஒழுக்கமாகவும் பிற்கால சந்ததியினரின் சிறந்த வாழ்க்கைக்குத் தாங்கள் ஒரு முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்ற குறிக் கோளோடும் வாழ்ந்து வந்ததாக கதிர்காமநாதன் (1997) குறிப்பிட்டார்.

இந்து மக்களிடையே புராண பாரம்பரியத்தையும், கலாசார மரபினையும், தத்துவ சிந்தனையையும், சமய நோக்கினையும் வளர்த்துச் சென்றது கந்தபுராணபடனம் எனக் குறிப்பிடும் கனகரத்தினம் (1985) புராணப்படனமானது அமிர்தாஞ்சனமாகத் திரட்டப்பட்டு மக்களிடையே அளிக்கப்பட்டதாகவும், இதற்குச் சிறியோர், பெரியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதோர், ஆண், பெண் என்ற பாகுபாடுகள் இருக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

ஈழநாட்டிலே கந்தபுராணப் படிப்பின் செல்வாக்கினை ஆறுமுகநாவலர் பின்வருமாறு சிறப்பித்துக் கூறுகின்றார்

"இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யும் கோயில்கள் மிக அரியன. இத்தேசத்திலே அது செய்யப்படாத கோயில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவசமயகுருமார் முதலியோருள் ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் சிலர்"

ஈழநாட்டிலே ஆண்களைவிடப் பெண்களே கூடுதலாகப் புராணப் படிப்பு கேட்பதில் ஆர்வம் உடையவர்களாக வாழ்ந்தனர் என எண்ணத் தோன்றுகின்றது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் "கந்தபுராணம் யாழ்ப்பாணப் பெண்களின் உதரத்தில் நன்கு ஊன்றியிருந்தது" எனக் குறிப்பிடுகின்றார்.

சைவத்தமிழ் வரலாற்றில் பெண்கள் சைவப்பண்பாட்டைக் காப்பதில் பெரிதும் பங்கேற்று உள்ளனர். திருமுறைகளை இல்லந் தோறும் பூசை வழிபாட்டிற் படித்து, தம் சந்ததி அதைப் பேணக் காலகாலமாகச் சைவப் பெண்கள் உதவியுள்ளனர். குடும்பப் பாங் கையும், கணவனுக்கு நல்ல வாழ்க்கைத் துணையாக நிற்பதையும்

இல்லத்தில் இனிது பேணிய பண்பாடு, ஈழநாட்டுப் பெண்மணி களுக்கு உரிய பண்பாடாகக் காணப்பட்டது. எழுத்தறிவு இல்லாத பெண்களிடத்தேயும் திருமுறைகளை கேள்வி ஞானத்தால் பாராயணம் செய்யும் திறனும் புராணப் படிப்புக்களை அறியும் ஆர்வமும் இருந்து வந்தமையை அறிய முடிகிறதென சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 18.12.1997 அன்று இடம்பெற்ற நேர்காண லின் போது குறிப்பிட்டார்.

## 2.7 திண்ணைப்பள்ளி மரபு

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியக் கல்விமரபில் திண்ணைப்பள்ளி மரபும் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தது. குருகுலக் கல்வி அமைப்பில் இருந்து வளர்ச்சி பெற்ற ஒரு முறையாக இது அமைந்துள்ளது. பொதுவாக திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கிராமத்து ஆசிரியரின் வீட்டுத் திண்ணைகளிலேயே நடைபெற்று வந்தன. ஆறுமுகம் (1995) தமிழ், சங்கீதம் என்ற இரு மொழிகளிலும், சைவ சமயத்திலும் ஆழமான அறிவு படைத்த ஆசிரியர்கள் தமது வீடு தோறும் (திண்ணைகளில்) நடாத்திய பள்ளிக்கூடங்களே திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

திண்ணைப்பள்ளி மரபில் ஒவ்வொரு மாணவரதும் உடல், உள, மனவெழுச்சிகளுக்கு ஏற்ப கற்றல், கற்பித்தல் நிகழ்ந்தது. இம் மரபில் மணலைப் பரப்பி அதில் எழுதிப் பழகுதல். ஏடுகளில் எழுத்தாணிகளால் எழுதுதல் போன்ற கற்றல் நடவடிக்கைகள் நடைபெற்றன. இதனை பிரான்சிஸ் (1984) "மாணவர்கள் சப்பாணி கொட்டி உட்கார்ந்து தமக்கு முன்பே பரப்பட்டிருந்த புழுதி மணலில் எழுதக் கற்றுக்கொள்வார்கள். ஏட்டுச் சுவடிகளிலுள்ள எழுத்துக் களை அடையாளம் காணும்வரை இத்தகைய படிப்பு நடந்து கொண்டேயிருக்கும். ஏட்டுச் சுவடிகளிலே சொற்கள் இடைவெளி யின்றியே எழுதப்பட்டிருக்கும். இச் சொற்களுக்கு அவர்கள் பொருள் காண முயற்சிப்பர்" எனக் குறிப்பிடுகின்றார்.

திண்ணைப்பள்ளி மரபில் எல்லோருக்கும் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆசிரியர் மாணவர்களிடம் சில வினாக்களை எழுப்பி, அதற்கு அவர்கள் கூறும் விடைகளை

அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் தெரிவு நடைபெற்றதோடு, திறமையின் அடிப்படையில் மாணவர்கள் பிரிக்கப்பட்டு, பாடங்கள் கற்பிக்கப்பட்ட முறையும் காணப்பட்டது. வயது வேறுபாடின்றி அறிவுத்தரத்தை அடிப்படையாக வைத்தே திண்ணைப்பள்ளி மரபில் கல்வி போதிக்கப்பட்டது. சில பாடங்களைப் படிப்பிக்கும் பொழுது ஏறத்தாழ பத்துப் பன்னிரண்டு வயது வித்தியாசம் உள்ளவர்களாக வும் மாணவர்கள் அமைந்திருந்தனர்.

பாரம்பரியக் கல்வி மரபிலே ஆரம்பக்கல்வி பெரும்பாலும் குடும்பச் சூழலிலேயே வழங்கப்பட்டது. ஆரம்பக்கல்வியைப் பெற்ற பின்னர் மாணாக்கர் திண்ணைப்பள்ளிகளுக்குச் சென்றனர். மாணாக்கர் நடந்து சென்று பாடங்கேட்கக் கூடியளவு தூரத்தி லேயே திண்ணைப்பள்ளிகள் நிலவின. நடந்து செல்லக்கூடிய தூரம் என்பது ஏழெட்டு மைல்களாக அமைந்திருந்தன. ஆசிரியர்களின் இல்லங்கள் திண்ணைப் பள்ளிகளாகக் காணப்பட்ட நிலை மாறிப் பின்னர் ஊரில் உள்ள பெரியவர்களின் வீடுகள் திண்ணைப் பள்ளிகளாக உருவாகின. இத்தகையதொரு அமைப்பில் கேள்வி ஞானத்தால் பெண்கள் அறிவைப் பெற வாய்ப்பு இருந்திருக்கலாம் (சொக்கலிங்கம், 1997). பாடங்களை மனனம் செய்யும் முறையே திண்ணைப்பள்ளி மரபில் முக்கிய கற்றற் செயற்பாடாக அமைந்தி ருந்தது. அதனால் திண்ணைப் பள்ளிக்கூடச் சூழலிலே வாழ்ந்த பெண்கள் கல்வியறிவைப் பெற்றிருக்கலாம்.

திண்ணைப்பள்ளிகளிலே மாணாக்கர் தொகை அதிகரிக்க நேரமாற்றங்கள் நிகழ்ந்தன. காலைப்பள்ளி, மாலைப்பள்ளி, இராப் பள்ளி, நிலாப்பள்ளி என பல வகையாக இக்கல்வி மரபு வளரத் தொடங் கியது. வயது வந்தவர்களுக்கும், குடும்பத்தினருக்குமே பெரும்பாலும் இராப்பள்ளிகள் நடந்தன. வாய்மொழி மரபாக கல்வி போதிக்கப் பட்டமையினால் வெளிச்சம் தேவையானதாக இருக்கவில்லை.

யாழப்பாணக் குடாநாட்டிலே மாடுகளுக்குப் பனை ஓலைகளைக் கிழித்து உணவாகக் கொடுப்பது வழக்கமாக இருந்தது. மாணவர் களும், இவர்களது பெற்றோர்களும் ஆசிரியரைச் சூழ வட்டமாக இருந்து ஓலை கிழிப்பது வழக்கம். ஓலை கிழிக்கும் பொழுது

புராணம், இதிகாசம் பற்றிய உரையாடல்கள் பெரிதும் நடைபெற்றுள்ளன. மரபு வழிக்கல்வியின் மிக முக்கியமான ஓர் அம்சமாக இது காணப்பட்டுள்ளது. இம்மரபிலேயே "இராப்பள்ளி", "நிலாப்பள்ளி" என வழங்கிய வளர்ந்தோர் மரபும் அடங்கியதாக சுவாமிநாதன் (1950) குறிப்பிடுகின்றார். கேள்விச் செல்வம் என்று கூறப்படுகின்ற ஒரு வகைக் கற்றல் கற்பித்தல் முறையின் ஓர் அம்சமாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது. இத்தகைய செயல்களில் ஈடுபட்ட பெண்களுக்கு கல்வி அறிவை வளர்ப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

மரபுவழிக் கல்வியின் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சம் கற்ற குடும்பத்துப் பிள்ளைகள் கல்வியில் ஈடுபடுவதாகும். அக்காலத்தில் கல்வியை தந்தை, அல்லது தாய்மாமன், பெரிய தந்தை போன்றவர்களிடம் இருந்தே பெரும்பாலும் கற்றுள்ளனர். கல்வி ஒரு பரம்பரைச் சொத்தாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இந்த வகையில் வந்த ஒரு பரம்பரை அலகாகவே புலோலியூர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்களின் குடும்பமும் அமைந்தது.

புலோலியில் கல்வி அறிவு, ஒழுக்கங்களுக்கு உறைவிடமாய், சித்த புருசரான மகான் ஒருவரின் அனுக்கிரகம் பெற்ற ஒரு குடும்பமென புலோலியூர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்கள் உதித்த குடும்பத்தைக் குறிப்பிடலாம். சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் தந்தையார் சுப்பிரமணியபிள்ளை அவர்கள், இவருக்கு இருவர் சகோதரர்கள். ஒருவர் சகோதரி ஆவர். இவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் மாமியார் ஆவார். இவரது பெயர் பார்பதி அம்மையார். கல்வி நூற்றாண்டு மலரில் (1969) இவரைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

> *"சகோதரியின் பெயர் பார்பதி அம்மையார். இவரைப் பாறாச்சி என அழைப்பது வழக்கம். வான்மீகத்தைச் சமஸ்கிருதத்தில் வாசித்து விளக்கஞ் செய்யும் திறமை அந்த அம்மையாருக்கு இருந்தது. குறித்த குடும்பத்தில் இரு பெண்பிள்ளைகள் மிக இளம் பருவத்தில் மதுரைப் பண்டித பரீட்சையில் சித்தியெய்த வைத்தவரீ பார்பதி*

*அம்மையார். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்க ளைக் கதை சொல்வதுபோற் கற்பித்து விடுவார் என்று கேள்வி"*

இவ்வாறு யாழ்ப்பாணப் பாரம்பரியக் கல்வி நடவடிக்கையிலே கல்வி பரம்பரைச் சொத்தாக பேணப்பட்டு வந்த மரபினால் பெண்களும் அறிவினைப் பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு பல குடும்பங்கள் சமூக, சமயப் பணிகளில் முன்னின்று உழைத்து உள்ளன. இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் அறிவு பெற்றவர்களாகவும், சமூகத் தொண்டு செய்பவர்களாகவும் இருந்துள்ளனர். ஆனால் மாதர் பணியினை வரலாற்றுப்படுத்தக் கூடிய நூல்களை அக்காலத்தில் ஆக்கத்தவறி உள்ளமையால் யாழ்ப்பாணத்துப் பெண்களின் அறிவுச் சிறப்பை அறிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கலாமென ஆசிரியமணி பஞ்சாச்சரம் அவர்கள் 22.12.1997இல் இடம்பெற்ற நேர்காணலில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் "ஏடு தொடக்குதல்" என்ற கல்விச் சடங்கு மிக முக்கியமான அம்சமாகும். படிக்கத் தொடங்கும் ஒரு மாணவனுக்கு முறைப்படி ஏடு தொடக்குதல் என்னும் சடங்காசாரம் இன்றும் வழக்கத்தில் உள்ளதைக் காணலாம். ஏடு தொடக்கல் என்னும் கல்விப் பிரவேசச் சடங்கு பெரும்பாலும் ஐந்து வயதளவிலேயே இடம்பெறுகின்றது. ஒரு நல்ல நாளில் விசேடமாக வளர்பிறையை அண்டிய நாளில் அல்லது விஜயதசமி அன்று அல்லது தைப்பூசத் திருநாளில் ஏடு தொடக்குதல் என்ற சடங்கு நடைபெறும். இச்சடங்கு பெண்களுக்கு நடாத்தப்படவில்லை என்பதற்கு எவ்வித ஆதாரத்தையும் பெறமுடியாமல் உள்ளது. இதனால் பெண்களுக்கும் அறிவு வேண்டும் என்ற சிந்தனை பாரம்பரியக் கல்வி மரபில் இருந்ததெனலாம்.

யாழ்ப்பாண மரபுவழிக் கல்வியில் மொழி அறிவு மட்டுமல்ல நீதி போதனைகளைப் படித்தறிந்து சீரிய வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதும் பிரதான நோக்கமாக இருந்துள்ளது. வைத்திய, சோதிட ஏடுகளைப் படித்து விளங்கிக்கொள்ள வைத்தல், நாள், திதி, நட்சத்திரம் முதலியவற்றை அறிந்துகொள்ளப் பழக்குதல் என்பனவும்

திண்ணைப்பள்ளியின் மரபாகக் காணப்பட்டன. குடும்பத்தில் நாள், நட்சத்திரம், விரதம் என்ற வகையிலே கவனம் செலுத்தி, வாழ்க்கையை ஒழுங்குபடுத்தியதில் பெண்கள் வகித்த பங்கு முக்கியமானது என்பதனால் வைத்திய, சோதிட அறிவினைப் பெண்களும் பெற்றிருந்தனர். இதனாலேயே பாரம்பரிய மருத்துவ மரபில் "மருத்துவிச்சி" என்ற மரபும் தோன்றியிருந்தது.

யாழ்ப்பாணத்தின் மரபுவழிக்கல்வியில் தொழில் ரீதியான அறிவும் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. தொழில் ரீதியான சமூக அமைப்பிலே தொழிலைப் பயிற்றுவிப்பதில் குடும்பமே முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. இந்த வகையில் பண்டைய யாழ்ப்பாணத்திலே நிலவிய பாரம்பரியத் தொழிற்கல்வி மரபினை அறிதல் சிறப்பானதாகும்.

## 2.8 பாரம்பரிய தொழிற்கல்வி மரபு

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான கல்விமுறையிலே கல்வி "குலவித்தையாகவே" கருதப்பட்டு வந்துள்ளது. கல்வி குலவித்தையாக வழங்கப்பட்டமைக்கு, யாழ்ப்பாணத்தில் நிலவி வந்த தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பே காரணம் என சிவலிங்கராஜா (1983) குறிப்பிடுகின்றார். பாரம்பரியத் தொழில்கள் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த மரபை அக்காலச் சமூகம் பேணி நடந்தமையால், தந்தை தனது தொழிலைத் தனயனுக்குக் கற்றுக்கொடுத்து, கையளித்த நிலைமையினைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தவகையிலே பெண்களுக்கு மனையியல் அறிவும் அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளும் தாயினால் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இதுவே ஆரம்பகாலத்தில் பெண் பெற்ற அறிவு என்று கூறப்பட்டு வருகின்ற நிலையை அறியக் கூடியதாக உள்ளது.

பெண்கல்வி தொடர்பாக பெரும்பாலானவர்கள் கொண்டிருந்த மனநிலை பற்றி மாதவையா என்பவர், பத்மாவதி சரித்திரம் என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"அவள், சங்கு இடத்தில் அவ்வூரில் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடம் உண்டா என்று கேட்டாள். அதற்கு அவள் இல்லையென்று சொல்ல, சாவித்திரி எங்கே படித்தாள் என்று கேட்டாள். அதற்கு துஷ்டச் சங்கு, நான் காட்டுகிறேன் வா என்று கூட்டிக்கொண்டு போய்த் தன் வீட்டுச் சமையற் கட்டிடத்தைக் காட்டி இது தான் சாவித்திரி பள்ளிக்கூடம், இதோ இருக்கும் சட்டி, பானை பாத்திரங்கள் தான் அவள் படித்த புத்தகங்கள், நாம் சாப்பிடும் சாதம் அவளாகப் படித்துத் தேர்ந்து உண்டு பண்ணின கனி"*

பெண்களுக்கு மனையியற் கலையோடு ஆரம்பமான குலவித்தை முறை, பின்னர் தனக்குள்ளே பல முறைகளைக் கொண்டு விருத்தி யடைந்தது. மனையியற்கலை, தையற்கலை என்பவற்றோடு, யாழ்ப்பாண மக்களின் பொருளாதார வளத்தின் கற்பகத்தருவாக இருக்கும் பனைமரத்தின் ஓலையை அடிப்படையாகக் கொண்ட பன்னவேலை அறிவும் குலவித்தையாகப் பெண்களால் அறியப்பட்டது.

யாழ்ப்பாண மக்களின் குடிசைத்தொழிலில் பன்னவேலை குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றிருந்தது. பன்னவேலையின் கீழ் பாய், கடகம், சுளகு, பனங்கட்டிக்குட்டான் போன்ற வீட்டுக்குத் தேவையான பல பொருட்கள் உருவாக்கப்பட்டன. இப் பொருட் களின் அமைப்பு, வடிவம், தரம், அழகு என்பன பன்னவேலை தொடர்பாகப் பெண்களுக்கு இருந்த தொழில்நுட்ப அறிவினை எடுத்துக் காட்டுகின்றன. பன்னவேலைக்காக தெரிந்தெடுக்கப்படும் ஓலையின் தன்மை, வார்ந்து எடுக்கப்படும் அளவு, ஓலைகளுக்கு சாயம் போடும் முறை, நிறங்களின் சேர்க்கை, பொருட்களின் நேர்த்தியான அமைப்பு என்பன பண்டைய யாழ்ப்பாணப் பெண் களின் தொழில்நுட்ப அறிவுக்குச் சான்று பகர்கின்றன.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்களின் தொழில்நுட்ப அறிவினை நெசவு வேலைகளிலும் சிறப்பாகக் காணலாம். கைத்தறி வேலை களில் கூடுதலாகப் பெண்கள் ஈடுபட்டமை, இதனை எடுத்துக் காட்டுகின்றன. இது பின்னர் பன்னவேலை ஆசிரியர், நெசவு

வேலை ஆசிரியர் என்ற ஆசிரிய வகையீடுகள் ஆசிரிய சேவையில் உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்களின் தொழில்நுட்ப அறிவினைப் பூமாலை கட்டும் மரபின் மூலமாகவும் அறியக் கூடியதாக உள்ளது. பூமாலைக்குத் தேவையான பூக்களைத் தேடி எடுப்பதோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு கடவுளுக்கும் உரிய பூக்கள் எவை, என்ன அளவில், எவ்வகையான நிற ஒழுங்குகளில் கட்டப்பட வேண்டும் என்ற வகையிலான அறிவும் பெண்களிடம் சிறப்பாகக் காணப்பட்டது. ஏறத்தாழ 200 வகையான மலர்மாலைகளைக் கட்டக்கூடிய அறிவு அக்காலப் பெண்களிடம் இருந்ததாக அறியப்படுகிறது.

பெண்களுக்குரிய கலைகள் தொடர்பான அறிவு மட்டுமல்ல, ஆண்களோடு தொடர்புபட்ட விவசாயம், சட்டி, பானை செய்தல் போன்ற அறிவுடன் வைத்தியத்தொழிலையும் குலவித்தையாகப் பரம்பரை பரம்பரையாக அறிந்திருந்தனர்.

### 2.9 பாரம்பரிய வைத்தியக்கல்வி மரபு

தலைமுறை தலைமுறையாக மருத்துவ ஏடுகளைக் கற்றும், மருத்துவ இரகசியங்களைப் பேணிப்பாதுகாத்தும், செயல்முறை அனுபவங்களைப் பெற்றும் மேற்கொள்ளப்பட்டு வந்த மருத்துவ முறையைப் பாரம்பரிய மருத்துவமுறை எனக் குறிப்பிடலாம். பாரம்பரிய மருத்துவ முறைகளில் பாண்டித்தியம் பெற்ற யாழ்ப்பாணப் பெண்கள் "மருத்துவிச்சிகள்" என அழைக்கப்பட்டனர்.

பாரம்பரிய மருத்துவ முறையின் சிறப்பினை யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் எழுதப்பட்ட பரராசசேகரம் என்ற வைத்திய நூலின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணத்து மன்னன் செகராசசேகரனின் காலத்தில் பாரம்பரிய வைத்திய மரபு சிறந்திருந்தது. முத்துத்தம்பிப்பிள்ளை (1933) வைத்தியசாலைகளுக்கு வேண்டிய மருந்துகள், மூலிகைகள் எல்லாம் செகராசசேகரன் தனது அரண் மனையிலிருந்து காலந்தோறும் அனுப்பி வைத்ததாகவும், மூலிகை களை எல்லாம் தனது சிங்காரத்தோட்டத்தருகே ஒரு தோட்டம்

வகுத்து அங்கே உற்பத்தி பண்ணிப் பாதுகாத்து வந்ததாகவும் கள்வியங்காட்டிலிருந்த இந்த தோட்டத்திற்கு மருந்துமாமலையெனப் பெயரிட்டதாவும் குறிப்பிடுகின்றார்.

மேலைத்தேயத்தவர்களின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மக்களின் நோய் தீர்க்கும் முறைகளாக பாரம்பரியமான மருத்துவ வசதிகள், கை மருத்துவ வசதிகள், நாட்டார் மருத்துவ வசதிகள் என்பனவே பயன்படுத்தப்பட்டன. பாரம்பரியமான மருத்துவர்கள் சித்தமருத்துவம், ஆயுள்வேத மருத்துவம் என்ற இரு முறைகளையும் இணைத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர். நாட்டார் மருத்துவத்திலே மந்திரங்கள், கரணங்கள், மற்றும் சில மூலிகைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. பாரம்பரிய மருத்துவ முறையில் பயன்படுத்தப்பட்ட சித்தவைத்திய முறையானது ஒருவகையான பாரம்பரிய உளவியல் மயப்பட்ட மருத்துவ முறையாகவும் அமைந்திருந்தது.

பாரம்பரிய மருத்துவ முறையில் நோய் வர முன்னர் காத்தல் என்ற மரபு ஆழமாக வேரூன்றி இருந்தது. நிறை உணவை உண்டு உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தனர். தானியங்கள், கீரைவகை, பருப்புவகை, பால், பழம், சிறுமீன் வகை என நிறை உணவாக உணவு தயாரிக்கும் அறிவு பெண்களிடம் சிறப்பாகக் காணப்பட்டது.

பாரம்பரிய வைத்திய மரபில் சில நோய்களுக்கு மருத்துவரை நாடி சிகிச்சை பெறாது, வீட்டில் உள்ள பெண்களே கைவைத்தியம் பார்க்கின்ற முறை இருந்துள்ளது. இம்முறை இன்றும் எமது பண்பாட்டில் தொடர்ந்து பேணப்பட்டு வருவதினைக் காணக் கூடியதாக உள்ளது.

பாரம்பரிய மருத்துவ முறையிலே சிறப்புத்தேர்ச்சி என்ற பண்பும் காணப்பட்டுள்ளது. வாதநோய், விசக்கடி, சருமநோய், ஆஸ்மா, முறிவுநெரிவு, குழந்தை நோய், பிள்ளைப்பேறு என குறித்ததொரு துறையிலே சிறப்புத் தேர்ச்சியை நாட்டுவைத்தியர்கள் பெற்றிருந்தனர்.

பாரம்பரிய மருத்துவ முறையில் பிள்ளைப்பேற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக பெண்களே காணப்பட்டனர். பிள்ளைப் பேற்றுடன் மட்டும் நின்றுவிடாமல், பிறந்த குழந்தையினை குறித்த சில காலத்திற்குப் பத்தியமாக பேணிப்பாதுகாப்பதிலும் மருத்துவிச்சி கள் முக்கிய இடத்தினைப் பெற்றனர். பிள்ளைப்பேற்றிலும், பிள்ளை வளர்ப்பிலும் மருத்துவிச்சிகளின் பங்கை மருத்துவிச்சிப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மருத்துவிச்சிப் பாடல்களின் மூலம், பிள்ளை பெற்ற தாயை பத்தியம் பார்க்கும் அறிவும் மருத்துவிச்சிகளுக்கு இருந்துள்ளது என்பது தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான வைத்திய மரபில் "பார்வை பார்த்தல்" என்ற சிகிச்சை முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடலில் பூசுவதற்கு விபூதி கொடுத்தல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், வேம்பின் இலையால் அடித்தல் போன்ற முறைகள் இச்சிகிச்சை முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்பகுதிகளில் வாழ்ந்த வயதில் முதிர்ந்த "ஆச்சி" என அழைக்கப்பட்ட வைத்திய ஞானம் உள்ள பெண்கள் இத்தகைய முறையில் நோய்களைத் தீர்க்க உதவி யுள்ளனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. மருத்துவத்துறையில் மட்டுமல்லாது ஆடல், பாடல்களிலும் பண்டைய யாழ்ப்பாணப் பெண்கள் அறிவுள்ளவர்களாக இருந்துள்ளனர்.

## 2.10 பாரம்பரிய அழகியற்கல்வி மரபு

வாழ்க்கையை இரசித்து பற்றுடன் வாழ்வதற்கு அழகியல் உணர்ச்சி தேவையானது. அழகியல் உணர்வு இல்லாத வாழ்க்கை மகிழ்ச்சியான வாழ்க்கையாக அமையுமா என்பது சந்தேகமானதே. பண்டைய யாழ்ப்பாண மக்களிடையே அழகியல் உணர்வுகள், செயற்பாடுகள் சிறந்ததாகவே காணப்பட்டுள்ளன. இதனாலேயே பண்டைய மக்கள் ஆடல், பாடலுடன் இணைந்த வகையில் தங்களின் வாழ்க்கையை நடத்தியதாக அறியப்படுகிறது. யாழ்ப்பாண மக்களினால் விரும்பிக் கற்கப்படும் அழகியற் கலைகளாகிய கர்நாடக இசை, பரதநாட்டியம், வாத்தியக் கருவிகளின் பயன்பாடு என்பவற்றில் எல்லாம் இந்தியச் செல்வாக்கே கூடுதலாகக் காணப் படுகின்றது.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்களின் வாழ்க்கையில் இந்து மரபின் செல்வாக்கு கூடுதலாக இருந்தமையால் பெண்கள் ஆடற் கலையிலும் பார்க்க சங்கீதக் கலைக்கே கூடுதலான முக்கியத்துவம் கொடுத்தனர். இசையுடன் தொடர்புபட்ட செய்யுள்அறிவு, அதன் ஓசை நயம் என்பவற்றை அறிந்தவர்களாக பண்டைய யாழ்ப்பாணப் பெண்கள் காணப்பட்டனர்.

பாரம்பரிய அழகியற் கல்விமரபில் நாட்டார் பாடல் மரபும் காணப்படுகிறது. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்ற சிந்தனையினாற் போலும் வயல்களில், களைபிடுங்குதல், அருவிவெட்டுதல், சூடுமிதித்தல் போன்ற செயற்பாடுகளின் பொழுதும், குழந்தை வளர்ப்பு, விளையாட்டுக்கள் என்பவற்றில் பெண்கள் ஈடுபடுகின்ற பொழுதும் பாடல்களைப்பாடி தமது வேலைகளை மகிழ்வுடன் செய்துள்ளனர்.

பாரம்பரிய அழகியற் கல்விமரபில் கூத்துமரபும் ஒன்றாகும். ஆண்கள் ஆடிய மல்லுக்கூத்து மரபைப் போன்று பெண்களிடை யேயும் கூத்தாடுகின்ற மரபு காணப்பட்டுள்ளது. இக் கூத்து மரபுடன் தொடர்புபட்ட வகையில் இன்றும் சிலகோயில்களில் ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து கூத்தாடும் மரபைக் காணக்கூடியதாக உள்ளது. பருத்தித்துறை நெல்லண்ட பத்திரகாளி கோயிலில் ஆண், பெண் இருபாலரும் நேர்த்தி வைத்து கூத்தாடுகின்ற மரபு இன்றும் காணப்படுகிறது.

பண்டைய யாழ்ப்பாண அழகியல் மரபில் "தேவதாசிகள்" என்ற மரபு இருந்துள்ளது. தேவதாசி என்பதன் கருத்து தேவனுக்கு அடிமையானவள் என்பதாகும். இறைவனுக்கு அடிமையாக இருந்து ஆடல், பாடல் மூலம் இறைவனை மகிழ்வித்தவர்களாக இப் பெண் கள் காணப்பட்டனர். வையாபாடல், கைலாயமாலை போன்ற யாழ்ப்பாண இலக்கியங்களிலே நடனம் பற்றியும், நடனமாடிய பெண்கள் பற்றியும் உள்ளடக்கிய விடயங்கள் தொடர்பாக திருச்சந்திரன் (1997) குறிப்பிடுகின்றார்.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்களிடம் ஆடற்கலையும் பாடற்கலையும் சேர்ந்தே அமைந்திருந்தது. பண்டைய யாழ்ப்பாணப் பெண்களின் அழகியல் மரபில் கும்மியடித்தல், கோலாட்டம் ஆடுதல் என்ற ஆடல் மரபுகளும் காணப்பட்டுள்ளன. பாரம்பரிய வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்த, விவசாயத்தோடு தொடர்புபட்ட விவசாயப் பாடல்கள் பலவற்றை பாடிக்கொண்டு கும்மி, கோலாட்டம் போன்ற நடனங்களில் ஈடுபட்டுள்ளனர் என அறியக் கிடக்கிறது.

பண்டைய அழகியற் கல்வி மரபில் பாரம்பரியமான விளை யாட்டுகளும் இடம்பெற்றுள்ளன. பாரம்பரிய பெண்களின் விளை யாட்டுக்களில் ஊஞ்சல் ஆடுதல் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. ஊஞ்சல் ஆடுகின்றபொழுது பெண்கள் பாடல்களைப் பாடியுள்ள னர். இதனால் பண்டைய யாழ்ப்பாணத்துப் பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அழகியல் அறிவு, அழகியல் உணர்வுகளைக் கொண்டிருந் துள்ளனர்.

பண்டைய யாழ்ப்பாணப் பெண்களின் அறிவு நிலைகளைப் பொதுவாக நோக்குகின்ற பொழுது பெண்களுக்கு மனையியல் அறிவு, தையற்கலை அறிவு என்பவற்றுடன் வாழ்வியல் அறிவு, புராண, இதிகாச இலக்கிய அறிவு, சமய அறிவு, மருத்துவ அறிவு, தொழில்நுட்ப அறிவு, அழகியல் அறிவு என பலவகையான அறிவுகள் இருந்துள்ளன. மேற்குறித்த அறிவுகளோடு அண்மைக் கால ஆய்வுகளின்படி தொல்புரம், சுழிபுரம் போன்ற பகுதிகளில் நூல் அறிவு படைத்த பெண்கள் வாழ்ந்துள்ளனர் எனத் தெரியவரு கிறது. மருத்துவ அறிவில் மேம்பட்ட பெண்களை "மருத்துவிச்சி" என அழைத்ததைப் போன்று, நூல் அறிவு படைத்த பெண்களை "நூலாச்சி" எனக் கூறுகின்ற மரபு இருந்துள்ளதாக அறியப்படுகிறது.

அனுபவத்தின் வாயிலாக, வாழ்வோடு இணைந்த வகையிலே அறிவினைப் பெற்றுக்கொண்ட பண்டைய யாழ்ப்பாணத்துப் பெண்களின் அறிவு வளர்ச்சியில் மேலைத்தேயத்தவர்களின் வருகை குறிப்பிடத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

# 3.
# போர்த்துக்கேயர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்

## 3.1 போர்த்துக்கேயரும் யாழ்ப்பாணமும்

போர்த்துக்கேயர் கி.பி 1621இல் நல்லூரைக் கைப்பற்றி 1658ஆம் ஆண்டு வரையும் அரசாண்டனர் என வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுகையில் யாழ்ப்பாணத்தில் இந்து சமயத்தை அடிப்படை யாகக் கொண்ட மரபு முறைகள், இந்த மரபுகளின் வழியிற் கடைப் பிடிக்கப்பட்ட வாழ்க்கை முறை, அதற்கேற்ற இந்துமரபை அடியொற்றிய கல்வி நடவடிக்கைகள் காணப்பட்டன.

இந்துமரபினை அடியொற்றிய வாழ்க்கை முறையிலே கலை, கலாசாரம், பழக்கவழக்கங்கள், நடை, உடை, பாவனை போன்ற ஒவ்வொன்றிலும் இந்துமதத்தின் செல்வாக்கு பின்னிப்பிணைந்து இருந்தமையைக் காணலாம். இந்த வகையில் பெண் என்பவள் குறிப்பிட்ட சில வழிமுறைகளிலேயே வாழவேண்டும் என்ற கருத்து, எதிர்பார்ப்பு பண்டைய யாழ்ப்பாண சமூக அமைப்பிலே வலுப் பெற்றிருந்தது. இந்து மரபிலே பெண்ணுக்கு குடும்ப வாழ்க்கையே பிரதானமானது என்ற சிந்தனை காணப்பட்டது. இச்சிந்தனையால் மேலைத்தேயத்தவர்கள் வருவதற்கு முன்னர் யாழ்ப்பாணப் பெண்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்படவில்லையாயினும் பண்டைய கால யாழ்ப்பாணத்து ஆண்களைப் போன்று கல்வி யைப் பெறுகின்ற வாய்ப்புக்கள் பெண்களுக்கு வழங்கப்படவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

மேலைத்தேயத்தவர்கள் வருவதற்கு முன்னர் கல்வியானது நிறுவனமயமாக்கப்படாத ஒன்றாகவே காணப்பட்டது. பள்ளிக்கூடக் கட்டமைப்பானது ஒரு ஒழுங்குபடுத்தப்படாத நடைமுறையாகவே இருந்தது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆசிரியருடைய வாழ்விடத்தோடு தொடர்புடையனவாக இருந்தன. பண்டைய குருசிஷ்ய மரபை ஒட்டியதான பண்டைய கல்விமுறை அன்றைய சமூக அமைப்பு, தேவைகள் என்பவற்றுக்கேற்ப மேல்மட்டத்தின ருக்கு உரியதாகவே காணப்பட்டதென ஆறுமுகம் (1995) குறிப்பிடுகின்றார். இத்தகைய நிலைமையிலே பெண்களுக்கு எவ்வளவு தூரத்திற்கு கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும் என்பது ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணத்து குடும்ப அமைப்பிலே, சமூகநிலையிலே பிறப்பைப் பொறுத்தவரையில் ஆண் குழந்தைகளுக்கே வரவேற்பு அதிகமாகக் காணப்பட்டது. பெண்களின் பிறப்பு குடும்பச் சிறப்புக்கு ஒப்பீட்டளவிலே அதிகம் உதவியாக அமையாது என்ற கருத்து அக்காலத்து யாழ்ப்பாண சமூக நிலையிற் காணப்பட்டது. இவ்வாறு கருதப்பட்டாலும் அக்கால தாய்வழிச் சமுதாயத்தில் பெண்களுக்கே சொத்துரிமை வழங்கப்பட்டு இருந்தது.

ஒரு பெண் மணம் முடிக்கும்போது அப்பெண்ணிற்கு சீதனம் கொடுப்பது வழக்கமாயிருந்தது. பெற்றோர் பெண் பிள்ளைகளுக்குத் தேவையான சீதனத்தைச் சேர்த்து அவர்களை விவாகம் செய்து கொடுப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்கள் பெண்கள் கல்வி கற்று அறிவை விருத்தி செய்ய வேண்டுமென எண்ணவில்லை.

பெண்கள் வீடுகளிலேயே தம் வாழ்நாளிற் பெரும்பகுதியைக் கழித்தனர். வீட்டை அழகுபடுத்தல், உணவு சமைத்தல் என்பவற் றோடு மா அரைத்தல், நெல் குற்றுதல், உணவு பரிமாறல், பிள்ளைப் பராமரிப்பு முதலானவற்றில் தமது நேரத்தில் அதிகபங்கைச் செலவு செய்தனர். இதனால் தமது அறிவை விருத்திசெய்வதற்கு அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்றே தெரிகிறது. எனினும் திண்ணைப் பள்ளி, குருகுலக்கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்ற வீட்டுச்

சூழ்நிலையிலே வாழ்ந்த பெண்கள் கேள்வி ஞானத்தால் அறிவைப் பெற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்துப் பெண்கள் மட்டுமல்ல முழு இலங்கையைப் பொறுத்தவரையிலும் போர்த்துக்கேயர் கி.பி 1505ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் எழுதுஞ் சாதனமாகக் காகிதத்தை இலங்கை மக்கள் அறியவில்லை. இத்தகைய ஒரு கல்விச் சூழ்நிலை யிலே போத்துக்கேயரின் வருகையோடு கல்வி நடவடிக்கைகளில் குறிப்பாக யாழ்ப்பாணக் கல்வி நிலைமைகளில் ஓரளவு சிறு மாற்றங் கள் ஏற்படத் தொடங்கின என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை 37 வருடகாலம் தம்வசம் வைத்திருந்தனர். போர்த்துக்கேயரிற்குப் பின்னர் வந்த மேலைத் தேயத்தவர்களான ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள், குறிப்பாக அமெரிக்க மிசனரியினரைப் போன்ற கல்விப்பணிகளைப் பெண்கல்விக்காக இவர்கள் மேற்கொள்ளவில்லை என்றாலும் யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றிலே போர்த்துக்கேயரின் பணிகளை ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது.

மேலைநாட்டவர்களின் வருகைக்குப் பின்னர் ஐரோப்பிய நாகரிகத்தின் செல்வாக்கினை அறியக்கூடியதாக உள்ளது. ஐரோப்பிய நாகரிகத்தின் தாயகமாக கிரேக்கமும் ஆசிய நாகரிகத்தின் உறைவிட மாகப் பாரதமும் காணப்படுகின்றது. கல்வி, முருகியற்கலை, தத்துவம், அறிவியல் ஆகியவற்றினை ஒன்றிணைத்த ஒரு வாழ்க்கை நெறியினை வளர்க்கும் வகையில் இரண்டு நாடுகளும் அறிவுச் சுடரினை உலகரீதியாகப் பரப்பின. இன்றைய உலகில் எந்த நாட்டிலும் இவை ஒன்றினது தாக்கமாதல் இல்லாத நாடு இல்லை என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்தை எடுத்து நோக்கின் இவ்விரு நாடுகளினதும் தாக்கத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

கிரேக்க நாகரிகத்தின் பண்புகளையொட்டி எழுந்த மேற்கு நாடுகளின் நாகரிகம், தத்துவச்சிந்தனைகள், கல்விச்சிந்தனைகள் என்பன பல நூற்றாண்டுகளாக உலகமக்களை வழிநடத்தியதைப் போன்று யாழ்ப்பாணத்தின் நாகரிகம், சிந்தனைகள், கல்வி நடவடிக் கைகளிலும் மேலைத்தேய நாகரிகத்தின் வழிகாட்டல்கள்

செல்வாக்குச் செலுத்தத் தொடங்கின. இந்த வகையிலே போர்த்துக்கேயரின் கத்தோலிக்க மதத்தை அடியொற்றிய வாழ்க்கை முறைகள், நாகரிகம், கல்வி நடவடிக்கைகள் என்பன யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தின.

இரு வேறுபட்ட பண்பாடுகளைக் கொண்ட மக்களிடையே இடைவினைகள் நிகழும் பொழுது பொதுவாக சமூகமாற்றம் ஒன்று ஏற்பட வாய்ப்பு உருவாகின்றது. ஒவ்வொரு பண்பாட்டினரும் ஏனைய பண்பாட்டினர் புதிது எனக் கருதத்தக்க பல பண்பாட்டு அம்சங்களை முன்வைக்கின்றார்கள். இந்நிலையில் ஒரு பண்பாட்டின் அம்சங்களும் இன்னோர் பண்பாட்டின் அம்சங்களும் கலந்து ஊடாடும்போது புதியதொரு மாற்றம் ஏற்படுகின்றது. இந்த வகையிலே மேலைநாட்டவர்களின் வருகையோடு இவர்களது நாட்டுப்பண்பாடுகள் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுடன் கலந்து பல்வேறுபட்ட புதிய மாற்றங்கள் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததை வரலாற்று ஆதாரங்கள் காட்டி நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் பாரம்பரியக் கல்வி முறையோடு இணைந்த வகையிலும், புதிய வகையிலும் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டதாக ரன்ஜித் ருபேறு (*Ranjit Reberu*, **1962**) குறிப்பிடுகின்றார். இந்த வகையிலே மேலைநாட்டவர்களின் வருகையோடு பெண்கல்வியிலும் புதிய மாற்றங்கள் சில ஏற்பட்டன.

போர்துக்கேயரின் ஆட்சியோடு யாழ்ப்பாணத்தில் ஊடுருவிய கத்தோலிக்க மதம் வாழ்க்கை அமைப்பிலே பல மாற்றங்களை ஏற்படுத்தியது. சிலர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்து தமக்கென தனியான பண்டிகைகளையும், வழக்கங்களையும் மேற்கொண்டு, மரபு வழிவந்த யாழ்ப்பாணத்தவரை விட வேறுபட்ட சமுதாயமாக வாழத்தலைப்பட்டனர். போர்த்துக்கேயர் பின்பற்றிய மதத்தைப் பின்பற்றியதோடு நின்றுவிடாமல் அவர்கள் பின்பற்றிய உணவுமுறைகள், வாழ்க்கை முறைகள் என்பவற்றையும் பின்பற்றத் தொடங்கினர். இதன் விளைவாக யாழ்ப்பாணத்தின் கட்டுக்கோப்பான சிந்தனையிலே சிறிதளவு தளர்வு ஏற்பட்டது. விவாகத்தின் பின்னர் தங்கள் கணவரின் பெயரைத் தாங்குகின்ற வழக்கத்தினை

கத்தோலிக்க மதத்தைத் தழுவிய யாழ்ப்பாணப் பெண்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இந்த வகையிலே ஏற்பட்ட தளர்வுகள் சில, பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற சிந்தனை துளிர்விடுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றிலே போர்த்துக்கேயர்களின் வருகை கல்வித்துறையிலே சில மாற்றங்களை ஏற்படுத்தியது எனினும் யாழ்ப்பாணத்தின் பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றுக்கு இசைந்த வகையிலேயே கல்வி மாற்றங்கள் நிகழ்ந்தன. யாழ்ப்பாணத்திலே நிலவிவந்த புலமை மரபிலே கல்வியானது குடும்ப, சமூக ரீதியாக ஆண்களுக்கு உரியதாகவே கருதப்பட்டு வந்த நிலை காணப்பட்டது. போர்த்துக்கேயர்களின் வருகையோடு கல்வி யென்பது பெண்களுக்கும் உரிய ஒன்று என்ற சிந்தனை ஓரளவு வளரத் தொடங்கியது.

போர்த்துக்கேய ஆட்சிபீடத்தினால் கத்தோலிக்க மதத்தைப் பரப்பவென இலங்கைக்கு அனுப்பப்பட்ட மத குழுவினர் தமது நாட்டிலே நல்ல கல்வியறிவு பெற்றவர்களாக இருந்ததோடு அதிக சமய நம்பிக்கை உடையவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் தமது சமயக் கொள்கைகளைப் பரப்ப இலகுவான வழியாகக் கல்விப் போதனையை கருதினர். தாய் மொழியிலேயே கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக இருந்தனர்.

கல்வியின் மூலமாகக் கத்தோலிக்க மதக்கொள்கைகளைப் பரப்ப முனைந்த போர்த்துக்கேய மதக்குழுவினர் கல்விச் செயற் பாடுகளில் ஈடுபட்டதை இலங்கையின் கல்வி வரலாறு காட்டி நிற்கின்றது. இவர்கள் நிறுவன ரீதியாகப் பள்ளிக்கூடங்களை அமைத்து சிறந்த முறையில் நிர்வகித்து வந்தனர். ஆசிரியர் சம்பளம் மாணவர் வரவையொட்டி வழங்கப்பட்டதால் மாணவர் வரவு அதிகரித்தது. சாதி, சமய வேறுபாடின்றி சகல மாணவர்களும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்பள்ளிகளில் பெண்கள் சேர்ந்து படிப்பதற்கு தடைகள் எதுவும் இருக்கவில்லை.

### 3.2 போர்த்துக்கேய மதகுழுவினரின் கல்வி நடவடிக்கைகள்

போர்த்துக்கேயர் தமது குடியேற்ற நாட்டு மக்களைத் தமது மதமாகிய கத்தோலிக்க மதத்திற்கு மாற்ற வேண்டும் என்பதை ஒரு நிலையான கொள்கையாகக் கடைப்பிடித்தனர். இதனால் போர்த்துக்கல் மன்னன் தன்னால் புதிதாக வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசங்களுக்கென அரச ஆதரவிற் பல்வேறு சபைகளையும் சேர்ந்த மிசனரிமாரை அனுப்பி வைத்தான். கி.பி 1505ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த பினனர் யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் கரையோரப் பகுதிகளையும் கைப்பற்றி ஆளுகை செய்த போர்த்துக்கீசரின் முயற்சியாலும், பிரான்சிஸ் சுவேரியார் முதலிய குருமாரின் பிரயாசத்தினாலும் உரோமன் கத்தோலிக்க மதம் யாழ்ப்பாணத்தில் காலூன்றி விருத்தியடைந்தது (வேலுப்பிள்ளை, 1984).

நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய கல்வியை சகலரும் பெறவேண்டும், கல்வி என்பது சமூக, பொருளியல் வளங்களைப் பெருக்குவதற்கான ஒரு வழிவகை என்ற சிந்தனைகள் கிறிஸ்துவத்தி னுள் இணைந்து கிடந்தமையால் மேலைநாட்டவர்கள் சமயத்தை யும் கல்வியையும் இணைத்த வகையிலே தம்முடைய ஆட்சியை நடாத்திச் சென்றனர். இதனால் பழமையைப் பேணுகின்றோம் எனக் கூறிக்கொண்டே புதுமையை அவாவுகின்ற நிலையில் யாழ்ப்பாணச் சமூகமும் மாறவேண்டிய நிலை ஏற்பட்டது.

மூன்றாம் ஜோன் மன்னன் இலங்கையின் மிசனரி அலுவல் களைப் பிரான்சிசு சபைக் குருமாரிடம் ஒப்படைத்தான். கி.பி 1543 இல் பிரான்சிஸ்கன் சபையினரும், 1602 இல் யேசு சபையினரும், 1605 இல் தொமினிக்கன் சபையினரும், 1606இல் அகுஸ்தீன் சபையினரும் வந்து சேர்ந்தனர். போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் இந்நால்வகைச் சபையினரும் இலங்கையில் மிசனரி அலுவல்களை மேற்கொண்டிருந்தனர் (கல்வி நூற்றாண்டு மலர், 1969). இம்மிசனரிச் சபைகளுள் பிரான்சிஸ்கன் சபையினரும், யேசு சபையினரும் யாழ்ப்பாணப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

போர்த்துக்கேய மிசனரிகளின் பராமரிப்புக்கும் சமயக் கல்வி நடவடிக்கைகளுக்கும் நிதி கிடைக்க இலங்கை மன்னர்களும் உதவி செய்துள்ளனர். கோட்டை மன்னனான தர்மபாலன் (கி.பி1551 - 1597) முன்னர் சிங்கள அரசர்கள் புத்த கோயில்களுக்குக் கொடுத்திருந்த நிலங்களைப் பிரான்சிசு சபையிடம் கையளித்தான் எனச் சொல்லப்படுகிறது. இவற்றின் வருமானத்தைக் கொண்டு சுதேச குழந்தைகளுக்காக கல்லூரிகளை நிறுவவேண்டுமென்பதே இக்கொடை மாற்றத்தின் நோக்கமாகும் (கல்வி நூற்றாண்டு மலர்,1969). இவ்வாறெல்லாம் நிதி வசதி பெற்ற மிசனரிமார் தங்கள் பராமரிப்புக்காகத் தங்களுடைய பொறுப்பிலிருந்த மாணவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை இருக்கவில்லை. கல்வி இலவச மாகவே போதிக்கப்பட்டது. எனினும் இவர்களது கல்வி நிலையங் களில் பொதுவாக ஆண்களே கல்வி கற்றதாக அறியப்படுகிறது.

பிரான்சிஸ்கன் சபைக்குருமார் யாழ்ப்பாணத்திற்கு வந்து வசிக்கத் தொடங்கியதும் முதலில் தமது சமயத்தைப் பரப்பவே முயற்சி செய்தனர். பிரான்சிஸ் சவேரியாரின் முயற்சியினால் மன்னாரில் 600 பேருக்கு மேற்பட்டோர் உரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சங்கிலி அரசன் அதைக் கேள்வியுற்று 5000 வீரர் கொண்ட ஒரு சேனையை அனுப்பி அவ்விடங்களில் கிறிஸ்தவர்களான சகலரை யும் சங்கரிப்பித்தான். ஆனால் விரைவிலே சங்கிலி அரசன் அரண்மனையிலும் ரோமன் கத்தோலிக்க மதம் புகுந்துகொண்டது. சங்கிலி அரசனின் குமாரர் இருவரும் அவன் சுற்றத்தார் சிலரும் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். 1545 ஆம் ஆண்டு சவேரியார் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களுக்குச் சென்று, சமய போதகஞ்செய்து அனேகரை ரோமன் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றினார். இதனால் ரோமன் கத்தோலிக்க மதம் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் அதிகமாய்ப் பரவியது (கல்வி நூற்றாண்டு மலர்,1969).

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கோவிற்பற்றுக்களாகப் பிரித்து கோவிற்பற்றுகள் தோறும் ஆலயங்களையும், குருமாருக்கான

வீடுகளையும் கட்டினர். ஆலயங்களில் ஞாயிற்றுக் கிழமைதோறும் குருமார் வைக்கும் பூசைக்குச் சனங்கள் யாவரும் வரவேண்டு மென்றும் தம் மதஞ்சேர வேண்டுமென்று நெருக்கியும் வந்தனர். தம் மதம் தழுவினோருக்கு உத்தியோகம் கொடுத்தனர். இதன் மூலம் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்பி, சைவாலயங்களை இடித்துச் சைவ வழிபாடுகளைத் தடுத்து வந்தனர். அக்காலத்திலே போர்த்துக் கீசருக்கு யாழ்ப்பாணத்திலே 32 ஆலயங்கள் இருந்துள்ளதாக வேலுப்பிள்ளை (1984) குறிப்பிடுகின்றார். போர்த்துக்கேயர் கோவிற் பற்றுக்களில் ஆலயங்களை அமைத்ததோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு கோவிற்பற்றிலும் மிசனரிமார் வதியுமிடங்களிலும் பாடசாலைகளை நடாத்தி வந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இத்தகைய இருபத்தைந்து பாடசாலைகள் இயங்கி வந்ததாக குறிப்பிடப்படுகின்றது (கல்வி நூற்றாண்டு மலர்,1969).

பிரான்சிஸ்கன் மிசனரிமார் தமது கல்விப் போதனைகளை முதலிற் கோயில்களிலேயே ஆரம்பித்தனர். கி.பி 1627 இல் சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, அச்சுவேலி, தெல்லிப்பளை, மயிலிட்டி, பளை ஆகிய இடங்களிலும், கி.பி 1641 இல் மல்லாகத்திலும் தேவாலயங்கள் அமைக்கப்பட்டு அருகே குருமார் வதியும் இடங்களும், பாடசாலைகளும், நாடக அரங்கங்களும் அமைக்கப்பட்டன (வள்ளிநாயகி,1989). பிரான்சிஸ்கன் மிசனரிமார் இங்கு முதலில் விவிலிய வேதத்தையே போதித்தனர். காலப்போக் கில் எழுத்து, வாசிப்பு என்பன கற்பிக்கப்பட்டன. பாரம்பரிய கல்வி மரபில் சமஸ்கிருத, பாளி மொழிகள் பெற்றிருந்த இடத்தை இக்காலத்தில் போர்த்துக்கேய, இலத்தீன் மொழிகள் பெற்றுக் கொண்டன. போர்த்துக்கீச மதகுருமார் ஒவ்வொரு கோவிற்பற்றிலும் பாடசாலைகளை அமைத்து மாணவர்களுக்குத் தமிழ்மொழியில் எழுத்து, வாசிப்பு என்பவற்றைப் போதித்தனர். அத்துடன் போர்த்துக்கீசப் பண்பாடு, கத்தோலிக்க நெறி என்பவற்றையும் போதித்தனர். தலைசிறந்த மாணவர்களைக் கத்தோலிக்க மடாலயங்களுக்கு அனுப்பி மதகுருமாராக்கினர் (ஜெபநேசன், 1983). எமது பண்டைய கல்வி மரபு இந்து மதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நிலையிலே போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தைப்

பரப்புவதற்கான ஊடகமாகக் கல்வியைப் பயன்படுத்தியமையால் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க கல்வி மரபை மக்கள் எதிர்த்தே வந்தனர்.

பிரான்சிஸ்கன் மிசனரியினர் கோயில்களில் நடாத்திய பாடசாலைகளைத் தவிர இன்னோர் வகையான பாடசாலைகளையும் அமைத்திருந்தனர். இவை "கல்லூரிகள்" என அழைக்கப் பட்டன. பிரான்சிஸ்கன் சபையார் கொழும்பிற் புனித அந்தோனியர் கல்லூரியை நிறுவியதுடன் முகத்துவாரத்தில் அநாதைச் சிறுவர்களுக்கான கல்லூரியையும், யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரியையும் நிறுவினர் (கல்வி நூற்றாண்டு மலர்,1969).

பிரான்சிஸ்கன் குருமாரைத் தொடர்ந்து யாழ்ப்பாணச் சமூகத்திலே கல்விப்பணி செய்தவர்களிலே யேசுசபையினர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் 1622ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத் திற்கு வந்து கல்விப் பணியாற்றினர். இவர்களே யாழ்ப்பாணத்திலே முதன் முதலில் கல்லூரியை அமைத்தவர்கள் என்ற பெருமைக்கு உரியவர்கள். யாழ்ப்பாண நகரத்தின் மேற்கு அந்தத்தில் இயேசு சபையாரின் ஒரு கல்லூரியும், ஓர் ஆலயமும் இருந்ததாக வேலுப்பிள்ளை (1984) குறிப்பிடுகின்றார்.

இயேசு சபையினரின் கல்லூரி அமைப்பானது மூன்று கல்விப் பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. முதற் பகுதி ஆரம்பப் பாடசாலையாகும். இங்கு மாணவர்கள் வாசிக்கவும், எழுதவும், பாடவும் கற்பிக்கப்பட்டனர். அவர்களுக்கு வாசிக்கவும், எழுதவும் பயிற்சியளிக்கப்பட்ட மொழி போத்துக்கேய மொழியா கும். இரண்டாம் பகுதி வயது கூடிவரும் அறிவுக்கூர்மை உடையவரு மான மாணவர்களுக்கான இலத்தீன் பாட இலக்கணக் கல்லூரியாகும். குருமாராக வர விரும்பியவர்களுக்கான முக்கிய இடமாக இந்த இலத்தீன் பள்ளி அமைந்தது. மூன்றாவது கல்விப்பகுதி குருத்துவ மாணவருக்கான சமய சித்தாந்தப் பள்ளி யாகும். இதில் ஐரோப்பாவில் இருந்தது போல் பாடபோதனை இலத்தீன் மொழி மூலம் நடைபெற்றிருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தில் இயேசு சபையினர் நடாத்திய கல்லூரி ஓர் ஆரம்பப்

பாடசாலையையும் இலத்தீன் பாடப்பள்ளியையும் மட்டுமே கொண்டிருந்தது (கல்வி நூற்றாண்டு மலர்,1969).

இயேசு சபையினர் சிறுவர்களுக்கென மறைக்கல்வி வகுப்புக் களை நடத்தினர். போர்த்துக்கேய மிசனரிச் சபையினர் கல்வியில் கவனம் செலுத்திய போதும் பெண்கள் இவர்களது பாடசாலைக ளுக்குச் சென்று கல்வி கற்றதற்குச் சான்றுகள் மிக அரிதாகவே உள்ளன. சிலாபத்திலிருந்த தங்குமிடம் பற்றிய கடிதத்தில் "கிறிஸ்து சமயக் கோட்பாட்டிற் காலையிற் பெண்களுக்கும், மாலையில் ஆண்களுக்கும் நாடோறும் பயிற்சியளிக்கப்படுகிறது. இது போன்றே மற்றெல்லாத் தங்குமிடங்களிலும் நடைபெறுகிறது" என்ற செய்தி குறிப்பிடப்பட்டடுள்ளது (கல்வி நூற்றாண்டு மலர்,1969). இந்த வகையிலே பெண்களுக்கும் போதனைகள் நடந்துள்ளன என்பது தெரியவருகிறது.

கிராமப்புறங்களில் வாழ்ந்த பிள்ளைகளின் கல்வி புறம்பான ஓர் அமைப்பு முறையில் நடைபெற்றது. இது இரு வகையாக நிகழ்ந்தது. முதலாவதாக மாணவர்களுக்கு சமயக்கல்வி போதிப்பதே மதகுருமாரின் நோக்கமாக இருந்தது. இந்த வகுப்புக்கள் பொதுவாக கிறிஸ்தவ ஆலயங்களில் நடைபெற்றன. இரண்டாவதாக கிராமத்தி லுள்ள ஆலயத்தையடுத்து அமைந்த பாடசாலைகளிற் சிறிய தொகையான மாணவருக்கு ஆரம்பக்கல்வி புகட்டப்பட்டு வந்தது. இதிலிருந்து கிராமப்புற கோவிற்பற்றுக்களில் இருவகையான கல்வித்திட்டம் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. ஒன்று சமயபாட போதனையை முழுநோக்கமாகக் கொண்டது. குருமார் சமயக்கல்வியை ஆண், பெண் ஆகிய எல்லாக் குழந்தை களுக்கும் போதிக்க முயன்றுள்ளனர்.

இயேசு சபையினர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஓரளவு உதவி உள்ளனர். இயேசு சபையைச் சேர்ந்த உரோபேட்டி நோபிலி என்பவர் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆண்டுகள் தங்கித் தம் உடலைத் தேற்றினார். அவர் தங்கியிருந்த வேளையிற் சிறுவர்க்கு நூல்களை எழுதி நற்பணி செய்தார் எனக் குறிப்பிடப்படுகிறது. பள்ளிக்கூடப் பிள்ளைகளின் தேவைக்காக கீதங்கள், தோத்திரங்கள்,

மத வினாவிடைகள் எல்லாம் தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டன எனவும் அறியப்படுகிறது. எனவே கிராமங்களில் வாழ்ந்த தமிழ்ப் பிள்ளைகளுக்கு தாய்மொழியிலேயே மத போதனை நடந்தது எனலாம். யாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டையில் மாலை ஆராதனைகளும் மற்றும் பிராத்தனைகளும் தமிழிலேயே சனிக்கிழமை தோறும் பாடப்பட்டதாக அறியப்படுகிறது. இவ்வாறு யேசு சபையினர் தமிழ் மொழியை வளர்ப்பதற்கும் உதவி உள்ளனர்.

டொமினிக்கன் சபையினர் யாழ்ப்பாணத்திற்கு வந்ததும் யாழ்ப்பாணத்தின் கிழக்குக் கரையிலே கன்னியாஸ்திரிமடம் ஒன்றை நிறுவினார்கள். இக்கன்னியாஸ்திரி மடமே யாழ்ப்பாணத் தில் பெண்களுக்கென அமைக்கப்பட்ட முதல் நிறுவனமாகும் (சுரேந்தினி,1996). இந்நிறுவனம் பெண்களின் அறிவு வளர்ச்சிக்கு ஓரளவு பங்காற்றியுள்ளது எனலாம்.

போர்த்துக்கேயர் காலத்தில் கல்வியறிவு புகட்டும் பல நிறுவனங் கள் யாழ்ப்பாணத்தில் இயங்கியபோதும் பெண்களின் கல்வி நிலையைப் பொறுத்தவரையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன என்றோ அல்லது இக்காலத்தில் பெண்கள் குறிப்பிடத்தக்க அளவு கல்வியிற் சிறப்புற்றிருந்தனர் என்றோ குறிப்பிட முடியாதுள்ளது. இதற்குப் பாரம்பரிய மரபு வழிக்கல்வி முறையில் பொதுவாக வீட்டுக்குள்ளேயே கேள்வி ஞானத்தால் அறிவைப் பெற்ற பழக்கமும், அந்நிய தேசத்தவர்களின் பள்ளிக்கூடங்களுக்கு தங்கள் பெண் பிள்ளைகளை அனுப்பப் பெற்றோர் தயங்கியமையும் காரணமாக அமைந்திருக்கலாம். எனினும் ஐரோப்பாவில் தோன்றிய கல்வி மறுமலர்ச்சியின் தாக்கங்களும், அவற்றைத் தொடர்ந்து வந்த நவீன கல்வியூட்டல் முறைகளும், பெண்கல்வி விருத்திக்கான ஆரம்ப அடித்தள அமைப்புக்குரிய ஆயத்தங்களைப் போர்த்துக்கேயக்கால கல்வி நடவடிக்கைகள் உருவாக்கித் தந்தன எனலாம். இவ் அடித் தளத்தின் அடிப்படையிலேயே போர்த்துக்கேயரைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரது ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பெண்கல்வி நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தன எனக் குறிப்பிடலாம்.

# 4.
# ஒல்லாந்தர் வருகையும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்

## 4.1 ஒல்லாந்தரின் கல்விச்செயற்பாடுகள்

*போர்த்துக்கேயருக்குப் பின்னர் ஒல்லாந்தர்கள் கி.பி 1658ஆம் ஆண்டு தொடக்கம் 1796ஆம் ஆண்டு வரையும் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். ஒல்லாந்தர்கள் தமது ஆட்சியை யாழ்ப்பாணத் தில் நிலைநாட்டும் வரை இந்துக்களையும், கத்தோலிக்கரையும் அடக்கி ஒடுக்கினர். ஆனாற் காலப்போக்கில் தமது ஆதிக்கத்திற்கு எதிராக வேறொருவரும் தோன்றாமற் போகவே விதித்திருந்த தண்டமுறைச் சட்டங்களைத் தளர்த்தி கல்வி நடவடிக்கைகளிலே ஈடுபடத் தொடங்கினர்.*

*போர்த்துக்கேயரைப் போன்று ஒல்லாந்தர்களும் சமய நோக்குடனேயே கல்விப் பணியிலே ஈடுபட்டனர். ஆனால் நாளடைவில் கல்வியை ஒழுங்குபடுத்தப்பட்ட பல பாடசாலை களை உள்ளடக்கிய சமுதாய தேவைக்கான கல்வியாக மாற்றிய மைத்துக் கொண்டனர். இதனை ஒல்லாந்தர் காலக் கல்வி முறையின் சிறப்பம்சங்களுள் ஒன்றெனக் குறித்துக் கொள்ளலாம்.*

*போர்த்துக்கேயர்கள் கல்வியின் பொறுப்பை சமயக் குழுக்களி டம் விட்டிருந்ததற்கு மாறாக ஒல்லாந்தர்கள் கல்விச் செயற்பாடு களை தமது அரச முகாமைத்துவத்தின் கீழேயே வைத்திருந்தனர். அதாவது ஒல்லாந்த அரசாங்கம் கல்வித் துறையில் நேரடியாகவே ஈடுபட்டது. கல்விமுறை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தமையால் கல்வி நிர்வாகம், கற்பித்தற்செயற்பாடுகள், ஆசிரிய*

நியமனம், பரீட்சை முறை என்பவற்றில் எல்லாம் ஒரு திட்டவட்ட மான முறை காணப்பட்டது. அது மட்டுமல்லாது கல்விச் செயற்பாட்டுக்காக அமைக்கப்பட்ட பாடசாலைச்சபை கல்வி கற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கியது. இது பெண்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கான தூண்டுதலாக அமைந்ததென வள்ளிநாயகி (1989) குறிப்பிடுகின்றார்.

ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஒழுங்காக அமைந்த மைக்கு அவர்களின் நிர்வாக ஒழுங்கும் காரணமாக அமைந்த தெனலாம். போரைத் தவிர்த்து இயன்றவரை சமாதான வழியைக் கடைப்பிடித்த ஒல்லாந்தர்கள் நிர்வாகத் தேவைக்காக தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய மூன்று ஆணைப்புலங்களாகப் பிரித்தனர். யாழ்ப்பாண ஆணைப் புலம் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து வன்னி மாவட்டத் தினாற் பிரிக்கப்பட்டமையினால் கண்டி அரசர்களின் படையெடுப் புக்களினால் அதிகம் பாதிக்கப்படவில்லை. இதனால் மற்றைய பெரும் பகுதிகளிலும் பார்க்க யாழ்ப்பாணப் பட்டினம் தொடர்ந்து அதிக முன்னேற்றத்தை அடையக்கூடியதாக இருந்தது.

ஒல்லாந்தர் தாம் கைப்பற்றிய பிரதேசத்தின் இராணுவ, உள்நாட்டு நிருவாகத்தினை தேசாதிபதியினதும், இலங்கைச் சபையினதும் பொறுப்பில் விட்டனர். இவர்கள் சமயமும் கல்வியும் சார்ந்த நிறுவகங்கள் மீதும் பூரண சட்டவுரிமையைக் கொண்டிருந்தனர்.

ஒல்லாந்த நிருவாகத்தின் சிறப்பம்சம் தேவாலயமும் பாடசாலை யும் வேறல்ல எனக் கூறத்தக்க வகையில் மிகவும் நெருக்கமாக இணைந்திருந்தது. அநேகமாக ஒவ்வொரு தேவாலயத்துடனும் ஒரு பாடசாலை இணைக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொரு பாடசாலையும் ஒல்லாந்தைச் சேர்ந்த மதகுரு ஒருவரின் நேரடியான மேற்பார்வை யின் கீழ் இயக்கப்பட்டது.

இலங்கையில் தமது ஆட்சியை நிலைநாட்டியதும் ஒல்லாந்தர் கள் பாடசாலைகளை நிறுவ ஆரம்பித்தனர். கல்வியின் ஊடாக புரட்டஸ்தாந்த மதத்தைப் பரப்புவது இவர்களின் பிரதான நோக்க மாக இருந்தது. பாடசாலைகளை மதம் மாற்றும் நிலையங்களாக

மாற்றி இவற்றின் ஊடாகப் பலரைத் தம் மதத்திற்கு மாற்ற முற்பட்டனர். இதனால் ஒவ்வொரு முக்கியமான கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலையை அமைத்துக்கொண்டனர்.

ஒல்லாந்தர் காலத்திலேயே ஒழுங்கமைத்த கல்வி முறை ஒன்று ஆரம்பமானது. கத்தோலிக்க மதத்தைக் கீழ்நிலை அடையச்செய்து புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பக் கல்வியே ஏற்ற சாதனம் என்பதை உணர்ந்தமையினால் கல்வியின் முழுப் பொறுப்பையும் திருச்சபை யிடம் ஒப்படைக்கவில்லை. அரசு பள்ளிக்கூடங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து கல்விச் செயற்பாட்டில் கூடுதலான கவனம் எடுக்கப்பட்டது.

ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாட்டில் கி.பி 1663ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவப்பட்ட ஸ்கொலச்சலே வெகர்டரிங் *(Scholarchale Vergadering)* என ஒல்லாந்த மொழியில் வழங்கப் பட்ட "பாடசாலைச்சபை" ஒல்லாந்தரின் கல்வி நிருவாகத்தின் அடிக்கல்லாக அமைந்தது (கல்வி நூற்றாண்டு மலர்,1969). பாடசாலைச் சபை பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்ததோடு திருமணத்துடன் தொடர்புடைய எல்லா விடயங்களையும் கவனித்துக்கொண்டது.

ஒல்லாந்தரின் கல்வி நிர்வாகத்திலே பாடசாலைச்சபை மேற் கொண்ட பாடசாலைப் பரிசோதனை முறை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலைச்சபை ஆண்டிற்கு ஒருமுறை பாடசாலைக்குச் சென்று பரிசோதனை செய்ததோடு ஆண்டுதோறும் ஒருமத குருவும் பொதுமக்களுள் ஒருவரான அங்கத்தவரும் பாடசாலைக்குச் சென்று அறிக்கை வழங்கவேண்டி இருந்தது. இவர்களின் வருகை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கோவிற்பற்றுக்களிற் கருதப்பட்டதால் பறைகொட்டி பொதுமக்களுக்கு அறிவிக்கும் பழக்கம் இருந்தது. தொகுத்து நோக்கும் பொழுது ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஒப்பீட்டுரீதியில் திட்டமிடப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது எனலாம்.

## 4.2 ஒல்லாந்தர்கால யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி நிலைமைகள்

ஒல்லாந்தர்களின் பள்ளிக்கூட அமைப்பிலே கோவிற்பற்றுப் பள்ளிக்கூடங்கள் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்ட இப்பாடசாலைகள் கிராமப் பாடசாலைகளை ஒத்ததாகக் காணப்பட்டது. ஆனால் கோவிற் பற்றுப் பாடசாலைகளின் முக்கியமான நோக்கம் புரட்டஸ்தாந்து மதமாற்றம் என்பதினால் பெற்றோர்கள் யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே தங்கள் பெண்பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பி இருப்பார்களா என்பது சந்தேகமானதே.

ஒல்லாந்தர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களாக இருந்தமை யால் பிரசைகள் யாவரையும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களாக்க வேண்டுமென்று கருதிப் பல வகையான எத்தனங்களை உபயோகித் தனர். போர்த்துக்கீசர் கட்டிய ஆலயங்களைத் தம்வசமாக்கினர். அங்கே ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆராதனை நடைபெறவும் அவ்வாராதனைக்கு அவ்வவ் இடங்களிலுள்ள சனங்கள் யாவருங் கிரமமாய்ப் போகவும் பணித்தனர். இவ்விடங்களில் தமது மதப்பாடசாலைகளைத் ஸ்தாபித்து எல்லாப் பிள்ளைகளும் அப்பாடசாலைகளிற்குச் சென்று படிக்க வேண்டுமென்று கூறினர். சனங்கள் யாவருந் தம்மத ஒழுங்குப்படி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று ஏவி அவர்கள் சுயநாமங்களை மாற்றி தம் மத நாமங்களை அவர்களுக்குத் தரித்தனர். இவ்வாறு ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கே ஒல்லாந்த அரசினர் உத்தியோகம், அதிகாரம், முதலியார் பட்டம் முதலியவற்றைக் கொடுத்ததாக வேலுப்பிள்ளை (1984) குறிப்பிடுகின்றார். இவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்த இந்து சமயத்தவரை மாத்திரமன்று உரோமன் கத்தோலிக்க மதத்தவரையும் நெருக்கித் தம்மத முறைகளை அனுசரிக்க ஏவினர். இவ்வாறு மதத்தைப் பரப்ப முனைந்த குருமார்கள் கல்வியறிவில் மேம்பட்டவர் களாக இருந்தமையால் மதமாற்றத்தோடு கல்வி நடவடிக்கைகளை யும் கவனித்துக் கொண்டனர்.

ஒல்லாந்த மதகுருமாருள் யாழ்ப்பாணத்தில் சுவிசேத்தைக் கூறிய முதல் புரட்டஸ்தாந்த மதகுரு பால்டியாஸ் குருவாவார். இவர் தெல்லிப்பளையிலிருந்து பல வருடங்களாய்ச் சுவிசேத்தைப் பிரசங்கித்தார். இவர் அதிக கல்வித் திறமையையும் மிகுந்த தேசபக்தியும் உடையவராக இருந்தமையால் ஒல்லாந்தர் காலத்து கல்வி நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டனவாக இருந்தன.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருந்தமையால் கல்வி முறை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாக இருந்ததோடு மதமாற்றத்திற்காக கல்வி பல இடங்களில் இலவசமாகவே வழங்கப்பட்டது. அக்காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய கட்டாயக் கல்வி பற்றிய கருத்துக்களுக்கு அமைய 15 வயதுக்கு உட்பட்ட மாணவர் அனைவரும் கட்டாயமாகப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டுமென்ற விதியும் அமுல்படுத்தப்பட்டது. கட்டாயக்கல்வியை அமுல்படுத்து வதற்காகப் பாடசாலைச் சபையை அமைத்துக் கொண்டதோடு இச்சபைக்குப் போதிய அதிகாரங்களைக் கொடுத்தமையால் கட்டாயக் கல்வித் திட்டத்தில் ஒல்லாந்தர் பெருமளவு வெற்றி கண்டனர் எனக் கூறலாம்.

கட்டாயக் கல்வி நடைமுறையின் கீழ் மாணவர் வரவை உறுதிப்படுத்துவதற்காக காலத்திற்குக் காலம் தேசாதிபதிகளினால் சில கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. கி.பி 1679ஆம் ஆண்டிற் பாடசாலைகளுடன் தொடர்புடையோருக்குத் தேசாதிபதி கெரித் டி ஹேர *(Gerrit De Heere)* சில கட்டளைகளைப் பிறப்பித்தார். வருடாந்தப் பரிசோதனையின் போது ஆறு வயதையடைந்த சிறுவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக அனுமதிக்கப்படல் வேண்டும் என்பதற்கும், ஞானஸ்தானம் பெற்ற பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாடசாலைகட்கு ஒழுங்காக அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதற்குமாகவே இக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பெற்றோருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. இத்தகைய கட்டாயக்கல்வி நடவடிக்கையால் யாழ்ப்பாணச் சமூகச் சூழ்நிலையிலே

விரும்பியோ விரும்பாமலோ பெண்பிள்ளைகளும் சென்று கல்வி கற்றிருக்கலாம். இதனால் போர்த்துக்கேயரின் காலத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது பெண்கல்வி நிலைமைகள் ஓரளவு வளர்ச்சி அடைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் கட்டாயக்கல்வியோடு எல்லாப் பாடசாலைகளும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. திட்டமான தவணைகளோ, நீண்ட விடுமுறைகளோ இருக்கவில்லை. நத்தார் தினம், புத்தாண்டுத்தினம், சுவர்க்க ஆரோகணத் திருநாள் மற்றும் பிராத்தனை செய்வதற்கும், நன்றிக் கடன் செலுத்துவதற்குமென விசேடமாக ஒதுக்கப்படும் நாட்கள் ஆகிய இவை மட்டுமே விடுமுறை நாட்களாக அனுட்டிக்கப் பட்டன. இவ்வாறு ஒழுங்குமுறையான திட்டமிட்ட பாடசாலை அமைப்பிலும் பெண்களுக்கென பிரத்தியேகமான பாடசாலைகளை அமைக்க வேண்டுமென ஒல்லாந்தர்கள் கருதாமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

ஒல்லாந்தர்கள் பெண்களுக்கென பிரத்தியேகமான பாடசாலையை நிறுவாமை அவர்களின் கல்விச் செயற்பாட்டின் குறைபாடாக இருந்தாலும் கல்வி கற்க வரும் பெண்களின் பாதுகாப்பிற்காக சில கட்டளைகளைப் பிறப்பித்திருந்தனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. அதாவது சிறுவர்களினதும் மற்றவர்களி னதும் சிறுமைத்தனமான நடத்தைகளால் மாணவிகள் சீரழிந்து விடாமலிருப்பதில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்று திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்திலே கட்டாயக்கல்வி முறை புகுத்தப்பட்ட மையினாலும் சிறுமிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்தப்பட்ட மையினாலும் பெற்றோர் எட்டு வயதுவரை தமது பெண்பிள்ளை களை பாடசாலைக்கு ஓரளவு அனுப்பி இருக்கலாம். ஒல்லாந்தர்கள் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக பத்து வயதிற்கு மேல் இவர் களைப் பாடசாலைக்கு வரவேண்டுமெனக் கட்டாயப்படுத்த வில்லை எனத்தெரிகிறது. இதனால் பொதுவாக பாடசாலைக்குச் சென்ற பெண்பிள்ளைகள் பத்து வயதில் பாடசாலையை விட்டு

நீங்க வேண்டியிருந்தது. அரசாங்கமும் பெண்களுக்கு வரக்கூடிய ஆபத்துக்களைக் கண்டு அவர்களின் உயர்கல்வி பற்றி நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. பெற்றோரும் பெண்களின் உயர்கல்வியை ஆதரிக்கவில்லை.

கட்டாயக்கல்வி முறையை ஒல்லாந்தர்கள் புகுத்தியிருந்த போதும் யாழ்ப்பாணச் சமூகம் பெண்கல்விக்கு அதிக தூரம் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்றே தெரிகின்றது. இதனை வண ஜான்ஸ் பாதிரியார் தமது இளமைக் காலத்திலிருந்தே அவதானித்து வந்துள்ளார். இவர் தமது 1757ஆம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணப் பாடசாலை அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டு உள்ளார் (வள்ளிநாயகி,1989).

"தலைமைப்பதவிகள் வகிக்கின்ற பெயர் பெற்று விளங்குகின்ற சுதேசிகளது பெண்பிள்ளைகள் பாடசாலைக்கோ பரீட்சைக்கோ சமூகம் அளிப்பது கிடையாது. அது மாத்திரமல்ல தேவாலயங்களில் நடைபெறுகின்ற ஞானஸ்நானம், திருமணம் போன்றவற்றிற்கு கூட சமூகமளிப்பதில்லை. பதிலாக அவர்களது அடிமைச் சிறுமிகள் அவர்களது பெயரில் அனுப்பி வைக்கப்பட்டு பங்கு கொள்ளச் செய்யப்படுவார்கள்"

வண ஜான்ஸ் பாதிரியார் அவர்கள் மேலும் தனது குறிப்பில் வணபிதா மெல்லோ என்பவர் இதனைக் கண்டும் காணாதவர் போல நடந்து கொண்டார் என்றும், ஆசிரியர்களுக்கு கைலஞ்சம் கொடுக்க முடியாத ஏழைச்சிறுமிகளே பாடசாலைக்கு ஒழுங்காக வந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார். எனினும் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது ஒல்லாந்தர்கள் கட்டாயக்கல்வி முறையினைப் புகுத்தி இருந்தமையால் ஒப்பீட்டளவில் இவர்களின் காலத்தில் பெண்கல்வி நிலைமைகள் ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தன எனக் கூறலாம்.

ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு உள்ளே அநாதைப் பிள்ளைகளின் கல்விக்காக அமைக்கப்பட்ட பாடசாலைகள் முக்கியமானவை. இவர்கள் அநாதைகள் நிலையம், ஏழைகளின் விடுதி என்னும் நிலையங்களை நிறுவி ஏழைப்பிள்ளைகளின்

கல்விச் செயற்பாட்டில் கவனம் செலுத்தினர். இத்தோடு மட்டும் நின்றுவிடாது தனியார் பாடசாலைகளையும் அமைத்தனர். ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்ட அநாதைகள் பாடசாலைகளுக்கும், கோவிற்பற்றுப் பாடசாலைகளுக்கும் அரசாங்க நிதியுதவி கிடைத்தது. பொதுவாக இவ் அநாதைகள் பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகளாகவும், கலவன் பாடசாலைகளாகவும் இருந்தன. ஆனால் இக்கலவன் பாடசாலைகளிலும் கல்வி கற்கச் சென்ற பெண்பிள்ளைகள் மிகவும் குறைவாகவே இருந்துள்ளனர்.

அநாதைகள் பாடசாலைகளும், கோவிற்பற்றுப் பாடசாலைகளும் திருச்சபையின் தலைமைப்பீடத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரின் பொறுப்பில் இருந்தன. இங்கு அநாதைச் சிறுவர்களுக்கும் வெவ்வேறாகப் போதிக்கப்பட்டது. போதிய வயதை அடைந்ததும் ஆண்கள் வெவ்வேறு தொழில்களிற் பயிற்றப்பட பெண்களுக்கு தையல் வேலை, பின்னல் வேலை, வீட்டுப்பணி ஆகியவை விசேடமாகப் போதிக்கப்பட்டன. பொதுவாக ஒரு கிறிஸ்தவன் விவாகம் செய்யப் போகும் பெண் ஞானஸ்நானத்தோடு குறித்தளவு தோத்திரப் பாடல்களைப் பாடவும், வினாவிடைகளை விளக்கவும், மற்றும் குறித்ததொரு அளவிலான சமயப் பிரசாரங்களை அறிந்திருக்கவும் வேண்டியிருந்தது. இதனால் கல்வியை வீட்டிலோ அல்லது தேவாலயங்களிலோ வழங்குவதில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

ஒல்லாந்தரின் கல்வி முறையிலே தொடர்கல்வி முறை பேணப்பட்டது. பொதுவாக மாணவர்கள் தமது பதினைந்தாவது வயதிற் பாடசாலையை விட்டு விலக அனுமதிக்கப்பட்டாலும் பாடசாலையை விட்டு விலகியதும் மாணவர்களின் கல்வி முடிந்துவிட்டது என்பது அர்த்தமாக இருக்கவில்லை. ஆசிரியரிடமிருந்து மதக்கல்வியைக் கற்பதற்காக அடுத்த மூன்று ஆண்டுகளிலும் மாணவர் வாரத்திற்கு இருதடவை பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும். இதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னிலும் குறைவாக பாடசாலைக்குச் செல்ல வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் இத்தொடர் கல்விச் செயற்பாடு

பெண்களைப் பொறுத்தவரை பொருத்தமற்றதாகவே இருந்திருக்கும். காரணம் பெண்கள் இவ்வாறு வளர்ந்த பின்னரும் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

ஒல்லாந்தர்கள் அமைத்த பாடசாலைகளில் பொதுவாக வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவ மத வினாவிடை, பத்துக்கட்டளைகள், விசுவாசிகளின் விதிகள், ஆண்டவனின் செபம் ஆகியன கற்பிக்கப் பட்டன. கற்பிக்கப்பட்டவற்றில் மாணவர்கள் விளக்கம் பெற் றுள்ளனரா என்பதை அறிவதற்காக வினாக்களை வினவும் கற்பித்தல் முறையிலே பெண்கள் கூச்சமின்றி பதில் அளித்திருப்பார்களா என்பது சந்தேகமானதே.

ஒல்லாந்தர்களின் கல்வி நடவடிக்கையிலே ஆசிரியரின் தெரிவு, நியமனம் என்பனவும் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தன. இவர் களின் ஆசிரிய நியமனம் பரீட்சையை மையமாகக் கொண்டிருந்தது. ஆசிரியர்களுக்கான பரீட்சைகளை நடத்தி அவர்களை நியமிக்கும் பணியை பாடசாலைச் சபை மேற்கொண்டது (கல்வி நூற்றாண்டு மலர், 1969). முறையான அறிவைப் பெறாதோர் ஆசிரியர்களாக கடமையாற்றுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அவர்கள் ஒழுங்காக குருமாரிடம் சென்று கல்வி கற்க வேண்டுமென உத்தரவிட்டதுடன் ஆசிரியர்களின் பயிற்சியிலும் கவனம் எடுத்தனர்.

இலங்கையின் கல்வி வரலாற்றிலே 17ஆம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியிலும் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உள்ளூர்வாசிகளின் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது. அதிலும் யாழ்ப்பாண ஆணைப்புலத்திலே தான் அதிகளவு முன்னேற்றம் இது தொடர்பாக ஏற்பட்டதாக கல்வி நூற்றாண்டு மலரில் (1969) குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்திலே கிடைத்த தரவுகளின்படி கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கையை எடுத்து நோக்கின் ஒப்பீட்டளவில் முன்னைய காலங்களை விட பெண்கள் கல்வி கற்றுள்ளனர் என்றே கூறுதல் வேண்டும். கி.பி.1734ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் அநாதைப் பாடசாலைகளில் 47 ஆண்களும் 21 பெண்களுமாக 68 பேர் இருந்துள்ளனர். 1739இல் 52 ஆண்களும் 47 பெண்களுமாக

99 பேர் இருந்துள்ளனர். தனியார் பாடசாலைகளில் 1734இல் 33 ஆண்களும் 27 பெண்களுமாக 60 பேரும் 1739இல் 34 ஆண்களும் 32 பெண்களுமாக 66 பேரும் கல்வி கற்றுள்ளனர். கோவிற்பற்றுப் பாடசாலைகளில் ஏறக்குறைய 20,000 மாணவர்கள் கல்வி கற்ற விபரம் கிடைக்கின்றது. ஆனால் ஆண், பெண் என்ற விபரத்தை அறிய முடியவில்லை (வள்ளிநாயகி,1989).

பொதுவாக ஒல்லாந்தர்கள் பெண்களுக்கு எனச் சிறப்பாக எதையும் செய்யாது விட்டிருப்பினும் மதமாற்றம், கட்டாயக் கல்வி என்பவற்றின் மூலம் வீட்டினுள் அடைந்து கிடந்த பெண்ணை வெளியே கொண்டுவந்து சமூகப்பழக்கங்கள் ஊட்டி முன்னேற்றம் அடையச் செய்தனர். ஒல்லாந்தருக்குப் பின்னர் வந்த ஆங்கிலேய ஆட்சிக்கால மிசனரிமார் பொதுவாக தாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த பொழுது படித்த பெண்கள் என இருவரை மட்டுமே கண்ட தாக குறிப்பிட்டிருந்தாலும் ஒல்லாந்தர் காலத்தில் ஒப்பீட்டளவில் பெண்கல்வி முன்னைய காலத்திலும் பார்க்க முன்னேற்றமான நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 5

# பிரித்தானியர் வருகையும் யாழ்ப்பாணத்துத்தமிழ்ப்பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்

### 5.1 பிரித்தானியர் கால யாழ்ப்பாணச் சமூகம்

ஒல்லாந்தர்களினால் ஆட்சி செய்யப்பட்டு வந்த இலங்கையின் கரையோரப் பகுதிகளை 1796ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். அக்காலத்தில் சென்னையின் தேசாதிபதியாக இருந்த கோபாட்பிரபு *(Gobart)* இலங்கையை ஆங்கிலேய இராச்சியத்துடன் சேர்ப்பதற்கு இதுவே தக்கதருண மென நினைத்து ஜேம்ஸ் ஸ்ருவாட் *(James Steward)* தளபதியின் கீழ் ஒரு சேனையை அனுப்பினார். அச்சேனை பருத்தித்துறையில் வந்திறங்கி முதல் யாழ்ப்பாணக் கோட்டையையும் பின்னர் இலங்கையின் கரைப்பகுதி முழுவதையும் பிடித்து 1796ஆம் ஆண்டு ஒல்லாந்த அரசாட்சியை நீக்கி ஆங்கிலேய அரசியல் நடைபெறச் செய்தது. இதன் பின்னர் 1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியதுடன் 1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கும் வரை பிரித்தானியர் ஆட்சியே இலங்கை முழுவதிலும் நிலவியது. இதனால் இலங்கை முழுவதிலும் பிரித்தானியரின் அரசியல், பொரு ளாதார, சமூக செல்வாக்கு காணப்பட்டது. இந்த வகையிலே இலங்கையின் கல்விச் செயற்பாட்டில் பிரித்தானியரின் பங்கு முக்கியமானது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கல்வியின் நோக்கம் பரவலாக்கப்பட்டது. பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியும், சமய மறுமலர்ச்சியும், அறிவியல் விருத்தியும் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கக் காரணமாக அமைந்ததோடு அவற்றை

குடியேற்ற நாடுகளாக்கி தமது ஆட்சியின்கீழ் கொண்டு வரவும் உதவி புரிந்தன.

இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாக மாறுவதற்கு முன்னர் ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் பொதுவாக இலங்கையின் கல்வி நிலைகளைப் பார்க்கின்ற பொழுது அவை பிரித்தானியர் கால கல்வி நிலைமைகளைவிட ஒப்பீட்டள வில் வளர்ச்சி குறைந்தனவாகவே காணப்பட்டன. இத்தகைய ஒரு நிலையே யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியிலும் காணப்பட்டது. இதற்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் யாழ்ப்பாணத் தில் நிலவிய இறுக்கமான சமூக அமைப்பும், பின்னர் போர்த்துக்கேய, ஒல்லாந்த செல்வாக்கினால் ஏற்பட்ட சில தளர்வு நிலைகளும் காரணமாக அமைந்திருக்கலாம். பிரித்தானியர் தமது பெண்கல்வி நடவடிக்கைகளை ஓரளவு வளர்த்துச் செல்வதற்குரிய அடித்தளங்களை கொண்டதாக யாழ்ப்பாணச் சமூகம் மாறி இருந்தாலும் பாரம்பரியமான சாதிக் கட்டமைப்பைக் கொண்ட சமூக அமைப்பானது தொடர்ந்து நிலவியது என்றே கூறல் வேண்டும்.

போர்த்துக்கேயருடைய ஆட்சி யாழ்ப்பாணத்தவரின் நிர்வாக முறையை மாற்றி அமைக்கவில்லை எனினும் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதம் பரவியது. ஏறத்தாழ பதினொரு வீதமான மக்கள் கத்தோலிக்க சமயத்தை தழுவியதாக அறியப்படுகிறது. ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்ப முயற்சி செய்தனர். யாழ்ப்பாணத் தில் 1760ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி ஞானஸ்நானம் பெற்றவர்கள் 1,82,226 பேர் என்று லோவெட் ரிச்சேட் **(1899)** தனது குறிப்பில் குறிப்பிடுகின்றார். இந்த நிலைமையிலே பிரித்தானியர் இலங்கைக்கு வந்த காலகட்டத்திலே இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் மக்கள் அந்நிய நாட்டவர்களின் சமூக, சமய பழக்க வழக்கங்களுக்கு ஓரளவு இசைவுபட்ட நிலையிலே காணப்பட்டனர்.

இறுக்கமான சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்ட பண்டைய சமூக அமைப்பிலே ஏற்பட்ட சில தளர்வுகள் பிரித்தானியர் தமது அரசியல் நடவடிக்கைகளை மட்டுமல்லாது ஏனைய

பொருளாதார, சமூக, கல்வி நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பாக அமைந்தது. ஆனால் பிரித்தானிய அரசாங்கம் மத விடயங்களில் மிதமான உணர்வைக் கடைப்பிடித்தமையால் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியில் அரசியல் கட்டாயத்திற்கும், உதவிக்குமாகக் கிறிஸ்தவர்களாய் நடித்த அனேகர் கிறிஸ்து மார்க்கத்தை விட்டுச் சைவசமய ஆசாரங்களை வெளிவெளியாக அனுசரிக்கத் தொடங்கினர். முன்னர் இடிக்கப்பட்டிருந்த சைவாலயங் களைத் திரும்பக் கட்டவும், உபயோகிக்கவும், முன்னர் பதுங்கி, ஒதுங்கி அந்தரங்கத்திற் செய்து வந்த ஆசார நியம நிட்டைகளைப் பகிரங்கத்திற் செய்யவும் தலைப்பட்டனர்.

பிரித்தானியரின் மத நெகிழ்ச்சிக் கொள்கையினால் இலங்கை யில் அக்காலத்தில் வாழ்ந்த சமூக, பண்பாட்டுத் தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவம் சாராத ஒரு கல்வி முறையைக் கோரினர். இதில் தமிழ்க்கல்வி மரபையும், ஆங்கில மொழிப் பயில்வையும் எவ்வாறு இணைப்பதென்பது பிரச்சினையின் மையமாக விளங்கியது. இதனால் பாரம்பரிய பேணு கையையும் புதிய தேவைகளையும் அனுசரிக்கும் ஒரு சமூக அசைவியக்க முறைமை தோற்றம்பெற இது வழிவகுத்தது. இதன் விளைவாக யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே புதிய கல்வி மரபு கிறிஸ்தவ முகாமையின் கீழ் வளர்க்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டது.

புரட்டஸ்தாந்து மதம், மனிதன் தனது அறிவினால் தன்னை முன்னேற்றிக்கொள்ள முயல வேண்டும் என்று கூறிற்று. இதன் அடிப்படையில் கிறிஸ்தவ மிசனரிமார் பாரம்பரிய அமைப்பில் இருந்ததைப் போல் அல்லாது யாரெல்லாம் கல்வியைப் பெறக்கூடிய வர்களாக இருந்தார்களோ அவர்கள் யாவருக்கும் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர்களாக இருந்தனர். பிறப்பு படிப்பிற்கான தகைமை அல்ல எனக் கருதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சாதி அமைப்புக்கு உட்பட்டதாக இருந்த சமூக அமைப்பு இவ்மாற்றங்களை முதலில் விரும்பவில்லை. இதனால் படித்தவர்களிடையே சமூகப் பெறுமானங்கள் தொடர் பாகப் பெரும் மனக் குழப்பங்கள் ஏற்பட்டன. இவை எல்லாம்

அன்றைய யாழ்ப்பாண சமூகத்திற்கு புதிது என்றாலும் நாளடைவில் யாழ்ப்பாண சமூகம் காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய சமூக அசைவுப் பாதையை வகுத்துக்கொண்டது.

பிரித்தானிய அரசாங்கம் தமது ஆட்சிக்கு வேண்டிய ஆதர வாளர்களை கல்வியின் மூலமாக திரட்டிக்கொள்ள விரும்பியது. "கல்வியின் இறுதி நோக்கம் அரசாங்க சேவையில் சேர வேண்டிய தகுதியைப் பெறுவதே" என கோல்புறுக் தனது கல்வி தொடர்பான அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது. பிரித்தானிய நிர்வாகம் ஆங்கிலக் கல்வி முறைக்கு கொடுத்த முக்கியத்துவம் காரணமாகவும் யாழ்ப்பாண சமூக அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

ஆங்கிலக்கல்வி முறையினால் யாழ்ப்பாணச் சமூக அமைப் பில் நவீனமயமாக்கம் ஏற்படத் தொடங்கியது. நவீனமயப்பாடு இல்லாது சமூக அந்தஸ்த்துப் பேணுகையோ, சமூக மேனிலைப் பாடோ சாத்தியமற்றதென சிவத்தம்பி (1995) குறிப்பிடுகின்றார். இதனால் பிரித்தானிய அரசாங்கத்தினால் நவீனமயமாக்கப்பட்ட கல்வி சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான ஒன்றாக மாறியது. இதன் விளைவாகக் கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் அவசிய மானது என்பதை யாழ்ப்பாணச் சமூகம் நன்கு உணரத் தொடங்கி யது. யாழ்ப்பாண சாதியமைப்பிலே இடைநிலையில் இருந்தோர் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும், உயர்நிலைச் சாதியின ருடன் தம்மை இணைத்துக் கொள்ளவும் கல்வியைப் பயன்படுத்தத் தொடங்கினர். இத்தகைய சமூக எண்ணத்தினால் நவீனமயமாக் கலில் கல்வி ஒரு முக்கிய பொருளாதார முயற்சியாக மாற்றம் அடைந்தது.

பிரித்தானிய அரசாங்கம் தனக்கு தேவையான ஆதரவாளர்க ளையும் விசுவாசமுள்ள ஊழியர்களையும் கல்வியின் மூலம் தோற்று விக்க முனைந்தது. இதனால் யாழ்ப்பாணச் சமூகம் அதுவரை காணாத ஒரு நவீன அசைவாக்கத்தைப் பெற்றது. புதிய கல்விமுறை 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய புதிய அறிவலையையும் அறிமுகம் செய்து வைத்தது. இப்புதிய அறிவலை

கட்டற்ற சிந்தனைக்கும், பகுத்தறிவு வாதத்திற்கும் இடமளித்தது எனலாம்.

பிரித்தானிய ஆட்சி அமைப்பிலே ஆங்கில அறிவு அரச உத்தியோகம் பெறுவதற்குரிய கருவியாக இருந்தமையால் அதைக் கற்று மேம்பட்டோர், கல்வி கற்ற உயர் குழாம் என்ற சமூக வகுப்பைத் தோற்றுவித்தனர். இவர்கள் கல்விச் செயற்பாடுகளுக்கு முக்கிய இடத்தினை வழங்கத் தொடங்கினர். இத்தகைய சிந்தனை மாற்றங்கள் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி தொடர்பாகவும் சமூகத்தின் கருத்து நிலையிலே பல மாற்றங்களை ஏற்படுத்த காரணமாக அமைந்தன.

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பக் காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பெண்களை பிரித்தானியக் கல்வி மரபுகளின்படி கற்கவைப்பது கடினமான செயலாகவே காணப்பட்டுள்ளது. மிசனரிமார் பெண் பிள்ளைகளைச் சேர்த்து கல்வி வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட பொழுது இந்துக்கல்வி மரபின்படி பெண்களுக்கு கல்வி வழங்கப்படுவதில்லையென்றும், அவ்வாறு கல்வி வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இல்லையெனவும், கல்வி வழங்கப்படுவது பெண் சமுதாய வாழ்விற்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் விடயமாகக் கருதப்படுமெனவும் மக்கள் மத்தியில் கருத்துக்களைப் பெறக்கூடியதாக இருந்துள்ளது. இதனை 1817 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பூர் ஐயர் எழுதிய பின்வரும் குறிப்பு எடுத்துக்காட்டுவதாக ஜெபநேசன் ( 1983) குறிப்பிடுகின்றார்.

> *"நாங்கள் ஒரு பெண் பாடசாலையை ஸ்தாபிக்கும் படி பிரயாசப்பட்டும் அனுகூலமடையவில்லை. இவ்விஜயத்தைக் குறித்து பூர் அம்பாள் ஸ்திரிகளைக் கண்டு பேசியபோது அவர்கள் பெண்பிள்ளைகள் படித்தல் இத்தேசவழக்கமல்ல என்றும் பெண்பிள்ளைகள் படித்தால் அவர்களை ஒருவரும் விவாகம் செய்யமாட்டார்கள் என்றும் சொன்னார்கள்"*

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பக்கால கட்டத்தில் யாழ்ப்பாணச் சமூகச் சிந்தனையிலே பெண்கள் கல்வி கற்க வேண்டும் என

சிந்திக்கப்படவில்லை. ஆயினும், காலப்போக்கில் ஏற்பட்ட அரசியல் சீர்த்திருத்தங்களினாலும், ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தினாலும் யாழ்ப்பாணச் சமூகம் கல்விக்கு கொடுத்த முக்கியத்துவத்தினால் பெண்களின் கல்வி தொடர்பாகப் பல முக்கிய மாற்றங்களை யாழ்ப்பாணச் சமூகம் ஏற்றுக்கொண்டது.

கோல்புறூக் கல்வியின் மூலமாக அரச அலுவலர்களைப் பெற முனைந்தமை, ஆங்கிலக்கல்விக்கு கொடுத்த முக்கியத்துவம், 1931ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின் மூலமாக வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை என்பன யாழ்ப்பாண சமூக அமைப்பிலே பல பரந்த சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தின. இம் மாற்றங்கள் பின்னர் யாழ்ப்பாண சுதேச மக்கள் தங்கள் பெண்களுக்காக தனிப் பெண்கள் பாடசாலைகளை தாங்களே நிறுவும் அளவிற்கு வளர்த்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலமொழி, ஆங்கில வாழ்க்கைமுறை முதலியவற்றை யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர்ந்தோர் குழாத்தினர் வற்புறுத்தினர். இதற்கு எதிராக சுதேச மொழி இந்து மரபில் வந்த வாழ்க்கை நெறிகளை வற்புறுத்திய மாற்று உயர்ந்தோர் குழாத்தினர் கல்வியின் மூலமாக கிறிஸ்தவ மதம் பெறும் செல்வாக்கினை காணச் சகியாது, தமது பாரம்பரியமான வாழ்க்கை முறைகள், மதம், மொழி என்பன பின்னடைந்து செல்வதைத் தடுக்க வேண்டுமெனில் தமது பண்பாடு பாரம்பரியத்தைப் பேணும் வகையில் தாமும் பெண்களுக்கெனப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டனர். இதன் விளைவாக சைவத்தையும், தமிழையும், தமிழர் பாரம்பரியங்களையும் பேணும் முகமாக யாழ்ப்பாணச் சமூகத்தவர் களால் பெண்களுக்கெனத் தனிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டமை பெண்கல்வி தொடர்பாக ஏற்பட்ட சமூக மாற்றச் சிந்தனை களை எடுத்துக்காட்டுகின்றன.

சம உரிமை, சம அந்தஸ்து காணப்படாத ஒரு சமூகச் சூழ் நிலையில் ஆண், பெண் சமத்துவமின்மை, சாதிப் பாகுபாடு என்பவற்றைக் கடந்து நின்ற பிரித்தானியர்களின் கல்விச் செயற்பாடு கள் மக்களைக் கவர்ந்து பல சமூக மாற்றங்களை ஏற்படுத்தியதோடு பெண்கல்வியிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் நிறுவன ரீதியான பாடசாலை அமைப்பு முறை சிறப்புற வளர்ச்சியடைந்தது. குறிப்பாக இவர்களின் காலத்தில் பெண்களுக்கென தனிப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பிரித்தானியர் கால பெண்கல்வி நடவடிக்கைகளை அறியும் முகமாக பிரித்தானியர் கால மிசனரிகளின் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

## 5.2 பிரித்தானியர் கால மிசனரிகளும் பெண்கல்வி நடவடிக்கைகளும்

சமய சீர்திருத்தவாதி ஜோன் வெஸ்லியின் கருத்துக்கள் காரணமாக இங்கிலாந்துத் திருச்சபையில் நற்செய்தி பரப்பும் இயக்கம் ஒன்று தோற்றம் பெற்றது. இது பின்னர் படிப்படியாக ஏனைய திருச்சபைகளுக்கும் பரவத் தொடங்கியது. இவ் இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக கிறிஸ்தவ மதத்தை உலகின் நாலா பக்கங்களிலும் பரப்பும் நோக்கம் கொண்ட மிசனரிகள் என அழைக்கப்பட்ட கிறிஸ்தவ சபைக் குழுக்கள் தோற்றம் பெற்றன.

மிசனரிகள் பிரதான நோக்கமாக அமைந்தது கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதாகும். உலகின் பின்தங்கிய பகுதிகள் அனைத்திலும் உள்ள நாகரிகம் அடையாத, சமய விளக்கம் அற்ற மக்களிடையே விவிலிய நற்செய்திகளைப் பரப்பி, அவர்களைத் தம் மதத்திற்கு மாற்றும் பொருட்டு இம் மிசனரிக் குழுக்கள் இலங்கை, இந்தியா, பர்மா, சீனா போன்ற நாடுகளுக்கு சமயத்தைப் பரப்பும் ஊழியர்களை அனுப்பின. இந்த வகையிலே இலங்கைக்கும் சமயத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட மிசனரிக் குழுக்கள் வந்து சேர்ந்தன.

இலங்கைக்கு வந்த மிசனரிக் குழுக்களில் இலண்டன் மிசனரி, பப்ரிஸ்ட் மிசனரி, வெஸ்லியன் மிசனரி என்பன குறிப்பிடத்தக்கன. இங்கிலாந்தில் தோற்றம் பெற்ற மேற்குறித்த மிசனரிகளைப் போன்று அமெரிக்காவிலும் மிசனரி ஒன்று தோற்றம் பெற்றது. அவ்வாறு தோன்றியதே மசெச்சூசெற்ஸ் பொதுச்சங்கம் என்னும் நிறுவனத்தினரால் தாபிக்கப்பட்ட அமெரிக்க கிறிஸ்தவ சபைக் குழுவின் ஆணையாளர் மன்றமாகும் (ரன்ஜித் ருபேறு, 1962). இதுவே அமெரிக்க மிசனரி என அழைக்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து கிறிஸ்தவ சமயம் உலக சமயமாக மாறத் தொடங்கியது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியா, அமெரிக்கா என்னும் நாடுகளில் மட்டுமன்றிக் கிறிஸ்தவ தேசங்கள் எல்லாவற்றி லும் சமயப் புத்தெழுச்சிக் காலமாக இருந்தது. கடவுளுக்கான சேவையாகக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதையும், மனிதருக்கான சேவையாக கிறிஸ்தவ மதக் கல்வியைப் பரப்புவதுமே இம் மிசனரி களின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன. பொதுவாக நோக்கின், அறியாமை என்ற இருளில் அழுத்தி இருப்போருக்கு அறிவு புகட்டும் நோக்கிலேயே மிசனரிகள் இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த சாமுவெல் மில் என்பார் அமெரிக்கா தனது மிசனரிமாரைப் பிற நாடுகளுக்கு அனுப்புவதற்கு பின்நிற்கக் கூடாது எனவும் பிற நாட்டின் தயவை நாடக்கூடாது எனவும் குறிப்பிட்டு, அமெரிக்காவே தனது மிசனரிமாருக்கு வேண்டிய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கவேண்டும் என்ற கருத்தினை யும் முன்வைத்தார்.

மிசனரிமாரின் கல்விப் பணியின் இலக்கு மதமாற்றமே ஆகும். பப்ரிஸ் மிசனைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் பப்ரிஸ் மிசனைப் பற்றி விபரிக்குமிடத்து, கிறிஸ்தவ மதத்தின் கோட்பாடுகளும், கடமை களும் பிள்ளைகளுக்கு கவனமாகப் போதிக்கப்படுவதுடன் அவர்களது மத மாற்றமே முக்கிய குறிக்கோளாகக் கருதப்படுகின்றது என்று குறிப்பிடுகின்றார். வெஸ்லியன் மிசனரியைச் சேர்ந்தவர்கள் எங்கள் நிறுவனங்களில் அளிக்கப்படும் கல்வி முக்கியமாக கிறிஸ்தவக் கல்வி ஆகும். கிறிஸ்தவ மதத்தை நிலைநாட்டுவதே இக்கல்விப் போதனையின் முக்கிய குறிக்கோள் எனக் குறிப்பிடு கின்றனர். இவ்வாறு மிசனரிக் குழுவினர் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதையே தமது உறுதியான நோக்கமாகக் கொண்டு இலங்கை யின் கல்வித் துறையில் பல ஆண்டுகளாக சேவை புரிந்தனர்.

ஒவ்வொரு மிசனரியும் எவ்வாறு சுதேசிகளுள் பெரும்பான்மை யினரை மதமாற்றம் செய்ய முடியுமோ அவ்வளவிற்கு மதமாற்றம் செய்யும் பொருட்டுத் தனித்தனியாகப் பல பாடசாலைத்

திட்டங்களை மேற்கொண்டன. இப்பாடசாலைகள் பொதுவாக கல்வி போதிக்கும் நோக்கில் தோற்றம் பெற்றபோதும் இப்பாட சாலைகள் யாவும் சமயக்கல்வி போதிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. பெண்களின் ஊடாகவே சமயத்திற்கு விசுவாசமான மக்களை மதமாற்றம் செய்யலாம் என எண்ணிய மிசனரிகள் பெண்களின் கல்வி நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கல்வியானது பல்வேறு மத நிறுவனங்களின் போட்டியினூடாகச் சிறப்பாக வளர்ச்சி அடைந்தது எனக் கூறலாம். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்கும் மாணவர் தொகையும் பெண்பிள்ளைகளில் படிப்பவர் தொகையும் அதிகமாக இருந்ததைக் காணலாம். இதற்கு மூல காரணமாக இருந்தவை கிறிஸ்தவ மத நிறுவனங்கள் எனலாம்.

யாழ்ப்பாணத்திலே முதன் முதலாக 1805ஆம் ஆண்டு லண்டன் மிசனரிச் சங்கம் பணியாற்ற வந்தது. இதனைத் தொடர்ந்து 1814ஆம் ஆண்டு வெஸ்லியன் மெதடிஸ்த மிசனரியும், 1816ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரியும் இங்கு பணியாற்ற வந்தன. 1818ஆம் ஆண்டு திருச்சபை மிசனரிச் சங்கத்தினர் தமது சமயப் பணியைச் செய்யவென யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தனர். இவ் மிசனரி களின் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வியறி வில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்படவில்லை என்ற கருத்தே பொதுவாக நிலவியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுவாகப் பெண்களின் கல்வியில் அதிக கவனம் செலுத்தப்படாத நிலையே இருந்தது. 1816ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பணிபுரிய வந்த பி.சி.மைக்கல் அவர்கள் யாழ்ப்பாணம் முழுவதிலும் வாசிக்கத் தெரிந்த இரண்டு பெண்களையே கண்டதாகத் தமது கடிதமொன்றில் குறிப்பிடுகின் றார். ஒருவரை அளவெட்டியிலும் ஒருவரை உடுப்பிட்டியிலும் கண்டதாகக் கூறுகிறார் (ஜெபநேசன், 1983). பொதுவாக வெளி நாட்டவர்களால் தங்கள் பெண்களுக்கு கல்வி அளிக்கப்படுவதை

அன்றைய யாழ்ப்பாணச் சமூகம் விரும்பவில்லை. ஆதலால் வாசிக்கத் தெரிந்தவர்கள் என்று பெண்கள் தம்மை வெளிப்படுத்த வில்லை. இதனால் மிசனரிகளால் பெண்களை கல்வி கற்க வைப்பதற்காக பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.

பூர் அம்பாள் பெண்பிள்ளைகளுக்கு வேதப்புத்தகங்களைக் காட்டி "நீங்கள் படித்துத் தேறி இந்தப் பாடப் புத்தகத்தை வாசிக் கத்தக்கதாய் வந்தால் ஆளுக்கொவ்வொரு சிறு மணிக்கோவை செய்வித்துத் தருவேன்" என்று சொல்லி பெண்பிள்ளைகளை கற்கச் செய்வதற்கு பல முயற்சிகள் செய்தார் (ஜெபநேசன், 1983). பொதுவாக பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக கல்வி பெறும் காலத்தில் அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை போன்றன வழங்கப்பட்டு வந்தமையை அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு மிசனரிகளின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளால் பெண்கள் சிலர் கல்வி கற்கத் தொடங்க அதனைப் பார்த்து மற்றைய பெண்களும் கல்வி கற்கத் தொடங்கினர். பெண்கள் கல்வி பற்றி இந்து சாதனப் பத்திரிகை 1891 யூன் மாதத்தில் எழுதிய குறிப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது (இந்து இளைஞன், 1965).

> *"கிறிஸ்தவப் பாதிரிகள் இந்துச் சிறுமிகட்குத் தம் மதத்தைக் கொளுத்திவிட்டால் அவர்களும் அதைவிடாது பற்ற அவர்கள் காரணமாக ஆடவர்களும் விடார்களென்று பெண்களுக்கு கல்வி கற்பித்தலாகிய வியாசத்தை முதலில் மேற்கொண் டார்கள். பெண்களுடைய அற்பக் கல்வியினால் வரும் பல கேடுகளை நன்கு அறிந்து அதனைச் சிறிது விரும்பினராயினும் அயல் வீட்டுப் பெண் படித்து எழுத வாசிக்கக் கூடியவளாக இருக்க நம்முடைய மகள் அவை அறியாதவளாய் இருப்ப தென்னவென்று நம்மவர் ஒவ்வொருவராகத் தம் பெண்களைப் படிப்பிக்கத் தொடங்கினர்"*

இவ்வாறு பெண்கள் கல்வியை ஊக்குவித்து வளரச் செய்த மிசனரிகளின் கல்விச் செயற்பாடுகள் பற்றி விரிவாக அறிதல் சிறப்பானது ஆகும். யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில்

குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர்களாக அமெரிக்க மிசனரியினர் காணப்படுகின்றனர்.

அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த ஒரு குழு 1813ஆம் ஆண்டில் சாமுவேல் நியுவேல் பாதிரியரின் தலைமையின் கீழ் இலங்கைக்கு வந்து இந்நாட்டின் கல்வி வரலாற்றில் ஓர் உன்னத தானத்தைப் பெறுவதற்கான அத்திவாரத்தை இட்டது. இக்குழுவினர் தம் நாட்டிலிருந்து புறப்பட்ட பொழுது இலங்கைக்கு வரும் நோக்கத்தோடு புறப்படவில்லை. இந்தியாவில் சமயப்பணி செய்யும் நோக்குடன் புறப்பட்டு 1812ஆம் ஆண்டு கல்கத்தாவை அடைந்தனர். அக்காலத்தில் இந்தியாவை ஆண்டு வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அவர்களை அங்கு அனுமதிக்க மறுத்தது. இதன் காரணமாக இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது இலங்கையின் ஆள்பதியாக இருந்த பிறவுண்ரிக் அமெரிக்க மிசனரிக் குழுவினருக்கு ஆதரவு அளித்தமையால் அவர்கள் இலங்கையில் தங்க வாய்ப்பு ஏற்பட்டது. அமெரிக்க மிசனரியினர் கொழும்பில் சிறிது காலம் தங்கிய பின்னர் நிரந்தரமாக வசிப்பதற்கென யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஏனைய இங்கிலாந்தைச் சேர்ந்த மிசனரிகளுக்கு கிடைத்த அரச ஆதரவு அமெரிக்க மிசனரியினருக்கு கிடைக்காமையினால் யாழ்ப்பாணமே தஞ்சம் என்ற நிலையில் தெல்லிப்பளையில் தமிழர் மத்தியில் வாழத்தொடங்கினர். இது யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியின் வளர்ச்சிக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

அமெரிக்க மிசனரியினர் ஆங்கிலேயர் அல்லாத காரணத்தினால் காணி கொடுக்கப்படாத போதிலும் தெல்லிப்பளையில் இருந்த ஒரு பழைய ஒல்லாந்த தேவாலயத்தையும் அதற்கு உரித்தான வளவையும் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது (ரன்ஜித் ருபேறு, 1962). இவ்வாறு முதலில் தெல்லிப்பளையிலும் அடுத்து வட்டுக் கோட்டையிலுமாக இரு நிலையங்களை அமைத்தனர். 1820ஆம் ஆண்டில் உடுவில், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் மேலும் இரு நிலையங்களை நிறுவினர். இவற்றையடுத்து மானிப்பாய், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளிலும் நிலையங்களை

நிறுவினர். இத்துடன் 1834இல் மொத்தம் 7 நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தன.

அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உள்ளே மட்டுமே பணியாற்றியமையால் யாழ்ப்பாண மக்களுக்கு தமிழ் மொழியிற் கல்வி புகட்டுவதற்கு பெருமுயற்சி செய்தனர். இவர்களின் அடிப்படை நோக்கம் தமது சமயத்தைப் பரப்புவதாக இருந்த போதிலும் தமிழர் கல்வி பெரிதும் அபிவிருத்தியடைந்தது.

அமெரிக்க மிசனரியினர் தமது சமய அறிவை எளிதாகப் புகட்டுவதற்காக தமிழ் மொழியில் எழுத, வாசிக்கத் தெரிந்த ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முதலில் இளைஞர்களுக்கு கல்வி கற்பிக்கத்தக்கதாய் கிராமப் பாடசாலைகளை நிறுவினர் (வேலுப்பிள்ளை,1984). தாம் மேற்கொண்ட மதமாற்றப் பணிக்கு மிகச் சிறந்த சாதனம் பாடசாலைகளே என்பதை நன்கு உணர்ந்த அமெரிக்க மிசனரியினர் விவிலிய நற்செய்தியைப் பரப்புவதற்கு தமது பாடசாலை முறையை சிறந்ததொரு கருவியாகப் பயன்படுத்தினர். இதனால் இவர்களால் கல்வி நிறுவனமயப்பட்டதாக வளர்ச்சி யடைந்து வளரத் தொடங்கியது.

அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாணத்தில் அமைத்த பாடசாலை முறை எக்காலத்திலும் பாராட்டக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டது. இவர்கள் மூன்று விதமான பாடசாலைகளை அமைத்தனர். சுதேச பாடசாலைகள், மத்திய நாளாந்த பாடசாலைகள், இலவச விடுதிப் பாடசாலைகள் என்ற மூன்றுமே இவையாம்.

அமெரிக்க மிசனரியினரின் கல்விப்பணியை நோக்கும் பொழுது அவர்கள் பெண்கல்விக்கு ஆற்றிய தொண்டே அதி உன்னத தொண்டாகக் காணப்படுகிறது. கல்வி ஞானம் படைத்த ஒரு பெண் கல்வி ஞானம் படைத்த ஆறு ஆண்களிலும் கூடிய பயனைத் தனது நாட்டுக்கு அளிக்கும் ஆற்றலுடையவள் என அமெரிக்க மிசனரிமார் நம்பிக்கை கொண்டு இருந்தமையால் பெண்களின் கல்வியில் இவர்கள் விசேட கவனம் செலுத்தினர்.

அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாணத்து ஆண் பிள்ளைகள் சுதேச, ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொள்ள முயற்சிகள் எடுத்ததைப் போன்று யாழ்ப்பாணத்து பெண் பிள்ளைகளும் கல்வி கற்று நன்னிலை அடைய மிகுந்த கவனத்தோடு விசேட முயற்சிகள் செய்தனர். ஆதி மிசனரிமார் தாம் யாழ்ப்பாணத்திற்கு வந்த பொழுது கற்ற இரு பெண்களையே கண்டதாகக் குறிப்பிட்டு இருந்தனர். ஆனால் பெண்கல்வி விருத்தியடைந்தால் தங்கள் மிசன் ஊழியம் அனுகூல மடையும் என்பதை எண்ணிப் பெண்பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பிக்க மிகப் பிரயாசப்பட்டதாக வேலுப்பிள்ளை (1984) குறிப்பிடுகின்றார்.

அக்காலத்தில் பெண்பிள்ளைகள் ஆங்கிலேயக் கல்விமரபு களின்படி படித்தல் தகாத வழக்கம் என்று எண்ணியிருந்தபடியால் ஆரம்பத்தில் பெண்பிள்ளைகள் படிக்க முன்வராத நிலை காணப் பட்டது. 1817ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் வட்டுக்கோட்டை மிசன் வீட்டுக்கு சமீபமாய் வசித்த ஒரு முதலியாரின் பௌத்திரி யாகிய ஒரு சிறு பெண்பிள்ளை நிச்சேட்ஸ் அம்மாளிடம் படித்ததாய் ஒரு குறிப்பு உண்டு (வேலுப்பிள்ளை,1984). 1817ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த பூர் ஐயர் எழுதிய குறிப்பின்படி பெண்கள் கல்வி கற்க முன்வராத நிலையே காணப்பட்டது. ஆனால் இதன் பின்னர் யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றமான நிலை ஏற்படத் தொடங்கியது.

1818ஆம் ஆண்டு பூர் ஐயர் எழுதிய நாளாகமக் குறிப்பில் பெண்பிள்ளைகளுக்காகத் தாபிக்கப்பட்ட பாடசாலையிற் கிழமை தோறும் 8 பெண்பிள்ளைகள் வந்து படித்தார்களென்றும் ஒய்வு நாட்களில் 12 பெண்பிள்ளைகள் வந்து படித்தார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது. வட்டுக்கோட்டையில் 1819ஆம் ஆண்டு புரட்டாதி 4ஆம் திகதிக்கு முன் ஒரு பெண்பிள்ளையும் படிக்க வரவில்லையென்றும் அத்திகதியில் மிசன் வீட்டுக்கு அயலிலுள்ள ஓர் ஏழைக் கைம்பெண்ணின் மகள் எங்களிடம் படிக்க வந்தா ளென்றும் இவளே அப்பகுதியல் படிக்க முதல் சேர்ந்த பெண் பிள்ளை என்றும் மெக்ஸ்ஐயர் எழுதியிருக்கின்றார்

(வேலுப்பிள்ளை,1984). இவ்வாறு சில பெண்பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தனர். பூர் அம்மாள் பெண்பிள்ளைக்கு வெகுமதிகளை வழங்கியமையால் அது அவர்களை மிகக் கவனமாக படிக்கத் தூண்டியிருக்கலாம்.

1819ஆம் ஆண்டின் முடிவில் அமெரிக்க மிசனரியின் கீழ் நடைபெற்ற 15 பாடசாலைகளில் 633 ஆண்பிள்ளைகளும், 10 பெண்பிள்ளைகளும் படித்ததாக அமெரிக்க மிசனரிக் குறிப்புக்கள் கூறுகின்றன. 1819ஆம் ஆண்டில் மிசனரிமார் தாங்கள் தங்கி இருந்த தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும் பெண் பிள்ளைகளுக்காக தருமப் பாடசாலைகளை தாபிக்க முயற்சித்தனர். இம் முயற்சிக்கும் அக்கால யாழ்ப்பாண சமூக நிலமைகள் பல தடைகளை விதித்தது. ஆனால் காலம் செல்ல சிலர் தங்கள் பெண் பிள்ளைகளை தருமப் பாடசாலைகளுக்கு அனுப்பி அங்கே தங்கிப் படிக்கவிடத் தொடங்கியதாக அறியப்படுகிறது. இவ்வாறு 9 பெண் பிள்ளைகள் தருமப் பாடசாலைகளிற் சேர்க்கப்பட்டு வாசினை, தையல், வீட்டுவேலை ஆகியவற்றிற் படிப்பிக்கப்பட்டனர் (வேலுப்பிள்ளை, 1984). இவ்வாறு 9 பெண்பிள்ளைகள் தருமப் பாடசாலையிற் தங்கிப் படித்தமையால் இனிவரும் காலங்களில் கல்வி கற்கவரும் பெண்களின் தொகை தாம் எதிர்பார்த்த வகையில் அமையும் என்ற நம்பிக்கை மிசனரிமாருக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக பெண்கள் கல்வி விருத்தியில் அமெரிக்க மிசனரிமார் தனிக் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

அமெரிக்க மிசனரியினரின் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்த பெண்கள் படிப்படியாக மதம் மாறத் தொடங்கினர். 1821ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதி தெல்லிப்பளையில் வைக்கப் பட்ட திருவிருத்தாராதனையில் அங்குள்ள பெண் தருமப் பள்ளியி லிருந்தும் மிறாண்டா சல்வோட், மேரி பூர் என்னும் பெயர்களு டைய இரண்டு பெண்பிள்ளைகள் விசுவாச அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபை சேர்ந்தனர். அமெரிக்க இலங்கை மிசன் திருச்சபையில் முதற்சேர்ந்த சுதேச பெண்பிள்ளைகள் இவர்களாம். இவர்கள் இருவரும் தெல்லிப்பளையில் பூர்

அம்மாளுடன் வசித்து அங்கு படித்தவர்கள் ஆவர் (வேலுப்பிள்ளை, 1984).

அமெரிக்க மிசனரியினர் பெண்களின் கல்வியோடு திருமண விடயங்களிலும் கவனம் செலுத்தியமை, பெண்கள் கல்வியை மேலும் தூண்டக் காரணமாயிற்று. 1822ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3ஆம் திகதி தெல்லிப்பளையிலே அமெரிக்க மிசனரியினரால் முதல் விவாகச் சடங்கு மேற்கொள்ளப்பட்டது. இவ் விவாகம் சாதிக் கட்டுப்பாட்டை மீறிக் கல்வி அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஒன்றாகக் காணப்பட்டமையினால் மக்கள் அதிசயத்தோடு பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினர். இதனைப் பின்வரும் கூற்றுக்களில் இருந்து அறியலாம் (வேலுப்பிள்ளை,1984).

*"மணவாளனும் மணவாட்டியும் ஒரே சாதியாராயிராதபடியால் கண்டோர், கேட்டோர் யாருடைய மனதிலும் மணவாள னுடைய இவ் விவாக ஒழுங்குகள் பழைய வழக்கங்களுக்கும் சாதிக் கட்டுப்பாட்டிற்கும் முழு விரோதமாயிருந்தன"*

*"இந்த வாலிபன் சுற்றத்தார் கவனித்தபடி சாதியையுஞ் சீதனத்தையுங் கவனித்திலன். மணமகள் சாதி, மணமகன் சாதியிலும் மிகக் குறைவாக மதிக்கப்பட்டது. மணமகன் வேறு இடத்தில் விவாகம் செய்திருப்பின் அதிக சீதனம் வாங்கக் கூடியதாயிருந்திருக்கும். அவன் படிப்பை மாத்திரம் கவனித்து அந்தப் பெண்ணைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாய்க் கொண்டான்"*

இவ்வாறு படித்த பெண்களை விவாகம் செய்ய விரும்புகின்ற முறையின் ஆரம்பத்தினால் பெண்கள் கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியது. இந்த விவாகத்திற்குப் பின்னர் மணமகள் வசித்த இடத்துக்குச் சமீபமாயிருந்த மூன்று உயர்சாதிப் பெண்கள் மிசன் பெண் பாடசாலையிற் சேர்த்து படிக்கக் கேட்டதுடன் பல பெண்பிள்ளைகள் திருச்சபையுடன் சேர விருப்பம் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்ற சிந்தனை விரிவடைந்து கொண்டிருந்த இக்கால கட்டத்திலே பெண்களுக்கென உயர்தரப் பாடசாலை ஒன்று உடுவிலிலே அமைக்கப்பட்டமை பெண்கல்வி வளர்ச்சியின் ஒரு முக்கியமானபடி எனலாம். வட்டுக்கோட்டையில் நிறுவப்பட்ட ஆண்களுக்கான கல்லூரியின் தரத்தில் பெண்களுக்கும் ஓர் உயர்கல்லூரி இருக்க வேண்டுமெனத் தீர்மானித்து 1824ஆம் ஆண்டில் உடுவிலில் அமைக்கப்பட்ட உயர்தரப் பாடசாலையானது அமெரிக்க மிசனரியினரின் நோக்கங்களை நிறைவேற்ற உதவிய தோடு யாழ்ப்பாணத்துப் பெண்கல்வித் துறையிலே மிக முக்கிய பங்கை வகிக்கவும் காரணமாயிற்று.

உடுவில் யாழ்ப்பாணப் பட்டணத்தில் இருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தி லேயே சனச் செறிவுடன் காணப்பட்ட இக் கிராமத்தைச் சுற்றிப் பல கிராமங்கள் அமைந்திருந்தன. வடகிழக்கில் சுன்னாகமும், வடமேற்கில் சண்டிலிப்பாயும், தெற்கில் சுதுமலையும், தென்கிழக்கில் இணுவிலும், தென்மேற்கில் மானிப்பாயுமாக பல கிராமங்கள் உடுவிலைச் சுற்றி இருந்தன.

அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த உவின்ஸ்லோ பாதிரியாரும், அவர் தம் துணைவியாருமாகிய உவின்ஸலோ அம்மையாருமே அமெரிக்க மிசனரிச் சபைக்குரிய நிலையத்தை உடுவிலில் நிறுவிய சமய ஊழியர்களாவர். இவர்கள் 1820ஆம் ஆண்டில் உடுவிலுக்கு வந்து அங்கிருந்த ஒல்லாந்தர் கால ஆலயம் ஒன்றிற்கு அருகில் அழிந்து கிடந்த கல்வீடு ஒன்றைத் திருத்தி அதில் குடிபுகுந்தனர். வீட்டு விறாந்தையிலே நாளாந்தப் பாடசாலையை நடாத்தினார்கள். அந்நாட்களில் உவின்ஸ்லோ அம்மாவிடம் இரண்டு பெண்பிள்ளை கள் நாள்தோறும் சென்று படித்து வந்ததாகவும் ஒரு நாள் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டிய நேரத்தில் புயல் வீசியபடியால் அவர் கள் வீட்டுக்குப் போகாமல் மிசன் வீட்டிலேயே தங்கி நின்றதாகவும், அப்பிள்ளைகளுள் ஒன்று உவின்ஸ்லோ அம்மாள் கொடுத்த சாப்பாட்டை உண்டதாகவும், இதை அறிந்த தகப்பன் சாப்பாடு கொடுத்து சாதிக்கட்டுப்பாட்டை அழித்தபடியால் அப்பிள்ளையை

ஏற்றுத் தனது வீட்டில் வசிக்க இடமளிக்க முடியாது எனவும் அவளுக்கு விவாகம் செய்து கொடுக்க இயலாது எனவும் கூறி அவர்களையே அப்பிள்ளையை வைத்துக் கொள்ளுமாறு விட்டுச் சென்றதாகவும், உவின்ஸ்லோ அம்மையார் மிகவும் மன மகிழ்ச்சி யுடன் அப்பிள்ளையை ஏற்று விடுதியில் சேர்த்து படிப்பித்ததாகவும் அறியப்படுகிறது (ஹரிஸ்சன்,1924).

மேற்குறித்த சம்பவத்தின் மூலமாக ஆரம்பமான விடுதிப் படிப்பைத் தொடர்ந்து வேறு சில பெண்பிள்ளைகளும் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து 1824ஆம் ஆண்டு உடுவிலில் ஆரம்பிக்கப்பட்ட விடுதிப் பெண் பாடசாலை தான் இன்று உயர்தர விடுதிப் பெண் பாடசாலையாய் உடுவிலில் விளங்கி வருகிறது. இது பிரித்தானியர் காலத்தில் பெண் கல்வியில் ஏற்பட்ட துரித முன்னேற்றத்திற்கான ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. உடுவிற் பாடசாலை யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கை, இந்தியா, ஆசியாக் கண்டம் என்பவற்றிலும் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்ட விடுதிப் பெண் பாடசாலையாகும். இதில் இருந்து அக்காலகட்டத்தில் இலங்கையிலும் ஏனைய அயல்நாடுகளுடனும் ஒப்பிடுகின்ற பொழுது யாழ்ப்பாணப் பிரதேசமே பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கியதெனக் குறிப்பிடலாம்.

உடுவிற் பெண் பாடசாலையின் ஆரம்பத்தின் பின்னர் யாழ்ப்பாண சமூக அமைப்பிலே பெண்களும் கல்வி கற்க வேண்டுமென்ற சிந்தனை வேகமாக வளர்ச்சி அடையத் தொடங்கியது. ஆதி அமெரிக்க மிசனரிமார் யாழ்ப்பாணம் வந்த பொழுது பெண்கள் கல்வி கற்பது தகுதியல்ல என்றும், மிசன் வளவுகளில் பெண் பிள்ளைகள் போசன மருந்துதலும், மிசனரிமார் வளவுக் கிணறுகளில் தண்ணீர் குடித்த லும் தகாதது என்று நிலவிய தப்பான எண்ணங்கள் படிப்படியாக மறைந்தன. 1828ஆம் ஆண்டு உடுவிற் பெண் பாடசாலையிற் சேர விருப்பமுள்ள பெண்பிள்ளைகளை வரும்படி பிரசித்தஞ் செய்த பொழுது 70 பெண்பிள்ளைகள் சேர ஆயத்தமாக வந்துள்ளனர். அவர்களுள் 12 மாணாக்கிகள் மாத்திரஞ் சேர்க்கப்பட்டு மற்றவர்களுக்கு இடமில்லை என்று சொல்லப்பட்டது. இதைக்

கேட்ட பெற்றோர் எப்படியும் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மன்றாடினர். அம்மன்றாட்டுக்கு இடங் கொடுக்க வசதியில்லாததினால் அப்பெற்றார் அதிக துக்கத்தோடு வீட்டுக்குத் திரும்பினர் (வேலுப்பிள்ளை,1984) என அறியப்படுகிறது. இவ்வாறு பெண்களும் கல்வி கற்கவேண்டுமென்ற சிந்தனை பிரித்தானியர் காலத்தில் தீவிரமாக வளரத் தொடங்கியது.

அமெரிக்க மிசனரிச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் பெண்கல்விக்காக தொண்டாற்றியது. 1823ஆம் ஆண்டு செமினரி என்ற பெயரில் ஒரு பள்ளிக்கூடம் வட்டுக்கோட்டையில் ஆரம்ப மானது. இது வட்டுக்கோட்டை செமினறி என அழைக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக இருந்த காலநிதி டானியல் பூவர் அவர்கள் 1867ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடைபெறத்தக்க ஓர் உயர்தர ஆங்கிலப் பள்ளிக்கூடம் "யாழ்ப்பாணக் கல்லூரி" என்ற பெயருடன் யாழ்ப்பாண அமெரிக்க மிசனின் ஆதரவில் ஸ்தாபிக்க வேண்டும் (வேலுப்பிள்ளை,1984) எனக் கூறினார். இங்கு உயர்கல்வி கற்க விரும்பி பல பெண்கள் கல்வி கற்றுள்ளமை பெண்கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றது.

அமெரிக்க மிசனரிமார் யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதியில் மாத்திரமன்று கிழக்குப் பகுதியிலும் வசித்து, பெண் பாடசாலையை ஸ்தாபித்துப் பெண் பிள்ளைகளைப் படிப்பித்தும் மற்றும் மிசன் வேலைகளைச் செய்வித்தும் வந்து உள்ளனர். யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள தென்மராட்சி, வடமராட்சியிலுள்ள பெண்பிள்ளைகள் கற்றுத் தேறும்படி கற்சிங்ஸ் ஐயர் 1834ஆம் ஆண்டு வரணியில் ஒரு விடுதிப் பெண் பாடசாலையை ஸ்தாபித்து நடத்தினார் (வேலுப்பிள்ளை,1984). வரணி உடுவிலிலிருந்து 16 மைல் தூரத்தில் இருந்தது. ஆனால் தொடர்ந்து வரணிப் பெண்பாட சாலையை நடத்த முடியாதவாறு பொறுப்பானவர்கள் இறந்து போனபின் 1845இல் வரணிப் பெண் பாடசாலை நிறுத்தப்பட்டது. இக்கல்லூரி நிறுத்தப்பட்டாலும் தொடர்ந்து பெண்கள் கல்வி வளர்ச்சிக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் அமெரிக்க மிசனரியினரால் அமைக்கப்பட்ட உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலையும் குறிப்பிடத்தக்கதாகும். 1867ஆம் ஆண்டு 25 பிள்ளைகள் படிக்கவும், விடுதியில் விடவும் வசதியாக மண்டப மொன்று அமைக்கும்படி கனம் J.C.சிமித் ஐயர் நியமிக்கப்பட்டார். இவர் அமெரிக்க மிசன் அனுப்பிய தொகையுடன் இலங்கையிலும் பணம் சேர்த்து அதன் கட்டிடத்தை மிசன் வளவில் அமைத்தார். கனம் J.C.சிமித் ஐயர் 1868ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7ஆம் திகதி 17 பிள்ளைகளுடன் இப்பாடசாலையைத் துவக்கினார் (வேலுப்பிள்ளை,1984). 1893ஆம் ஆண்டு தொடக்கம் மாணாக்கி களின் தொகை அதிகரித்து வந்தமையினால் 1895ஆம் ஆண்டு பாடசாலை மண்டபம் பெருப்பித்துக் கட்டப்பட்டது. 1905ஆம் ஆண்டு அமெரிக்க மிசன் வசதிப்படி உடுவிற் பெண் பாடசாலை யோடு சேர்க்கப்பட்டாலும் பின்னர் வடமராட்சி, தென்மராட்சி பெண்பிள்ளைகளின் நன்மை கருதி மீண்டும் 1908ஆம் ஆண்டு உடுப்பிட்டியில் பாடசாலையைத் திறந்து நடத்தினர்.

அமெரிக்க மிசனரிமார் பெண்களுக்கு என விடுதிப் பாடசாலை களை அமைத்து ஆங்கிலக் கல்வியையும் வளர்த்துக் கொண்டனர். இத்துடன் நின்றுவிடாது ஆங்காங்கு கிராமங்கள் தோறும் சுதேச பாலர் பாடசாலைகளையும் அமைத்துக் கொண்டனர். இவை அமெரிக்க மிசனரியினரால் அமைக்கப்பட்ட கிராமிய பாடசாலை களாகும். இக்கிராமிய பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களாக செமினரியிலே சிறிது காலம் கற்று வெளியேறியவர்களும் தமிழ் பாசையை வாசிக்க எழுத அறிந்தவர்களுமான சிலர் நியமிக்கப் பட்டனர். சுதேச பெண்பாலரும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட அமெரிக்க மிசனரியினர் வழிவகுத்தனர். இந்த வகையில் 1885ஆம் ஆண்டில் உடுவிலிலும், 1886ஆம் ஆண்டில் வேம்படியி லும் மூன்று ஆண்டு பயிற்சித் திட்டங்கள் கொண்ட ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டன (Scowofort Elise, 1938). இவ்வாறு யாழ்ப்பாண பெண்கள் கற்பதோடு மட்டும் நின்றுவிடாது கற்பித்தலிலும் ஈடுபடத்தக்க விதமாக மிசனரிமார் பெண்கல்வியை வளர்த்தனர் எனலாம்.

அமெரிக்க மிசனரிமார் எடுத்த பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1819ஆம் ஆண்டிற்கும் 1911ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பள்ளிக்கூடங்களின் அளவும், அங்கு கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கையும் துரித வளர்ச்சி பெற்றன என்பதைப் பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

*அமெரிக்க மிசனரிமார் அமைத்த தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் அதில் கற்ற தமிழ்ப் பெண்களின் தொகையும்*

| வருடம் | பள்ளிக்கூடங்களின் தொகை | பெண்கள் |
|---|---|---|
| 1819 | 15 | 10 |
| 1824 | 90 | 613 |
| 1836 | 155 | 1000க்கு மேல் |
| 1868 | 60 | 728 |
| 1879 | 121 | 1400 |
| 1884 | 138 | 1751 |
| 1900 | 133 | 2791 |
| 1911 | 118 | 3544 |

*ஆதாரம் : ஜெபநேசன்.எஸ் (1983), அமெரிக்க மிசனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்,யாழ்ப்பாணக், கல்லூரி வட்டுக்கோட்டை, ப. 27*

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க மிசனரியினருக்கு முன்னர் மிசன் ஊழியம் செய்ய வந்தவர்களில் காலத்தால் முந்தியவர்கள் 1805ஆம் ஆண்டில் வந்த லண்டன் மிசனரிச் சங்கத்தினர் ஆவார். இவர்கள் யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்வியைப் பொறுத்தவரை பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதேபோல் 1812ஆம் ஆண்டு அளவில் இங்கு வந்த பப்ரிஸ்ட் மிசனரியினரும் கொழும்பிலும், காலியிலும் தமது

பணிகளைச் செய்தனரே அன்றி யாழ்ப்பாணப் பெண்கல்வியின் முன்னேற்றத்திற்கு இவர்கள் எவ்வித பணியையும் ஆற்றவில்லை. இவர்களைத் தொடர்ந்து 1814ஆம் ஆண்டு அளவில் இங்கு வந்த வெஸ்லியன் மிசனரியினர் யாழ்ப்பாணப் பெண்கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தனர்.

வெஸ்லியன் மிசனிமாருள் வண பீற்றர் பேர்சிவலும், அவரது மனைவியும் யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியின் வளர்ச்சியில் மிக முக்கிய காரணகர்த்தாக்களாக விளங்கினர். இவர்கள் பெண்களுக் கெனத் தனியான பாடசாலைகளை அமைத்து நடாத்தினர். பேர்சிவல் பெண்களுக்கு என ஒரு விடுதிப் பாடசாலையை 1834இல் யாழ்நகரில் ஐந்து மாணவியருடன் ஆரம்பித்தார் (ஸ்மோல் 1961). தொடர்ந்து 1838ஆம் ஆண்டில் வணக்கத்திற்குரிய பேர்சிவலும், திருமதி. பேர்சிவலும் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள வேம்படி வளவு என்னும் நிலப்பரப்பிலே பெண்களுக்கு என இரண்டு ஆரம்பப் பாடசாலைகளை நிறுவினர். வேம்படியின் கல்வி வரலாற்றிலே 1838ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவமானதாகும். வண.பீற்றர் பேர்சிவல் வேம்படியில் மகளிர் விடுதித் தமிழ்ப் பாடசாலையை ஆரம்பித்தார். இம்மகளிர் விடுதிப் பாடசாலையே பிரபல வேம்படி மகளிர் பாடசாலையாக வளர்ச்சியுற்றது.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வியை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் திரு.திருமதி. பேர்சிவல் அவர்கள் அருகிலுள்ள கிராமங்களிலும் பல பாடசாலைகளை நிறுவினர். இவர்கள் தட்டாதெருவிலும், தச்ச தெருவிலும் பெண்களுக்கெனப் பாடசாலை களை நிறுவினர். தட்டா தெருவிலுள்ள பெண்கள் பாடசாலையில் 25 மாணவியரும், தச்ச தெருவிலுள்ள பாடசாலையில் 16 மாணவி யரும் கல்வி கற்றனர். இது தவிர ஆண்கள் பாடசாலையிலும் பெண்கள் கல்வி பயின்றனர். வண்ணார்பண்ணையிலுள்ள ஆண்கள் பாடசாலையில் 6 பெண்களும், பெரிய கடையிலுள்ள ஆண்கள் பாடசாலையில் 19 பெண்களும், ஆரிய குளத்திலுள்ள ஆண்கள் பாடசாலையில் 6 பெண்களும் அக்காலத்தில் கல்வி பயின்றனர் *(Scowofort Elise,1938)*.

பிரித்தானிய கால யாழ்ப்பாண சமூக அமைப்பின் ஆரம்பத்திலே வயதில் முதிர்ந்த பெண்களே பெண்கள் கல்வி பெறுவதை வெறுத்த நிலை காணப்பட்டது. இத்தகைய நிலையிலும் தளராத மன உறுதியினால் பெண்களின் கல்வியை வளர்ச்சிப் பாதையிற் கொண்டு செல்லும் முகமாக பல நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அறியக் கூடியதாக உள்ளது. இவர்களின் காலத்தில் பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் தமிழ், ஆங்கிலப் பெண் பாடசாலைகள் சிறப்பாக இயங்கின. சிறப்பாக இயங்கிய பாடசாலைகளுள் வேம்படிப் பாடசாலை சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வேம்படி பாடசாலை வெஸ்லியன் மிசனரிமாரின் மனைவியராலும், பெண் மிசனரியினராலும் சிறப்புற நடாத்தப்பட்டது. இப்பாடசாலை யில் படித்த பலர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறினர். சிலர் தமது உயர்கல்வியை மேற்கொள்ள வெளிநாடுகளுக்கும் சென்றனர். வெஸ்லியன் மிசனரியினரால் போடப்பட்ட அத்திவாரத்தின் மேல் இன்றும் வேம்படிப் பெண்கள் பாடசாலை யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பணியினை ஆற்றி வருகின்றது.

வெஸ்லியன் மிசனரிமாரினால் அமைக்கப்பட்ட உயர்தர விடுதிப் பெண் பாடசாலையில் பருத்தித்துறையில் அமைக்கப்பட்ட பெண்கள் பாடசாலையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இப் பாடசாலை 1875ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய டபிள்யூ.ஆர். வின்ஸ்ரனாலும் அவரது பாரியாராலும் அமைக்கப்பட்டது *(ஸ்மோல் 1961)*. இப்பாடசாலையில் பல பெண்கள் கல்வி கற்று உயர்கல்விக்காக இலங்கை, இந்திய பல்கலைக்கழகங்களிலே படிப்பினைத் தொடர்ந்தனர். அமெரிக்க மிசனரியினரைப் போன்று யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியில் வெஸ்லியன் மிசனரியினரின் கல்விப் பணிகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

வெஸ்லியன் மிசனரிமாரால் அமைக்கப்பட்ட மூன்றாம் தரச் சுதேச பாடசாலைகளும் பெண்கள் கல்வி விருத்தியில் குறிப்பிடத் தக்க பங்காற்றியுள்ளது. மூன்றாம் தர சுதேச பாடசாலைகளில் ஆங்கிலம் கற்க விரும்பியவர்களுக்கு மேலதிகமாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. இப்பாடசாலைகளில் பொதுவாகப் பெண்கள்

மாத்திரமே கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கதாகும். விசேடமாக பெண்களுக்கு அவசியமான தையற்பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறான பயிற்சிகள் பெண்களுக்கு மிகவும் பயன் உள்ளவையாக இருந்தமையால் பெண்பிள்ளைகள் மிக விருப்பத்துடன் இப் பாடசாலைகளுக்குச் சென்றனர். இதனால் பெண்கள் பல துறைகளிலும் தம் அறிவினை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் திருச்சபை மிசனரியின் பணிகளும் குறிப்பிடத்தக்கனவாக இருந்தன. இவர்கள் பிறசமயத்தவரை கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வழிப்படுத்துவதற்கு ஒரே வழி கல்வியே என நம்பினர். திருச்சபை மிசனரியினர் யாழ்ப்பாணத்தில் தமது பணியை ஆரம்பித்த பொழுது முதற்கட்டமாக 1841ஆம் ஆண்டு "சுண்டிக்குளி" அவர்களின் பணிநிலையமாக பொறுப்பேற்கப்பட்டது. நல்லூரில் தமது மிசனுக்கு உரிய வீட்டை அமைத்தனர். இந்த மிசன் இல்லத்தில் முதன் முதலில் ஏழு மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வியே திருச்சபை மிசனரியினர் யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு செய்த பெரும் தொண்டின் ஆரம்பம் ஆகும்.

திருச்சபை மிசனரியினர் ஆண்களுக்கு அளிக்கப்படும் கல்வி மூலம் செய்யப்படும் மதமாற்றம் பூரணத்துவம் பெற வேண்டுமாயின் சிறந்த கிறிஸ்தவக் குடும்பங்களை ஏற்படுத்துவதன் மூலமே நிறைவு பெறும் என்றும் இது வெற்றியளிப்பதற்குப் பெண்களுக்கு கல்வி வழங்குவது அவசியமானது என்றும் உணரத் தலைப்பட்டனர். இதனால் பெண்களுக்கு என சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை நிறுவினர்

திருச்சபை மிசனரியைச் சேர்ந்த திரு.காட்டரும் திருமதி. காட்டரும் வழி நடத்தியதன் காரணமாக 1896ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஒன்பது மாணவிகளுடன் பரியோவான் கல்லூரியின் தென்மேற்கு மூலையில் பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதுவே சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் அத்திவாரமாகும் (சிறி கைலாஜினி,1993). சுண்டிக்குளி

மகளிர் கல்லூரி யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வரலாற்று வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு முக்கிய படி ஆகும்.

அமெரிக்க மிசனரியினரைப் போலவே கத்தோலிக்க மிசனரிமாரும் யாழ்ப்பாணப் பெண்களுக்கு கல்வி புகட்டுவதில் விருப்பம் கொண்டிருந்தனர். இதில் முன்னின்று உழைத்தவர் வணக்கத்திற்குரிய பெற்றாச்சிரி ஆண்டகையாவார். இவர்களது முயற்சியின் பலனாய் யாழ்ப்பாணப் பெண்களுக்குக் கல்வி போதிக்க என யாழ்ப்பாணத்தில் ஓர் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையை உருவாக்கினர். 1845ஆம் ஆண்டளவில் பெண்களுக்கான இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவர்களால் 1850ஆம் ஆண்டில் திருமதி. அனாஒபிளங்கன் தலைமையில் பெண்களுக்கென ஓர் ஆங்கிலப் பாடசாலை நிறுவப்பட்டது. இப்பாடசாலை இவரது மகள் செல்வி. கதரீனா ஒபிளங்கன் என்பவரது உதவியுடன் யாழ்ப்பாணப் பெண்களுக்கு கல்வி புகட்டுவதில் பெரும் தொண்டாற்றியது.

வணக்கத்திற்குரிய பெற்றாச்சிரி அடிகளாரைத் தொடர்ந்து பிசப் சேமேரியா பிரான்ஸ் நாட்டிலுள்ள போடோ நகரிலுள்ள திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இருந்து ஆறு கன்னியாஸ்திரிகளை யாழ்ப்பாணத்திலுள்ள திருச்சபைக்குத் தொண்டாற்ற அழைத்து வந்தார். இவர்களே முதன்முதலில் இங்கு வந்து சிறப்பான முறையிலே பெண்களுக்குக் கல்வியைப் போதித்து அதை நிலைபெறச் செய்த கன்னியாஸ்திரிகள் ஆவர் (*Edmund Piris*). இவர்களது வருகையைத் தொடர்ந்து திருமதி.மேரி அனா ஒபிளங்கனால் நடாத்தப்பட்ட பாடசாலை இவர்களிடம் கையளிக்கப்பட்டது. இவர்கள் இவரிடம் இருந்து தேவையான வழிமுறைகளைப் பெற்று இப்பாடசாலையைத் திறம்பட நடத்தினர். 1869இல் தற்போதைய கன்னியர்மடப் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டு பெண்களின் கல்விக்காகத் திறந்து விடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய கன்னியாஸ்திரிமார் பெண்களின் கல்விக்காக தொண்டாற்றியதோடு மட்டும் நின்றுவிடாது யாழ்ப்பாணப் பெண்களை கன்னியாஸ்திரிமாராகவும் பயிற்றுவித்து

தமிழ்க் கல்வியை ஊட்டினர். இதனால் இப்பாடசாலை சிறந்த பெண்கள் கல்லூரியாக வளர்ச்சியடைத் தொடங்கியது. எவ்வித சுயநலமும் இன்றிக் கடமை ஆற்றிய கன்னியாஸ்திரிமார் தமது பணியை யாழ்ப்பாணத்தின் கிராமப் பகுதிகளுக்கும் விஸ்தரித்து கிராமத்துப் பெண்களும் கல்வி அறிவு பெற பெரும்பணி ஆற்றினர். இவ்வாறு இவர்களால் அமைக்கப்பட்ட கிராமப்புறப் பாடசாலை களுள் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகா வித்தியாலயம், பருத்தித்துறை திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை, அச்சுவெலி புனித திரேசா கன்னியர் மகா வித்தியாலயம், மாதகல் திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை, நாரந்தனை திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை, நெடுந்தீவுத் திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை என்பன குறிப்பிடத்தக்கன. இப்பாடசாலைகள் இன்றும் இக் கிராமத்தினதும், அயற்கிராமங்களினதும் பெண்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வகிக்கின்றன.

மிசனரிமார் யாழ்ப்பாணப் பெண்களின் ஆங்கிலக் கல்வி அறிவின் வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். யாழ்ப்பாணத்திலே முதன் முதலில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தவர்கள் வெஸ்லியன் மிசனரிமார்கள் ஆவர். இவர்கள் 1817ஆம் ஆண்டில் முன்னர் ஓர் அனாதர்சாலையும். லூதரின் தேவாலயமும் இருந்த இடத்தில், இப்பொழுது மத்திய கல்லூரி இருக்கும் இடத்தில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினர் (Centenary Memorial Edition, 1936). யாழ்ப்பாணத்து ஆண்களின் ஆங்கிலக் கல்வியில் மட்டுமல்லாது பெண்களின் ஆங்கிலக் கல்வியிலும் குறிப்பிடத்தக்க அளவு பங்காற்றினர்.

பெண்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு என 1824ஆம் ஆண்டில் உடுவிலில் ஓர் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்ப காலத்தில் பெண்களுக்கு ஆங்கில அறிவு தேவை இல்லை என்ற கருத்து நிலவியமையால் திருக்குடும்ப கன்னியர் மடப்பாடசாலையில் பறங்கிப் பெண்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி புகட்டப்பட்டதாக அறியப்படுகிறது. ஆனால் பின்னர் யாழ்பாணப் பெண்களுக்கும் போதிய ஆங்கில அறிவை வழங்க

வேண்டும் என்ற எண்ணம் தோன்றலாயிற்று. இதன் விளைவாக சுண்டிக்குளியில் பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை தோற்றம் பெற்றது. வேம்படியிலும் பெண்களுக்கென ஆங்கிலப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாணப் பெண்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் மிசனரியினர் கவனம் எடுத்தமைக்கு அக்கால பிரித்தானிய அரசின் மொழிக் கொள்கைகளும் காரணமாக அமைந்தன.

1829ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் நிர்வாகத்தைச் சீர்திருத்துவதற்கு கோல்புறூக் என்பவரைப் பிரித்தானிய அரசாங்கம் நியமித்தது. இவரின் ஆலோசனை பற்றி மென்டிஸ் என்பவர் குறிப்பிடுகையில் "தற்காலத்துத் தேவைக்கேற்ற கல்விமுறையை உதவாத வகையில் அமைத்த சுயபாஷைப் பாடசாலைகளை அகற்றிவிட்டு ஆங்கிலப் பாடசாலைகளைத் தாபித்து இலங்கை யரைப் பயிற்றுமாறு சிபாரிசு செய்தார்" என எழுதி உள்ளார்.

இவ்வாறு கோல்புறூக் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு பிரித்தானிய அரசு ஆங்கிலக் கல்வி புகட்டும் பொறுப்பை மிசனரிகளுக்கே ஒப்படைத்தது. அத்துடன் ஆங்கிலக் கல்வியை புகட்டும் பாடசாலைகளுக்கு உதவி நன்கொடைகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு அரச ஊக்குவிப்புக் கிடைத்தமையினால் பொதுவாக ஆண்களினதும் பெண்களினதும் ஆங்கிலக் கல்வி அறிவில் மிசனரிமார் அதிக கவனம் செலுத்தினர். இவ்வாறு யாழ்ப்பாணப் பெண்கள் தமது சுதேச மொழியிலும், ஆங்கில மொழியிலும் அறிவைப் பெற்று வளர்ச்சி அடைந்தனர்.

பிரித்தானியர் கால யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி அறிவைப் பொதுவாக நோக்குகின்ற பொழுது மிசனரிகளின் கல்விப் பணிகளா லும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதமாற்ற நடவடிக்கைக ளாலும் யாழ்ப்பாணத்தின் குடும்ப அமைப்புகளிலே பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. மிசனரிகளின் வருகையினால் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கருத்து எனலாம். காரணம் மிசனரிகளின் வருகைக்கு முன்னர் பொதுவாக யாழ்ப்பாணப்

பெண்கள் அதிகமாக பழமையிலும், மூடநம்பிக்கைகளிலும் ஊறி இருந்தனர். பண்டைய யாழ்ப்பாண சமூகத்தில் பொதுவாகப் பெண்கள் கல்வி பெறுவதை அதிகம் விரும்பாத நிலையே காணப்பட்டது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மிசனரியினர் பெண்களுக்கென தனிப்பட்ட பாடசாலைகளை நிறுவி தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் அறிவைப் பெறவைத்ததோடு வாழ்க்கைக்குத் தேவையான தையல்கலை, மனையியற்கலை என்பவற்றோடு பல உலக விடயங்களையும் அறியக்கூடிய வகையில் பெண்களின் கல்விப் பரப்பினை விரிவடையச் செய்தனர் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணப் பெண்களின் அறிவுப் பரப்பானது பிரித்தானியர் கால மிசனரிமாரின் நடவடிக்கைகளை அடுத்து விருத்தியடைந்து சென்றமையால் குடும்பம் என்ற குறுகிய எல்லையைத் தாண்டிப் பெண்கள் ஆசிரியர்களாகவும், தாதிகளாகவும், வைத்தியர்களாகவும் பணியாற்றத் தொடங்கியதோடு, உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கும் செல்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பெண்கல்வியின் மூலமாக மிசனரியினர் பெண்களை இலகுவாக மதமாற்றம் செய்தமையால் யாழ்ப்பாணத்தின் குடும்ப அமைப்பில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கு படிப்படியாக வளர்ச்சி அடையத் தொடங்கியது. இதனைக் கண்ணுற்ற சுதேசிகள் தொடர்ந்து மிசனரிகளின் உதவியுடன் பெண்கள் கல்வியினைப் பெறுகின்ற முறை வளர்ந்துகொண்டு செல்லுமாயின் சைவத்திற்கும், தமிழுக்கும் ஏற்படும் பாதிப்புக்களால் பின்னடைவுகள் ஏற்பட்டு அதனால் யாழ்ப்பாண மக்களின் குடும்ப அமைப்பு, சமூகக் கட்டுக்கோப்பு என்பவற்றிலும் பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை உணர்ந்தனர். இதன் விளைவாக மிசனரிகளைப் போன்று பெண்களுக்கென தனிச் சைவப் பெண்கள் பாடசாலைகளை நிறுவ முன்வந்தனர். இந் நடவடிக்கை யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி அறிவானது பண்பாடு, பாரம்பரியங்களோடு இணைந்து நிறுவன ரீதியாக வளர்ச்சி அடைவதற்கு காரணமாயிற்று.

## 5.3 யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியில் சுதேசிகளின் பங்களிப்பு

கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்கும் இந்து மாணவர்கள் தங்கள் சமய நெறியையும், கலாசாரத்தையும் புறக்கணித்துத் தமிழ்க் கலாசாரத்தின் பெருமையை உணர முடியாதவர்களாய், தமது சொந்த நாட்டிலேயே அந்நியர் போல் வாழவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்ற அச்சம் இந்து மக்களிடையே ஏற்படத் தொடங்கியது. இவ் அச்சம் காரணமாக ஆங்கிலப் பாடசாலைகளி லும் இருமொழிக் கல்வி இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையும் அரசாங்கத்திடமிருந்து உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் சமயக் கல்வி போதிப்பது நிறுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை யும் இக்காலப் பகுதியில் எழலாயின. இத்தகைய நிலையிலே குடும்பத்தின் கட்டுக்கோப்பிற்கு காரணமாக இருந்த பெண்களின் நிலைமை பற்றியும் சிந்திக்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினைச் செய்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள் இந்துப் பெண்களின் கல்வி பற்றி பேசப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் குறித்துக்காட்டினார். இராமநாதன் அவர்களின் இக்கூற்று அக்கால இந்துச் சமூகத்தின் மனப்பாங்கையே பிரதிபலிக்கின்றது.

> *"இந்துப் பெண்களுக்கு ஆங்கிலக்கல்வி அவசியமில்லை என்ற காலம் போய் இப்போது அந்த மொழியைக் கற்காவிட்டால் கல்வி அறிவு முற்றுப்பெறாது என்ற காலம் வந்துவிட்டது. ஆனால் நம் நாட்டின் பரிதாபநிலை என்னவெனின் நமது பெண்களின் கல்வி ஸ்தானங்கள் அநேகமாக கிறிஸ்தவ மிசனரிமாரின் கையில் இருக்கின்றன. கிறிஸ்தவ மிசனரிமார் தமது கல்வி முறையில் இந்துமத நாகரிகத்தின் கலைப்பண் பைக் கொன்றது மாத்திரமல்ல மாணவர்களைப் பொய்யராக வும் கபடிகளாகவும் சிருட்டித்துவிட்டார்கள்"*

யாழ்ப்பாண சமூகத்திலே மேற்குறித்தவாறு சைவ மாணவர் களின் கல்வி நடவடிக்கைகள் யாழ்ப்பாண சைவமரபுக்கு முரணாகச்

செல்வதாகக் கண்ணுற்ற ஆறுமுகநாவலர் அவர்களும் சேர்.பொன். இராமநாதன் மற்றும் பல மறுமலர்ச்சி சிந்தனையாளர்களும் மீண்டும் சைவமரபை ஒட்டிய கல்விச் செயற்பாடுகளை வளர்க்க முன் நின்று உழைத்தனர். சுதேசிகள் பெண்கள் கல்வியிலும் கவனம் செலுத்தினர் என்றால் அதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது மிசனரிகளின் கிறிஸ்தவ சமயக் கல்வி முறையினால் யாழ்ப்பாண சமூகத்தில் ஏற்பட்ட எதிர்மறைத் தாக்கங்கள் எனலாம். இவ்வாறான எதிர்மறைத் தாக்கங்கள் மிசனரிமார்களின் வருகையைத் தொடர்ந்து நிறுவப்பட்ட பள்ளிக்கூடங்களின் மூலம் ஏற்பட்டது. இத்தகைய தோர் செயற்பாட்டுக்குப் பின்னர் சுதேசக்கல்வி மரபில் பெண்கள் கல்விக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டதை நாவலர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணியும், சைவபரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், சேர்.பொன். இராமநாதன் போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் எடுத்துக் 'காட்டுகின்றன.

நாவலர் அவர்கள் சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலை களில் அல்லது அரசாங்கப் பாடசாலைகளிற் படிக்க வேண்டும் எனக் கூறினார். நாவலர், பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக்கூடங் களிலே வீபூதியை அழிக்கும்படி கட்டாயப்படுத்துவதாகவும் அவ்வாறு அழிக்க உடன்படாத பிள்ளைகளை வித்தியாசாலையி னின்றும் நீக்கி விடுகிறார்கள் என்றும் குறை கூறினார். நாவலரின் பிரசாரத்தினால் சைவசமயத்தைப் பாதுகாக்க என உருவாக்கப் பட்டதே 1888ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட "சைவபரிபாலன சபை" ஆகும். இவர்கள் சைவசமயத்தைப் பிரசாரம் செய்வதற்காக "இந்துசாதனம்" என்ற பத்திரிகையையும் தோற்றுவித்தனர்.

ஆறுமுகம் (1983) அவர்கள் பல கோணங்களிலிருந்தும் நசுக்கப்பட்ட சைவக் கல்வியின் புத்தெழுச்சிக்கு வழிகாட்டியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாவலர் தனது பணியினை ஆரம்பித்தார் என்றும் நாவலரது அடியொன்றிச் சமயக் கல்வி, கலாசாரத் துறைகளில் சேவையாற்றும் இயக்கமாகச் சைவபரிபாலன சபை இயங்கியது என்றும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*சைவபரிபாலன சபையின் தோற்றத்தின் பின்னர் 1889ஆம் ஆண்டில் அப்புக்காத்து நாகலிங்கம், திருவாளர் பசுபதிச் செட்டியார், புறக்டர் காசிப்பிள்ளை, கௌரவ சபாபதி முதலானவர்கள் சேர்ந்து யாழ்ப்பாண ஆண்களுக்கென இந்துக்கல்லூரியை ஆரம்பித்தனர். ஆண்களுக்கு மட்டுமல்ல யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கும் சைவமரபில் கல்வி கற்கக்கூடிய வகையில் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் சேர்.பொன். இராமநாதன் அவர்களுக்கு ஏற்பட்டமை யாழ்ப்பாணப் பெண்கள் கல்வி வளர்ச்சியின் முக்கியபடி ஆகும்.*

*சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் முதன் முதலாக யாழ்ப்பாணத்திற் சைவப் பெண்களுக்கு என்று ஒரு கல்லூரியை நிறுவினார். முதலில் இக்கல்லூரியைக் கோப்பாயிலே தாபிக்க எண்ணி அங்கு 25 ஏக்கர் நிலத்தை வாங்கினார். பின்னர் பலர் கோப்பாயிலும் பார்க்க மருதனார்மடமே பொருத்தமான இடம் என எடுத்துக் காட்டியமையால் அங்கு 15 ஏக்கர் நிலத்தை வாங்கினார். மருதனார்மடத்தில் பெண்கள் கல்லூரியை தாபிப்பதற்கான முயற்சி களை மேற்கொண்டவேளை உடுவிற் பெண்கள் பாடசாலைக்கு அணித்தாக இப்பாடசாலை அமைவது கிறிஸ்தவக் கல்விக்கு பிரச்சினையை ஏற்படுத்தலாம் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இதற்கு இராமநாதன் அவர்கள் மிக ஆணித்தரமாக 1910ஆம் ஆண்டு ஏப்பிரல் 10ஆம் திகதி வணஸ்கொட் பாதிரியாருக்கு எழுதிய கடிதத்தில் இந்துப் பெண்கள் கல்லூரியின் அவசியத்தை சுட்டிக் காட்டிய பொழுது "கிறிஸ்தவ பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலை களிற் படிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சைவப் பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடத்திற் படிப்பது" எனக் குறிப்பிட்டார் (அம்பிகைபாகன்,1972).*

*இராமநாதன் அவர்களின் விடாமுயற்சியினால் 1913ஆம் ஆண்டு தைமாதம் 20ஆம் திகதி முதல் மருதனார் மடத்தில் சைவத் தமிழ்ப் பெண்களுக்கென இராமநாதன் கல்லூரி இயங்கத் தொடங்கியது. அறிவுத்திறனும், அறநெறியும், சமயப்பண்பும் ஒன்றிணைந்த மகளிர் மூலமே தமிழ் நெறி மரபும், சைவநெறி மரபும்*

இணைந்து, இந்துக்கல்வி மரபு வளர்ச்சி அடைந்து, புதமெருகு பெறும் நாடு வளர்ச்சியுறும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இராமநாதன் கல்லூரி எனலாம். 07.02.1913இல் வெளியான இந்து ஓகன் பத்திரிகை இராமநாதன் கல்லூரியின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடுகையில் இக் கல்லூரியின் ஆரம்பம், தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கும். இலங்கை இந்து மக்கள் தம்வாழ் வில் என்றும் நினைவிலிருத்தும் தினம் எனக் குறிப்பிட்டது (சந்திரசேகரம்,1987).

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட பெண் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் பணி சிறப்புத்தன்மை வாய்ந்ததாகும். சாதாரண மாணவியாக இருந்து பெண்கள் கல்வி கற்பதை அதிகம் வரவேற்காத யாழ்ப்பாணச் சமூகச் சூழ்நிலையில், கல்வி மரபில் பெண்கள் உயர்கல்வி பெற வேண்டும், ஆசிரியர்களாக இருக்கவேண்டும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக தொழிற்பட வேண்டும் என்ற சிந்தனையின் அடிப் படையில் பெண்கல்விக்காக இவர் தனது பணியினை ஆற்றியமை பெண்கல்வி வளர்ச்சியின் பொற்காலம் ஆகும்.

சந்திரசேகரம் (1987) "இராமநாதனின் கல்விச் சிந்தனைகளுக் கும் கல்விப் பணிகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. அவர் நிறுவிய சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையும் அதன் உறுப்பாகிய பயிற்சிப் பாடசாலையுமாகும். இலங்கையில் முதன் முதல் நிறுவப்பட்ட சைவப் பெண்களுக்கான ஆசிரிய கலாசாலை இதுவாகும். சைவப் பெண்கள் சைவச் சூழலில் ஆசிரியராக உருவாக்கப்பட்டு தேசிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் சமுதாயப் பங்களிப்பை ஆற்ற வேண்டுமென்பது அவரது முடிவாகும்" எனச் சுட்டிக்காட்டினார். இதன்படி 1926 ஆம் ஆண்டின் இறுதியில் இராமநாதன் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு பெண்களின் நீண்டநாட் கல்வித் தேவை பூர்த்தியாக்கப்பட்டது எனலாம்.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். யாழ் நகரச் சூழலில் வாழும் சைவப்பெண்களுக்கு சைவசமயச் சூழலிலே கல்வியைக் கற்கக்கூடிய வசதிகளை வழங்க வேண்டுமென்பது சுதேசிகளின் நெடுநாளைய அவாவாக இருந்தது. இவ் அவாவை பூர்த்தி செய்வதற்குச் சைவசமய வளர்ச்சியிலும், சைவப் பெண்களின் கல்வி மேம்பாட்டிலும் மிகவும் ஆர்வத்துடன் விளங்கிய திருமதி.விசாலாட்சி அம்மாள் சிவகுருநாதர் மனமுவந்து முன்வந்தார். தன்னுடைய சீதனமான "நடுத்தோட்டம்" என்ற 24 பரப்புக் காணியை 1941ஆம் ஆண்டில் இதற்காக வழங்கினார். ஒரு பெண்ணே பெண்களுக்கான கல்வியை ஆரம்பிக்க காரணமாக அமைந்தமை பெண்கள் கல்வி வளர்ச்சியின் முக்கியமான ஒரு காலகட்டம் எனலாம். மனைவியாரைத் தொடர்ந்து கணவர் திரு.இராமலிங்கம் சிவகுருநாதர் தனது முதுசப் பாகமாகிய 16 பரப்புக் காணியையும் அக்காணியில் இருக்கும் "இராஜவரோதய பிள்ளையார்" ஆலயத்தையும் சேர்த்து பெண்கள் கல்விக்காக தர்மம் செய்தார். அவருடைய பெறாமகள் திருமதி வள்ளியம்மாள் சிவகுரு தனது பாகத்தையும் இப்பணிக்காக வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துக் கல்லூரி 1943ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கல்லூரி முதலில் யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்குக் கிழக்கே வசித்த பெரியார் திரு.சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் "பொன்னாலயம்" என்னும் அழகிய இல்லத்தில் முதன்முதலாக இயங்கத் தொடங்கியது (பொன்விழா மலர்,1993). எட்டு ஆசிரியர்களையும் நூற்றிப்பத்து மாணவிகளையும் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் மாணவர் தொகை கால வளர்ச்சியுடன் அதிகரித்து இன்று மணிவிழா காணும் நிலை எய்தி யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். வைத்திய

கலாநிதி க.சபாபதி அவர்களின் எண்ணத்திலே 1930ஆம் ஆண்டள வில் இந்துப் பெண்களுக்காக வடமராட்சியில் ஒரு பெண்கள் பாடசாலை உருவாக வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. 1944ஆம் ஆண்டு பங்குனி மாதம் மூன்றாம் திகதி இத்தகைய நல்லெண்ணம் கொண்ட 11 பேரின் முயற்சியினால் திருவாளர் மு.கார்த்திகேசு அவர்களுடைய இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது (பொன்விழா மலர்,1994). இவரே பாடசாலை அதிபராகவும் செயற்பட்டார். 46 மாணவர்களுடன் ஆரம்பமான இக்கல்லூரி 1994ஆம் ஆண்டு பொன்விழாக் கண்டு சைவப் பெண்களின் அறிவு வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வருகின்றது.

நாவலரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சுதேசக் கல்விச் சிந்தனையானது நல்லெண்ணம் கொண்ட பல பேரையும் ஈர்த்தமையால் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. பிரித்தானியரின் காலத்தில் மிசனரிகளால் ஆரம்பமான பெண்கள் பாடசாலைகளிலும், சுதேசிகளால் ஆரம்பமான பெண்கள் பாடசாலைகளிலும் மற்றும் பல கலவன் பாடசாலைகளிலுமாக யாழ்ப்பாணப் பெண்கள் பல வழிகளில் தங்கள் கல்வி அறிவை வளர்க்கக் கூடிய நிலை உருவாகியமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் உருவான இளைஞர் காங்கிரஸ் "சம ஆசனம், சம போசனம்" போன்ற கொள்கைகளை முன்வைத்து யாழ்ப்பாண சமூக அமைப்பிலே காணப்பட்ட சாதி முரண்பாடுக ளுக்கு எதிராக செயற்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. இதனால் சாதியமைப்பிலே தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கும் அடிப்படைக் கல்வி கிடைப்பதற்கு வழி கிடைத்தது.

தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுடைய மேம்பாட்டிற்காக 1942ஆம் ஆண்டில் "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையினரின் சீர்திருத்த நடவடிக்கைகள் கால வளர்ச்சியோடு வளர்ந்து வந்தமையால் யாழ்ப்பாணச் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த மக்கள் கூட்டத்தினரும் கல்வி கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இந்த வாய்ப்பு தாழ்த்தப்பட்ட பெண்களுக்கும்

கிடைக்கக் கூடியதாக இருந்தது. இதனால் சாதி அடிப்படையில் கட்டுண்டு கிடந்த யாழ்ப்பாண சமூக அமைப்பில் ஓரளவு தளர்ந்த நிலை ஏற்பட்டு எல்லோரும் கல்வி கற்று முன்னேற வேண்டுமென்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது.

இலங்கையின் கல்வி வரலாற்றிலே 1945ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஓர் ஆண்டாகும். உலகின் ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் எங்கு தானும் காணப்படாத தனித் தன்மை பொருந்திய இலவசக் கல்வி முறை C.W.W. கன்னங்கரா அவர்களினால் சட்டசபையில் முன்வைக்கப்பட்டு சட்டமாக்கப் பட்டது. இதனாலேற்பட்ட செலவு அதிகமாயிருந்த போதிலும் பணக்காரர், ஏழைகள் என்ற பேதமின்றி ஒவ்வொரு பிள்ளைக்கும் தன்தன் திறமைக்கேற்பக் கல்வி பெறும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது (கல்வி நூற்றாண்டு மலர், 1969). இந்த வகையிலே யாழ்ப்பாண மாணவர்களும் குறிப்பாக பெண்களும் பல வசதிகளைப் பெற்று கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்பினை அடைந்தனர்.

1948ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திர நாடாக மாறியது. சுதந்திரம் பெற்ற பின்னரும் தொடர்ந்து வந்த காலங்களில் அந்நியர்களால் குறிப்பாக பிரித்தானியர்களால் இடப்பட்ட அத்திவாரத்தின் மேல் தொடர்ந்து நிறுவன ரீதியான பாடசாலை அமைப்பை உள்ளடக்கியதாக இலங்கை தன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இலங்கையின் தேசிய கல்விச் சிந்தனைகளும் அதனையொட்டியதாக உருவாக்கப் பட்ட தேசிய கல்விக் கொள்கைகளும் யாழ்ப்பாணத்து மக்களின் கல்விச் செயற்பாடுகளிலும் செல்வாக்குச் செலுத்தின. இந்தத் தேசிய கல்விக்கொள்கைகளே யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி நடவடிக்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தக் காரணங்களாக அமைந்தன. தேசியக் கல்வி தனது உயர்ந்த நோக்கமாகக் கொண்டிருப்பது தனிப்பட்ட ஒவ்வொரு குடிமகனும் தமது உயர்ந்த பண்பினை தேசத்தின் மேலான நன்மை கருதி வழங்கவேண்டும் என்பதாகும்.

தேசிய கல்விச் சிந்தனைகள் பொதுவாக நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டு ரீதியான வளர்ச்சிக்கு உதவுகின்ற அதேவேளை, நாட்டுக்குள்ளே பிரதேச ரீதியாகக் காணப்படும் விசேட பண்பாடு, கலை, கலாசாரம், பொருளாதார நடைமுறைகள், சமூக உறவுநிலைகள் என்பவற்றை வளர்த்தெடுக்கவும் உதவுதல் வேண்டும். பிரதேசத்திற்குரிய விசேட பண்பினை வளர்த் தெடுப்பதன் மூலம் பிரதேச ரீதியாக எழுகின்ற வாழ்வியல் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக தேசியக் கல்விக் கொள்கைகள் அமைதல் வேண்டும்.

# 6

# ஆய்வின் ஒன்று கூட்டிய தொகுப்பு

கல்வி மனிதனைப் பூரணமடையச் செய்கின்றது. இந்த வகையில் மனிதனை முழுமையடையச் செய்வதில் கல்வியின் முக்கியத்துவம் அறியப்பட்ட விடயமாகும். கல்வி மனிதனை முழுமை அடையச் செய்வதனால் ஆண், பெண் என்ற பால் வேறு பாடு இன்றி கல்வியை, வாழ்க்கையில் இருபாலாரும் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது.

மனிதன் சமூகப்பிராணி என்ற வகையில் சமூகத்தின் பண்பாடு, கலை, கலாசாரம், மரபுகள், சம்பிரதாயங்கள், எழுத்துருப் பெறாத சமூகச்சட்டங்கள், கட்டுப்பாடுகள், வாழும் பிரதேசத்தின் வழமை கள் என்பவற்றின் கட்டுப்பாட்டிலிருந்து, மனிதன் முழுமையாக விடுபட்டு வாழ முடியாதவன். இந்த வகையிலே சமூகமானது ஆண்களை விட பெண்களுக்கு மேலதிகமான பல கட்டுப்பாடுகளை வைத்திருந்தது என்பதை விசேடமாக யாழ்ப்பாணத்தின் பண்டைய சமூகத்தின் கட்டுக்கோப்புகளின் வாயிலாக அறிய முடிந்தது.

யாழ்ப்பாண மன்னர்கள் தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளில் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி கல்வியை வழங்க வசதி களைச் செய்து கொடுத்துள்ளனர் என்ற நற்செய்தியை அறியக் கூடியதாக இருந்தது.

ஒழுங்குபடுத்தப்பட்ட நவீன கல்வி நிறுவன வடிவங்களை ஒத்த காட்டுருக்கள் யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வியிலே காணப்படாவிடினும் அறிகைசார் கல்வி, எழுச்சிசார் கல்வி, உடலியக்கம்சார் கல்வி முதலியவற்றைப் பெண்களுக்கு

வழங்குவதற்கான வினைத்திறன் பொருந்திய செயலமைப்புத் தொகுதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமைக்குப் பரவலான சான்றுகள் உள்ளன.

பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கள் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் கட்டுப்பட்ட ஒன்றாகவே இருந்தது என்பது பண்டைய யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொண்ட நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவே உள்ளது. பொதுவாகப் பண்டைய யாழ்ப்பாணச் சமூகம் அவளைப் பெண்மைக்குரிய குணங்களுடன், குடும்ப எல்லைக்குள் வளர்த்தெடுக்கவே விரும்பியது என்பதை நன்கு அறியக்கூடியதாக இருந்தது. இக்கட்டுப்பாடுகள் பெண்ணின் குடும்ப நன்மை கருதியதாக இருந்ததே ஒழிய, அடிமையாகப் பெண்ணை என்றுமே யாழ்ப்பாணச் சமூகம் எண்ணவில்லை என்ற முடிவுக்கே வரவேண்டியதாக உள்ளது. ஆனால் யாழ்ப்பாணச் சமூகத்திலே காணப்பட்ட சாதியமைப்பு கல்விவாய்ப்புக்களில் ஏற்றத்தாழ்வுகளைக் குலத்துக்குரிய தொழிலின் அடிப்படையில் ஏற்படுத்தியது என்பதை ஏற்கவேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான கல்வி முறையிலே ஆண்களைப் போன்று ஒரு குருவை நாடிப் பெண்கள் கல்வி கற்க முடியாதவர்களாக இருந்தாலும், கேள்வி ஞானத்தினாலும், குடும்பக் கடமைகளின் ஈடுபாட்டினால் வளர்க்கப்பட்ட திறன்களினாலும், இந்துப் பாரம்பரியத்திற்கு உரிய சமய வழிபாட்டினாலும் பெண்கள் குருவை நாடாமலேயே பலவகையான அறிவுகளைப் பெற்று தம்மை வளர்த்துக்கொண்டவர்களாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். வீட்டின் தேவைகள், தோட்டவேலைகள், பசு வளர்ப்பு, சமய ஈடுபாடு போன்ற செயற்பாடுகள் இயல்பாகவே பெண்களின் அறிவை வளர்க்க காரணமாயிற்று. அதாவது சமய ஈடுபாட்டினால் புராணப்படிப்பு, மாலை கட்டுதல் போன்ற அறிவினை வளர்த்துக்கொண்டனர். வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் வகையில், சமயற்கலை, பன்னவேலை, குழந்தை வளர்ப்பு, மருத்துவ அறிவு என்பவற்றையும் வளர்த்துக் கொண்டனர். வீட்டைப்

பாதுகாத்தல், அழகுபடுத்தல் என்ற வகையிலும், ஆடல், பாடல் போன்றவற்றிலும் சிறந்து விளங்கி வீட்டுச் சூழ்நிலைக்குள்ளேயே பெண் தன் அறிவை வளர்த்தெடுத்தமை பெருமைக்குரிய விடயம் ஆகும்.

பெண் குடும்பச் சூழ்நிலையிலேயே தன் அறிவை வளர்த்தெடுத்து, அறிவைப் பெற்ற பின்னரும் யாழ்ப்பாணச் சமூகம் குடும்பம் என்ற எல்லைக்குள்ளேயே பெண்ணின் உரிமைகளையும், கடமைகளை யும், வரையறுத்து இருந்தது. இதனால் பண்டைய யாழ்ப்பாணச் சமூகத்திலே ஆண்கள் முயற்சியாளர்களாகவும், பெண் தங்கி வாழ்பவளாகவும் வாழவேண்டி ஏற்பட்டது. இருப்பினும் குடும் பத்தை நடாத்துவதில் "தாய்" மிகப் பிரதான பங்கு எடுத்தமையை நன்கு அறியக்கூடியதாக உள்ளது.

மேலைத்தேயத்தவர்களாகிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலங்களில், பெண்களின் கல்வி நிலைமைகளில் படிப்படியாக முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட் டமை அறியப்பட்டது. ஆங்கிலேயரின் காலங்களில் இலங்கைக்கு வருகைதந்து கல்விப் பணிகளில் ஈடுபட்ட மிசனரிகள் போன்று, சைவசமயத்தின் மறுமலர்ச்சி மற்றும் யாழ்ப்பாணப் பாரம்பரியத் தின் மறுமலர்ச்சி ஆகிய செயற்பாடுகளினால் யாழ்ப்பாணத்தவர் களும் நிறுவன ரீதியாகப் பெண்களின் கல்வியை வளர்த்தெடுக்க முயற்சித்தமை யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அம்சம் எனக் கண்டுகொண்டோம்.

கல்வியில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் காரணமாக, யாழ்ப்பாணத்தில் சமூக அந்தஸ்தானது பொருளாதார வளத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படாமல், பெற்ற கல்வியின் தரத்தையும் இணைத்த வகையில் தீர்மானிக்கப்பட்டமையால் யாழ்ப்பாணத்தின் சமூகச் செல்வாக்கிலே ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லாத வகையில் கல்வி பெற்ற முக்கியத்துவத்தின் சிறப்பினைக் கண்டு கொண்டோம்.

மனித வாழ்க்கையின் முன்னேற்றத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதினால் பெண்கள் தொடர்பான

ஆய்வுகளை மேலும் மேற்கொள்ளுதல் வேண்டும். நவீன பெண்களைப் போன்று பாரம்பரியச் சூழலிலே வாழ்ந்த பெண்களும் அக்கால சூழ்நிலைக்கு ஏற்ற வகையிலே திறம்பட செயற்பட்டு உள்ளனர் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொண்டோம். எனவே பெண்கள் தொடர்பான பாரம்பரிய ஆய்வுகள் கல்வி மற்றும் சமூகசேவை, குடும்பச் சிறப்பு என்ற வகையிலே முன்னெடுக்கப் படுதல் பாரம்பரிய பெண்களின் சிறப்புக்களை மேலும் மேலும் அறிய உதவும்.

எமது பண்டைய பெண்கள் எவ்வாறு குடும்பம், சமயம், பண்பாடு, கலை, கலாசாரம், சமூகம் என்ற பல்வேறு கோணங்களிலும் விதிக்கப்பட்ட கட்டுக்கோப்புகளுக்கு உட்பட்ட வகையில் வாழ்ந்து சிறப்பித்தனர் என்பதை எமது இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டுவதற்கு இத்தகைய பண்டையகால ஆய்வுத் தேடல்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் இன்றியமையாதவை ஆகும்.

# உசாத்துணைகள்


தமிழ் நூல்கள்

அம்பிகைபாகன். க.,(1972), *ஆங்கிலேயராட்சியிலே யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சி, பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர்*, நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு.

ஆறுமுகம். வ., (1983), நாவலர் பாதையில் சைவபரிபாலன சபை, *கலைஞானம்3*, 1982-1983, கல்விக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆறுமுகம். வ. (1995), யாழ்ப்பாணத்தின் சைவக்கல்வி மறுமலர்ச்சியின் பரிணாமங்கள், *அபிஜ்ஞான மாலா*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்து இளைஞன் (1965), யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஜெபநேசன்.எஸ் (1983), *அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்*, யாழ்ப்பாணக் கல்லூரி.

கண முத்தையா.(1949), *வால்காவிலிருந்து கங்கை வரை*, (தமிழில்), மூலம்: ராகுல சாங்கிருத்தியாயர், முதற் பதிப்பு, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.

கல்வி நூற்றாண்டு மலர், (1969), *இலங்கையிற் கல்வி பகுதி I*, கல்வி கலாசார அலுவல் அமைச்சு.

கல்வி நூற்றாண்டு மலர், (1969), *இலங்கையிற் கல்வி பகுதி II*, கல்வி கலாசார அலுவல் அமைச்சு.

கனகரத்தினம்.வை.இரா., (1985), ஈழநாட்டிற் புராணபடனச் செல்வாக்கு, *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்*, மணிவிழாச்சபை வெளியீடு.

சதாசிவம். ஆ.,(1966), *ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்*, சாகித்திய மண்டல வெளியீடு.

சபா ஜெயராசா.(1988), *சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி*, முதற் பதிப்பு, அபிவிருத்தி நிறுவன வெளியீடு, இலங்கை.

சித்திரலேகா மௌனகுரு, (1993), *பெண்நிலைச் சிந்தனைகள்*, பெண்கள் கல்வி ஆய்வு நிலையம், கொழும்பு.

சிவத்தம்பி. காத்திகேசு.(1994), *தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும்*, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்.

சிவத்தம்பி. காத்திகேசு (1995), *யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு*, ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம், சுதந்திர இலக்கிய விழா வெளியீடு *1*.

சிவலிங்கராஜா, எஸ். (1983), யாழ்ப்பாணக் குடாநாட்டில் 19ஆம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரிய கல்விமுறை, *சிந்தனை, தொகுதி I*, இதழ் II, ஆடி.

சிறி கைலாஜினி சகாயராஜா. (1993), *சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் யாழ் நகர சமூகமும்*, பட்டப்பின் கல்வித் தகைமை நெறிக்கான பகுதித் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சின்னசாமி புலவர்.தே.ப. (1991), *விவேக சிந்தாமணி மூலமும் உரையும்*, முதற் பதிப்பு, சரசு பதிப்பகம், சென்னை.

செல்வி திருச்சந்திரன் (1997), *தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு*, முதற் பதிப்பு, குமரன் பதிப்பகம், கொழும்பு - சென்னை.

நடராசா, க.செ., (1982), *14ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, தமிழ்ச் சங்க வெளியீடு, கொழும்பு.

நூற்றாண்டு விழா மலர் (1978), புலோலியூர் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார்.

பரமசிவானந்தன்,அ.மு. (1995), *பெண்*. தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை.

பிரான்சிஸ், யோசப், ஜி. ஏ., (1984), ஈழத்துத் தமிழ்க் கல்வி மரபு, *ஈழநாடு*, 25.03.1984.

பிளேவியா அக்னிஸ், (1993), *பெண் விடுதலையும் காகிதச் சட்டங்களும்*, விடியல் பதிப்பகம், கோவை.

பொன்விழா மலர் (1943-1993), யாழ் இந்து மகளிர் கல்லூரி.

பொன்விழா மலர் (1944-1994), வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

மாதவையா. அ., (1958), *பத்மாவதி சரித்திரம்*, ஏழாம் பதிப்பு, லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. (1982), *யாழ்ப்பாணக் குடியேற்றம்*, (ஆதிகாலம் தொடக்கம் ஒல்லாந்தர் காலம் முடியும் வரை), புலவரகம், மயிலணி, சுன்னாகம், இலங்கை.

முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ,.(1933). *யாழ்ப்பாணச் சரித்திரம்*, நாவலர் பிரசுராலயம்.

வள்ளிநாயகி இராமலிங்கம் *(1989)*, யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம், *தங்கை*, தை மாதம்

வேலுப்பிள்ளை, சி. டி.*(1984)*, *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்*, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

**ஆங்கில நூல்கள்**

Edmund Piris, The Sisters of Holy Family in Sri Lanka Methodist Church.

Harrison M.H. (1925), *Uduvil – First Hundred Years*

Kumari Jeyawardena (1986), ***Feminism and Nationalism in the Third World***, 1st Reprint, ZED Books Ltd, London and New Jersey.

Ragavan, M.D.(1962), ***Tamil Culture in Ceylon***, kalainilayam Limited, Colombo.

Ranjit Reberu, (1962), ***Education in Colonial Ceylon***, Kandy Printers Ltd.

Scowofort Elise, (1938), At the Foot of the Vembu Tree, ***A History of the Vembadi School for the past hundred years***, Santiagopillai Press, Colombo.

Small. W.J.T. ( 1961 ), ***A History of the Methodist Church in Ceylon***, 1814-1960, Wesly Press, Colombo.

*நேர்காணல்கள்*

*அ.வை கதிர்காமநாதன் உபாத்தியார், இளைப்பாறிய அதிபர், இணுவில், 14.12.1997.*

*சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இணுவில். 18.12.1997.*

*திருமதி கோகிலா மகேந்திரன், அதிபர், தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, 20.12.1997.*

*ஆசிரியமணி அ. பஞ்சாச்சரம், இளைப்பாறிய அதிபர், உரும்பிராய், 22.12.1997.*

*வித்துவான் க. சொக்கலிங்கம், இளைப்பாறிய அதிபர், நாயன்மார்கட்டு, 21.12.1997.*



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்ற கலாநிதி சசிகலா குகமூர்த்தி அவர்கள் கல்வித்துறையில் சுமார் மூன்று தசாப்தகால அனுபவத்ததைக் கொண்டவராவார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற இவர் ஆசிரியர் பணியில் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியில் தமது சாதனைக்காக தங்கப்பதக்கத்துடன் கூடிய டிப்ளோமாவினையும் அதே பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் புலமைப்பரிசிலைப் பெற்று தமிழ்நாட்டின் அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்வியில் ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவராவார்.

இலங்கையிலும் இந்தியா, மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் கல்வி மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றி பல ஆய்வுக்கட்டுரைகளை வாசித்துள்ள இவர் இன்று கல்வித்துறையில் நம்பிக்கையூட்டும் ஆய்வாளராகப் பரிணமித்துள்ளார்.

கல்விக் கருத்தரங்குகளில் வளவாளராகப் பங்குபற்றியும் சஞ்சிகைகளில் தொடர்ச்சியாகக் கல்விசார் கட்டுரைகளை எழுதியும் வருகின்ற கலாநிதி சசிகலா குகமூர்த்தி அவர்கள் தனது முதுதத்துவமாணிப் பட்டத்துக்கான ஆய்வை இந்த நூல் வடிவில் வெளியிடுவது பாராட்டுக்குரியது மாத்திரமின்றி தமிழ் அறிவுப்புலத்தின் மேம்பாட்டுக்கு அவரது இன்னுமொரு சீரிய பங்களிப்புமாகும்.

தை. தனராஜ்

ISBN 978- 955- 685- 017- 8

சேமமடு பதிப்பகம்

விலை:260.00

CBCN: 2012-12-04-118